
1-15 ஜனவரி 2002 www.padippakam.com ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



## போலீசு வெறியாட்டம் மாணவர் போராட்டம்




படிப்பகம்

www.padippakam.com

# ''பொடோ''வைத் தகர்ப்போம்!
# — புரட்சிகர அமைப்புகள் நடத்திவரும் ஆர்ப்பாட்டங்கள்

இந்து மதவெறி பாசிசத்தை நிறுவவும், மறுகாலனியாதிக்கத்தை எதிர்க்கும் ஜனநாயகச் சக்திகளை ஒடுக்கவும் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டிருப்பதுதான் ஆள்தூக்கி ''பொடோ'' சட்டம். மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தங்கள் அமைப்பு செயல்படும் பகுதிகளில், இச்சட்டத்தை முறியடிக்க தெருமுனை கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், பேரணி, ஆர்ப்பாட்டம் என பல வடிவங்களில் உழைக்கும் மக்களிடம் வீச்சான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகின்றன.

✱ ஈரோட்டில் நவம்பர் 30-ஆம் தேதியன்று நகர சபை அலுவலகம் முன்பு பு.மா.இ.மு.வினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் எலும்புக் கூடு தலையுடன், வாயில் எலும்புகளைக் கடித்தபடி, ''பொடோ'' அரக்கனை உருவகப்படுத்தி தோழர் ஒருவர் வேடமிட்டு வலம் வந்தது மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. பொடோ எதிர்ப்பு பேரணிக்கு தடை விதித்து, ஆர்ப்பாட்டத்துக்கு மட்டும் போலீசு அனுமதி அளித்திருந்த போதும் பொதுமக்கள் திரளாக கூடி ஆதரவளித்தனர்.

✱ திருவெண்ணெய் நல்லூர் வட்டார வி.வி.மு.வினர் 26.11.2001 அன்று ''பொடோ''வைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். விழுப்புரம் - கடலூர் மாவட்டங்கள் சார்பாக பண்ருட்டி பேருந்து நிலையம் எதிரில் மாலை 4 மணிக்குத் தொடங்கிய ஆர்ப்பாட்டத்தில் பொடோ சட்டம், அமெரிக்காவின் பயங்கரவாதம், இந்திய அரசின் தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை எதிர்த்து விண்ணதிர முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பகுதி கலைக் குழுவினர் நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சிகள் மக்களைக் கவர்ந்தன.




# தஞ்சையில் கள்ளச்சாராய ரவுடிகளின் அடாவடித்தனம்
# துணை போகும் காவல்துறை
# தரகு வேலை செய்யும் சி.பி.எம்!

தஞ்சை பூக்காரத் தெரு, போலீசின் ஆசியுடன் கள்ளச் சாராயக் கோட்டையாக இருந்து வருகிறது. ஆனால் போலீசோ சமீபத்தில் கள்ளச் சாராயத்தை ஒழிக்க பொது மக்கள் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று துண்டு பிரசுரம் அடித்து ஊரில் விநியோகித்தது. ஏதோ பொதுமக்கள்தான் கள்ளச் சாராயக் கும்பலைக் காட்டிக் கொடுக்காமல் மறைத்து வைத்துப் பாதுகாப்பது போல் போலீசு நடந்து கொண்டது அயோக்கியத் தனம்தான். அதைவிட அயோக்கியத்தனம் போலி கம்யூனிஸ்டுகள் போலீசுக்கும் கள்ளச் சாராய கும்பலுக்கும் தரகு வேலை செய்வதுதான்.

பூச்சந்தை பகுதியில் சாராய கும்பலின் அனுமதியுடன்தான் சாதாரண மக்கள் மூச்சு கூட விட முடியும். கள்ளச் சாராயத்தை யார் வீடுகளிலும் அத்துமீறி நுழைந்து பதுக்கி வைக்கலாம்! யாரும் கேள்வி கேட்க முடியாது; கேட்டால் உதைதான். இந்த நரகத்திலிருந்து தப்பித்தால் போதுமென்று காலி செய்து ஓடிப்போன குடும்பங்களும் உண்டு. காலிகளால் விரட்டப்பட்ட குடும்பங்களும் உண்டு. இத்தெருவில் நாட்டாமையாக உள்ள சி.பி.எம்-மின் வட்ட செயலாளர் கருணாநிதியும், நகர செயலாளர் ஞானமாணிக்கமும் கள்ளச் சாராய கும்பலோடு கூடிக் குலாவி வருகின்றனர்.

'போலி கம்யூனிஸ்டுகளின் அரசியல் பலம், போலீசின் கூட்டு ஆகியவற்றுடன் நடந்துவரும் இக்கள்ளச் சாராய வியாபாரத்தை போலீசிடமே மனு கொடுத்து ஒழிக்க முடியாது; மக்கள் ஓரணியில் திரண்டுதான் வீழ்த்த முடியும்' என்று பு.மா.இ.மு. தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறது. கடந்த நவம்பர் எட்டாம் தேதி இக்கள்ளச் சாராயக் கும்பலின் பின்னாலிருக்கும் துரோகிகளை அம்பலப்படுத்தும் முகமாக பொதுக் கூட்டத்தையும் பு.மா.இ.மு.வினர் நடத்தினர். கூட்டத்திற்கு சி.பி.எம். நகர செயலாளர் ஞானமாணிக்கம் பத்து அடியாட்களுடன் வந்திருந்தார்.

பொதுக் கூட்டத்தில் பேசிய தோழர் தமிழ்ப்பாண்டி, ''ஞான மாணிக்கம் கட்சி அலுவலகத்தில் இருந்த நாட்களை விட கள்ளச்சாராய ரௌடிகளின் வீட்டில் இருந்த நாட்கள்தான் அதிகம். கடந்த ஐந்து ஆண்டுகளில் இன்றுதான் சிவப்புத் துண்டு போட்டிருக்கிறார். அதோ நிற்கிறார் பாருங்கள் அவர்தான்'' என்று கை நீட்டி பொது மக்களிடம் அடையாளம் காட்டினார். உடன் ஆவேசமடைந்து தனது அடியாட்களுடன் கூச்சல் போட்ட ஞானமாணிக்கம், தோழர்கள் தயார் நிலையில் இருப்பதைக் கண்டு ஓட்டம் பிடித்தார்.

இப்பொதுக் கூட்டத்திற்கு பிறகு கள்ளச் சாராயத்தை முற்றாக ஒழிக்க மக்களை அணிதிரட்டி வருகிறது பு.மா.இ.மு., கடலூரில் கள்ளச்சாராயத்துக்கு எதிராகப் போராடி தமது உயிரையே இழந்துள்ளார் சி.பி.எம்.மில் இருந்த ஒரு இளந் தோழர். இன்றோ, தஞ்சை சி.பி.எம். நகரச் செயலாளர் கள்ளச் சாராய கும்பலுக்கும் போலீசுக்கும் காவடி எடுக்கின்றார். நாயும் பிழைக்குமோ இந்தப் பிழைப்பு?

**தகவல்:**
**பு.மா.இ.மு., தஞ்சை.**



படிப்பகம்

www.padippakam.com


**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 17**

**இதழ் 3-4**

16 டிச.2001-15 ஜன.2002

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(ஏான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# பாக். மீது போர்: பயங்கரவாதத்தை ஒழிக்குமா?

புதுடெல்லி நாடாளுமன்ற நுழைவாயில்களில் டிசம்பர் 13-ஆம் நாள் நடந்த தற்கொலைக் குழுவின் பயங்கரவாதத் தாக்குதல் யாருமே எதிர்பாராத திடீர் சம்பவம் அல்ல. கடந்த செப்டம்பர் 11-ஆம் நாள் அமெரிக்காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து இந்திய நாடாளுமன்றத்தின் மீதும், இந்திய அரசுத் தலைவர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று இந்திய உளவுத் துறையும், ஆளும் கட்சியினரும் திரும்பத் திரும்ப கூறி வந்தனர். பயங்கரவாத பீதியூட்டி அரசியல் ஆதாயம் அடைவது வழக்கமாகிப் போய்விட்ட நிலையில், ஆளுவோரின் இத்தகைய கூச்சல் பெரும் பொருட்டாக மதிக்கப்படவில்லை. இதனால் நாடாளுமன்ற வளாகத்தில் நடந்த தாக்குதல் நாட்டு மக்களுக்கு ஓரளவு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால், ஆளும் பாரதீய ஜனதாவினரோ, இந்த அதிர்ச்சியைப் பேரதிர்ச்சியாக மாற்றுவதற்கான கடும் முயற்சியை மேற்கொண்டனர். இதைச் செய்வதில் அவர்கள் காட்டிய ஆர்வம் இப்படி ஒரு சம்பவம் நடக்க வேண்டுமென்று விருப்பத்தோடு காத்திருந்ததைப் போன்று தெரிகிறது.

தாக்குதல் நடந்த அடுத்த சில நாட்களைத் தேசியவெறி - போர்வெறியைக் கிளறிவிடப் பயன்படுத்திய - இந்து மதவெறி பாசிஸ்டுகளின் அரசு, அடுத்து பாகிஸ்தான் மீது போர் தொடுப்பதற்கான தயாரிப்புகளையும் செய்து முடித்து விட்டது. இராணுவத்தினரின் விடுமுறை இரத்து, குடியரசு தின அணிவகுப்பு இரத்து. நவீன ஏவுகணை உட்பட ஆயுதத் தளவாடங்களுடன் எல்லையில் இராணுவம் குவிக்கப்படுகிறது. பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் தமக்கே உரிய பாணியில் எல்லைப்புற மாநிலங்களில் மக்களைத் திரட்டுகின்றனர்; சம்பவம் நடந்த அன்றே அவசர அவசரமாகக் கூடிய மத்திய அமைச்சரவை. ''பயங்கரவாதிகளையும் அவர்களை உருவாக்கி இயக்குபவர்களையும், அவர்கள் எங்கிருந்தாலும், யாராக இருந்தாலும் ஒருதலைப்பட்சமாக இராணுவ நடவடிக்கை மேற்கொண்டு ஒழித்துக் கட்டுவோம்'' என்று தீர்மானம் நிறைவேற்றியது. அடுத்த இருநாட்களில் கூடிய பாரதீய ஜனதாவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம், ''பாகிஸ்தானில் பயங்கரவாதிகளுக்குப் பயிற்சியளிக்கும் முகாம்கள் மீது விமானக் குண்டு வீச்சுக்கள் நடத்தி அழிக்க வேண்டும். தொடர்ந்து அவசியமானால் ஆயுதக் கவச வாகனங்களையும் தரைப்படையையும் ஏவி விடவேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேற்றியது.

''ஆப்கானில் அமெரிக்கா என்ன செய்ததோ, பாலஸ்தீனத்தில் இசுரேல் என்ன செய்கிறதோ அதையே இந்தியாவும் செய்யவேண்டும்'' என்று பா.ஜ.க. தலைவர்கள் வலியுறுத்துகின்றனர். இப்படிச் செய்வதன் மூலம் உண்மையில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதக் குழுக்கள் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படுத்தும் பாதிப்பைவிட அதிகமான கேடுகளை பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான அரசு ஏற்படுத்துகிறது. முதலாவதாக, ஜியோனிச யூத மதவெறி பிடித்த இசுரேலுடனும் மேலாதிக்கப் போர்வெறி பிடித்த அமெரிக்காவுடனும் ''உலக பயங்கரவாத எதிர்ப்பு'' என்ற யுத்தத் தந்திரக் கூட்டணியில் இந்தியாவை இணைக்க முயலுகிறது. இப்படிச்செய்வது இந்த நாட்டையும் மக்களையும் மேலும் பல பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு நிரந்தர இலக்காக்குமே தவிர, பயங்கரவாதத்தை அழிப்பதாக இருக்காது. அமெரிக்காவோ, இசுரேலோ பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இலக்காவதில் இருந்து விடுபட முடிந்துள்ளதா? அணு ஆயுதத் தயாரிப்பு பாகிஸ்தானுடனான முரண்பாட்டுக்குத் தீர்மானகரமான, நிரந்தரமான தீர்வாகும் என்று கூறி, வாஜ்பாய் - அத்வானி கும்பல் ஈடுபட்டது. ஆனால், பாகிஸ்தானும் அணு ஆயுதத் தயாரிப்பில் இறங்கவே, ஆயுதக் குவிப்பும் - பகை முரண்பாடும் மேலும் தீவிரமடைந்து, உலக அரங்கில் இந்தியா தனிமைப்பட்டதுதான் கண்ட பலனானது.

பயங்கரவாதம், பிரிவினைவாதம், வகுப்புவாதம் ஆகிய பிரச்சினைகளில் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் நிலையையும் அவற்றுக்கான தீர்வாக தேசியவெறி - போர்வெறி - மதவெறி ஆகியவற்றையும் ஏற்காதவர்கள் அனைவரும் தேசவிரோதிகள் என்கிற பிரச்சாரத்தை அக்கும்பல் செய்து வருகிறது. இவற்றில் மாற்றுக் கருத்துள்ளவர்களை ஒடுக்குவதற்காக ''பொடோ'' போன்ற கொடிய ஆள்தூக்கி சட்டத்தை ஏவிவிடுகிறது. உண்மையில் இப்படிப்பட்ட அதிகாரபூர்வ பாசிச ஒடுக்குமுறைகள்தாம் பயங்கரவாதத்திற்கான விளைநிலமாக உள்ளன. 1980-களில் ''சர்வதேச பயங்கர்வாதத் தடுப்பு நடவடிக்கைகள்'' மீது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்குழு விவாதித்தது. தேசிய விடுதலை, தேசிய சுயநிர்ணய உரிமை, காலனிய, நிற - இனவெறி அரசுகளுக்கெதிரான போராட்டங்களின் போது எழும் பயங்கரவாதச் செயல்கள் ஏற்கத்தக்கவைதாம் என்று உலகின் நாடுகள் அனைத்தும் கருத்துத் தெரிவித்தன. ஆனால், அமெரிக்காவும், இசுரேலும் மட்டுமே இதற்கு எதிர்ப்புக் காட்டித் தனிமைப்பட்டன. அதாவது அரசு பயங்கரவாதம், ஆக்கிரமிப்பாளர்களின் பயங்கரவாதத்துக்கு எதிரான ''மக்கள்'' பயங்கரவாதம் சரியென்று உலகநாடுகள் கருதின. அரசு பயங்கரவாதம் மட்டுமே நியாயமானது என்றன, அமெரிக்காவும் இசுரேலும். இப்போது காசுமீர் சுயநிர்ணய உரிமையை எதிர்க்கிறது இந்திய அரசு. பாகிஸ்தான் அதைப் பயன்படுத்திக் கொண்டு, தனது ஆதரவு காசுமீர் பயங்கரவாதக் குழுக்களை ஏவிவிடுகிறது. இதற்கு காசுமீருக்கு சுயநிர்ணய உரிமை என்கிற ஜனநாயகபூர்வமான தீர்வு மட்டுமே தக்க பதிலடியாக இருக்க முடியும். இதுதான் அங்கு பயங்கரவாதத்தை வேரறுப்பதற்கான வழி. ●

www.padippakam.com

# கஜானா காலி:

# களவாடியது யார்?

''நாலு இட்லி சாப்பிட்டா அஞ்சு ரூவா ஆயிடும்னு, பட்டினியா வந்திருக் கோமய்யா. இப்படி அநியாயம் பண்றீங் களே!'' என அரசு மருத்துவமனைகளில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுவதை எதிர்த்து மதுரை அரசினர் மருத்துவமனை நுழைவாயிலில் கதறியிருக்கிறார் ஒரு பெரி யவர்.

இப்படிப்பட்ட அன்றாடங் காய்ச்சிகளி டமிருந்து அடித்துப் பிடுங்க வழிப்பறிக் கொள்ளைக்காரனுக்குக் கூட மனது வராது. ஆனால், இப்படிப்பட்ட கோடிக்கணக்கான ஏழை / நடுத்தர வர்க்க மக்களிடமிருந்து ஜெயா கும்பல், கட்டண - விலை உயர்வின் மூலம் கிட்டதட்ட 3500 கோடி ரூபாயை சட்ட பூர்வமாகக் கொள்ளையடிக்க முனைந்திருக்கிறது. 700 கோடி ரூபாய் பற்றாக்குறையை ஈடுகட்ட 3500 கோடி ரூபாய் பிடுங்குவதை, பகற்கொள்ளை என்ற கூறாமல் வேறு எப்படி சொல்ல முடியும்?

ரேசன் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், பால் விலை உயர்வு; மின்சாரம், பேருந்து, கல்லூரிக் கல்விக் கட்டண உயர்வு; அரசு மருத்துவமனை களில் நுழைவுக் கட்டணம்; சிகிச்சைக் கட்டணம்; சமையல் எண்ணெய், பனியன் உள்ளிட்ட சில பொருட்களின் மீது கூடுதல் வரி விதிப்பு - இவற்றின் மூலம் உழைக்கும் மக்களின் எந்தப் பிரிவும் தப்பித்துவிடாத படி இறுக்கிப் பிடித்து, தனது பகற்கொள் ளையை நடத்தத் தொடங்கி விட்டது தமி ழக அரசு.

இவற்றோடு, போலீசு தவிர பிற அரசுப் பணிகளுக்கு ஆளெடுப்ப தற்கு தடை விதித்திருப் பதன் மூலம் தமிழக இளை ஞர்களின் தலையில் பெருத்த இடியை இறக்கியி ருக்கிறது; சிக்கன நடவ டிக்கை என்ற பெயரில் 30 சதவீத அரசு ஊழியர்களை வேலையை விட்டுத் துரத்தப் போவதாகக் கூறி, அரசு ஊழியர்களின் தலைக்கு மேலே கத்தியைத் தொங்க விட்டிருக்கிறது.

கட்டணம் / விலை உயர்வின் மூலம் தமிழக மக்களிடமிருந்து 5,000 கோடி ரூபாயைக் கறந்துவிட முதலில் திட்டமிட்டது, ஜெயா கும்பல். இந்த முடிச்சுமாரித்தனத்திற்கு எதிராகத் தமிழக மக்கள் போராடத் தொடங்கிய வுடன், அவர்களின் கோபத்தைத் தணிப்ப தற்காக, அடிக்க நினைத்த கொள்ளையில் சலுகைகள் தருவதாகத் திமிரோடு அறிவித் தது.

பாசிஸ்டுகளுக்கே உரிய குணங்களான பொய், புளுகு, மோசடி, வாய்க் கொழுப்பு போன்றவை அனைத்தும் அ.தி.மு.க. கும்பலிடம் பொங்கி வழிகிறது. இந்தக் கட்டண / விலை உயர்வை நியாயப்படுத் துவதற்காக நிழல் முதல்வரான ஜெயா, ''தமிழக அரசின் கஜானா காலியாகி விட்டது; அதனால் தமிழக மக்கள் இந்தக் கசப்பு மருந்தை உட்கொண்டுதான் தீர வேண்டும்'' என்ற மோசடித்தனமான புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டிருக் கிறார்.

ஜெயாவின் தயவில் பொறுக்கித் தின்னும் அமைச்சர்களோ, ''நல்ல சாப்பாடு எங்கே கிடைக்கிறது என்பதனை அறிந்து, ஆட்டோவுக்கு 50 ரூபாய் தந்து அங்கே போய் சாப்பிடுகிற பொழுது, பத்து ரூபாய் பேருந்துக் கட்டணம் பெரிதா?'' என்றும், ''15 ரூபாய் கொடுத்து மினரல் வாட்டர் குடிக்கும் மக்கள் பால் வாங்க இரண்டு ரூபாய் கூடக் கொடுத்தா என்ன?'' என்றும் அதிகாரத் திமிர் வழிய வாய்க் கொழுப் பெடுத்துப் பேசி அநியாயக் கட்டண உயர்வை நியாயப்படுத்துகிறார்கள்.

### கஜானாவை மொட்டையடித்தது யார்?

கடந்த ஐந்து ஆண்டு காலமாக நடந்து வந்த தி.மு.க. ஆட்சியின் நிர்வாகக் கோளா றினால்தான் கஜானா காலியாகி விட்ட தாகப் பழி போட்டு, கருணாநிதியை ஒரு பிடிபிடித்தார், ஜெயா.

கருணாநிதியோ, ''யார் ஆண்டாலும் கஜானாவில் பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும். அதையெல்லாம் சமாளித்து ஆட்சி நடத்துவதுதான் நிர்வாகத் திறமை'' என ஜெயாவுக்குப் பதிலடி கொடுத்தார்.

''நிர்வாகப் புலி யார்? - கருணாநி தியா? ஜெயாவா?'' என்று நடந்து வரும் இந்த லாவணிக்கு இடையே, பொதுமக் களின் தலை மீது ஒரு பொருளாதார புள்ளி விவரக் குண்டைத் தூக்கி போட்டார், ஜெயா.

''பொதுமக்களுக்கு ரேசன் கடைகளின் மூலம் குறைந்த விலையில் அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சர்க்கரை வழங்குவதற்கு 1540 கோடி ரூபாய் மானி யமாக செலவாகிறது. குறைந்த கட்ட ணத்தால் போக்குவரத்துத் துறையில் 2,035 கோடி ரூபாய் நட்டம். வீடுகளுக்கு வழங் கப்படும் குறைந்த கட்டண மின்சாரத்தால் 1400 கோடி ரூபாய் நட்டம்; விவசாயிக ளுக்கு வழங்கப்படும் இலவச மின்சா ரத்தால் 3208 கோடி ரூபாய் நட்டம். அரசு ஊழியர்களுக்கு சம்பளமும், ஓய்வூதி யமும் வழங்க வருவாயில் 94 சதவீதம் செலவாகிறது.'' — கஜானா காலியான தற்கு இப்படியொரு கணக்கைக் காட்டு கிறார் ஜெயா.

பினாமி அரசின் பகற்கொள்ளைக்கு எதிராக திருச்சி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில்





படிப்பகம்

பொருளாதார அறிஞர்கள் கூட, பொது மக்கள் இப்படி அரசின் வருவாயை மானியம், இலவசம் எனத் தின்று கொழுப்பதால் தான், கஜானா காலியாகி விட்டதாக ஜெயாவிற்கு ஒத்து ஊதுகிறார்கள். "எந்தப் பொருளையும் அதற்கு உரிய விலையைக் கொடுத்துதான் வாங்க வேண்டும்" என அவர்கள் பொது மக்களுக்கு உபதேசிக்கிறார்கள். அதனால் தமிழக அரசு விலை உயர்வைச் சற்று குறைத்ததைக் கூடக் கண்டித்துவிட்டு, "அரசியல் வேறு; பொருளாதாரம் வேறு" எனப் பொருளாதாரப் பாடம் நடத்துகிறார்கள்.

பொருளாதார அறிஞர்கள் கூறுகிறபடியே, அரசியலையெல்லாம் கலக்காமல், பொருளாதாரப் பூதக் கண்ணாடியின் வழியாக இலாப நட்டக் கணக்கு போட்டுப் பார்ப்போம்.

தமிழக மின்வாரியத்தில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் கிட்டதட்ட 2000 கோடி ரூபாய் அளவிற்கு மின்சாரத் திருட்டு நடப்பதாக அரசாங்கமே ஒப்புக் கொள்கிறது. இந்த மின்சாரத் திருட்டிற்கும் இலவச மின்சாரம் பெறும் விவசாயிகளுக்கும் சம்பந்தமே கிடையாது. தொழிற்சாலை முதலாளிகளும், டாம்பீக மாநாடு, பொதுக் கூட்டம் நடத்தும் ஓட்டுக் கட்சிகளும்தான் துணிந்து மின்சாரத்தைத் திருடுகின்றனர். இந்தத் திருட்டு ஒருபுறமிருக்க, தயாரிக்கப்படும் மின்சாரத்தைக் கம்பிகளின் மூலம் விநியோகிக்கும் பொழுது, தேவையில்லாமல் 16 சதவீத அளவுக்கு மின் இழப்பு ஏற்படுகிறது.

மின் திருட்டைத் தடுத்து நிறுத்தினால், அதிகார வர்க்கம் இலஞ்சத்தில் ஊறித் திளைக்க முடியாது; மின் இழப்பைத் தடுக்க மின்சார வாரியத்தின் தொழில்நுட்பத்தை மேம்படுத்தினால், தனியார் மின் நிலையங்களுக்கு அவசியமே இருக்காது. அதனால்தான் ஆளுங்கும்பல் இந்தக் கோளாறுகளைச் சரிசெய்யாமல், மின்சார வாரியத்தின் மீது செயற்கையான நட்டத்தைத் திணிக்கிறது.

தமிழக மின்வாரியம் ஒரு யூனிட் மின்சாரத்தைத் தயாரிக்க ரூ. 2.80 செலவாகிறது எனக் கணக்கு காட்டுகிறது. ஆனால், தனியார் மின் நிலையங்களோ ஒரு யூனிட் மின்சாரத்தை தயாரிக்க ரூ. 4.00 செலவழிப்பதாகக் கூறுகின்றன. தனியார் முதலாளிகளுக்கு 16 சதவீத இலாபம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, தமிழக மின்வாரியம் தனியாரிடமிருந்து ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ. 5.30க்கு வாங்குகிறது. இப்படி ஒண்ணுக்கு இரண்டாக விலை கொடுத்து தனியாரிடமிருந்து மின்சாரத்தை வாங்குவது பொருளாதார அறிஞர்களுக்கு நட்டமாகத் தெரிவதில்லை. மாறாக, பொது மக்களுக்குக் "குறைந்த விலை"யில் மின்சாரம் வழங்குவதுதான் அவர்களின் கண்ணை உறுத்துகிறது.

கடந்த ஆண்டில் மட்டும் மின் இணைப்பு வழங்குவதற்காக மின்வாரியம் வசூலித்த வைப்புத் தொகை 1000 கோடி ரூபாய்; தேர்தலுக்கு முன்பாக மின் காப்புத் தொகை மூன்று, நான்கு மடங்கு உயர்த்தப்பட்டது. இவை இரண்டுமே மின்சார வாரியத்திற்கு அநாமத்தாக கிடைத்திருக்கும் வருமானம். இவை போக தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள மின் கட்டண உயர்வால் மட்டும் கிடைக்கும் வருமானம் 1500 கோடி ரூபாய். இத்துணை கொள்ளைக்குப் பிறகும், மின்வாரியம் 2250 கோடி ரூபாய் நட்டத்தில் இயங்குவதாக அரசும், அறிஞர்களும் புலம்பினால், அவர்களின் மோசடிக் கணக்கை நம்புவதற்கு நாமொன்றும் இளிச்சவாயர்கள் இல்லையே!

ஆவின் நிறுவனத்திற்கு ஒவ்வொரு மாதமும் 2.5 கோடி ரூபாய் நட்டமேற்படுவதாகவும், இதற்குக் காரணம் பால் குறைந்த விலைக்கு, லிட்டர் ஒன்றுக்கு ரூ. 10.50-க்கு விற்கப்பட்டு வந்ததுதான் காரணம் என தமிழக அரசு கணக்குக் காட்டுகிறது. இந்த ரூ. 10.50-க்கு விற்கப்பட்டு வந்த பாலை, கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே சந்தையில் இருந்து ஓரங்கட்டி விட்டது தமிழக அரசு. பாலின் தரத்தை உயர்த்துவதாகக் கூறி, சத்தமே போடாமல் ஒரு லிட்டர் பாலின் விலையில் இரண்டு ரூபாய் உயர்த்திவிட்டது. தமிழக அரசு பாக்கெட் பாலை எந்த விலைக்கு விற்றதோ, அதே விலையில்தான் பெரும்பாலான தனியார் நிறுவனங்களும் பாலை விற்று வந்தன. அரசு மானியம் கொடுப்பதையே குறுக்கே விழுந்து தடுக்கும் முதலாளிகள், தங்களின் பாலை மானிய விலையிலா விற்றிருப்பார்கள்?

இதற்கு முன்பாக ஒரு லிட்டர் பாலை ஒன்பது ரூபாய்க்கு அரசிடம் விற்று வந்த விவசாயிக்கு இந்தக் கட்டண உயர்வினால் கூடுதலாகக் கிடைக்கப் போவது வெறும் ஐம்பது காசுதான். அதேசமயம் அரசுக்கு ஒரு லிட்டர் பால் விற்பனையின் மூலம் கொள்முதல் விலையைவிடக் கூடுதலாகக் கிடைப்பது ஐந்து ரூபாய். மாட்டைப் பராமரித்து, பாலை உற்பத்தி செய்யும் விவசாயிக்கு ஒரு லிட்டர் பாலுக்கு ஐந்து ரூபாய் இலாபம் கிடைக்காதபொழுது, இடைத் தரகனான அரசுக்குக் கிடைக்கும் இந்த ஐந்து ரூபாய், பகற்கொள்ளை தவிர வேறென்ன?

இப்படி மின்சாரம், பால் தொடங்கி ரேசன் அரிசி, மண்ணெண்ணெய் பேருந்துக் கட்டணம் முடிய அனைத்திற்கும் மானியம் கொடுத்து குறைவான விலையில் - கட்டணத்தில் மக்களுக்குக் கொடுப்பதாகக் கூறும் அரசின் மோசடித்தனத்தை அம்பலப்படுத்திக் கொண்டே பேசலாம்.

ஒரு பேச்சுக்காக இவையனைத்தும் மக்களுக்கு மானிய விலையில் தரப்படுவதாக வைத்துக் கொண்டாலும், அந்த மானியம் மக்களின் வரிப் பணத்தில் இருந்துதான் தரப்படுகிறதே தவிர, போயசு தோட்டத்துப் பெட்டகத்தில் இருந்து அல்ல.

ஒரு பன்னாட்டு நிறுவனம் தனது தொழிலைத் தொடங்குவதற்குத் தேவைப்படும் நிலத்தில் தொடங்கி வரி விலக்கு வரை அனைத்தும் மக்களின் வரிப் பணத்தில் இருந்த மானியமாகக் கொட்டப்படுகிறது. எங்கிருந்தோ வரும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வாரியிறைக்கப்படும் இச்சலுகைகளால் ஏற்படும் நட்டம் குறித்து பொருளாதார அறிஞர்கள் யாரும் முணுமுணுப்பதுகூடக் கிடையாது. ஆனால், மக்களுக்கு, அவர்களின் சொந்த வரிப் பணத்தில் இருந்து 'சலுகைகள்' காட்டினால், உடனே ஆளுங்கும்பலைச் சேர்ந்த அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு, கஜானா காலி என்று முட்டுக் கட்டை போடுகிறார்கள்; "மக்கள் நல" அரசு என்று வாய்ஜாலம் பண்ணிக் கொண்டே, அரை குறையான மக்கள் நலத் திட்டங்களுக்குக் கூட வேட்டு வைக்கிறார்கள்.

**உழைக்கும் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு நடத்திய சாலை மறியல் போராட்டங்கள்.**



### கஜானா கள்வாணிகளின் பட்டியல்

**அ. வரிச்சலுகை:** தமிழக அரசின் கஜானா காலியாகக் கிடப்பது பற்றி பத்திரிகைகளுக்கு பேட்டியளித்திருக்கும் ஒரு பொருளாதார அறிஞர், "தமிழகத்தில்

www.padippakam.com

பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் வரிச் சலுகைகள் அனைத்தும் 2003-ஆம் ஆண்டோடு முடிவடைகின்றன. அதற்குப் பிறகு தமிழக கஜானாவில் வரி கோடி கோடியாகக் கொட்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இதை வேறு மாதிரியாக சொன்னால், கடந்த பத்து, பனிரெண்டு ஆண்டுகளில் தமிழக அரசுக்கு வந்திருக்க வேண்டிய பல கோடிக்கணக்கான ரூபாய் வரிப் பணத்தைப் பன்னாட்டு நிறுவனங்கள் சட்டப்பூர்வமாகக் கொள்ளையடித்திருக்கின்றன என்பதுதான். ஹூண்டாய், ஃபோர்டு, மிட்சுபிசி, டியு-பாண்ட் ஆகிய பன்னாட்டு நிறுவனங்கள் தான் இந்தக் கஜானா கொள்ளையர்கள். இவை போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் வருகையால்தான் தமிழகம் செல்வச் செழிப்பில் மிதக்கப் போவதாக் ஆரூடம் கூறினார்கள். ஆனால், நடந்ததோ அதற்கு நேரெதிராக இருக்கிறது.

**ஆ. வரி ஏய்ப்பு/ வரி மோசடி:** 1999 - 2000 ஆம் ஆண்டில் மட்டும் தமிழக அரசுக்கு வர வேண்டிய வரி பாக்கி 8863.60 கோடி ரூபாய். இந்த உண்மையை ஜெயா மூடி மறைத்தாலும், தணிக்கை அதிகாரியின் அறிக்கை போட்டு உடைத்து விட்டது.

இதில் தொழில் அதிபர்கள், வணிகர்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய விற்பனை வரி பாக்கி மட்டும் 7244.17 கோடி ரூபாய். இந்த விற்பனை வரி முதலாளிகள் தங்களின் சொந்தப் பணத்தில் இருந்து கட்ட வேண்டிய வரி கிடையாது. மாறாக, பொருட்களை விற்கும்பொழுது மக்களிடமிருந்து வசூலித்த வரியைத்தான் அரசுக்குக் கட்டாமல் அமுக்கி வைத்திருக்கிறார்கள். இந்தப் பணத்தைக் கறாராக வசூலித்துக் கஜானாவை நிரப்ப வக்கற்ற ஜெயாவோ, மக்களின் தாலியை அறுக்கிறார்.

இது போக, தமிழக அரசுக்கு வர வேண்டிய குத்தகை பாக்கி 512 கோடி ரூபாய்; கிரானைட், சிமெண்ட் ஆலை அதிபர்களிடமிருந்து வர வேண்டிய வரி பாக்கி 1168.15 கோடி ரூபாய்; நகர்ப்புற பங்களா வாசிகள் தர வேண்டிய நகர்ப்புற வரி பாக்கி 94.47 கோடி ரூபாய்; நிலம் மற்றும் வீடு பத்திரப் பதிவுக் கட்டண பாக்கி 39.62 கோடி ரூபாய் என இந்த ''பாக்கி'' பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

அரசு கஜானாவுக்குச் சேர வேண்டிய இந்த பத்தாயிரம் கோடி ரூபாய் வரி பாக்கியை பதுக்கி வைத்திருக்கும் முதலைகள் யார் என்பது ஜெயாவுக்குத் தெரியும். ஏனென்றால் இவர்களெல்லாம் ஜெயாவின் தொழில் கூட்டாளிகள்; ரத்தத்தின் ரத்தங்கள். இந்தக் களவாணிகளை வீட்டுக்குள்ளேயே மறைத்து வைத்துக் கொண்டு 'ஓடுறான் பிடி' என்று நாடகம் நடத்துகிறார், ஜெயா!.

**இ. அதிகார வர்க்கத்தின் ஊதாரித்தனம்:** தமிழக அரசு சமீபத்தில் தனது செலவுகளைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆராய்வதற்காக பணியாளர் மற்றும் செலவு சீராய்வுக் குழுமம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. இந்த குழுமத்தின் ஆயுட்காலம் ஆறு மாதங்கள். ஒரு அரசு கமிசனை இயக்குவதற்கு மாதமொன்று குறைந்தபட்சம் ஒரு இலட்சம் செலவாகிறது. இதன்படி பார்த்தால் இந்தக் குழுமம் ஆறு மாதத்திற்குள் தனது ஆராய்ச்சியை முடிக்கிறதோ இல்லையோ, ஆறு இலட்ச ரூபாயைத் தின்று தீர்த்துவிடும்.

அரசு அதிகாரிகளுக்காக நடத்தப்படும் கலந்தாய்வு பயிற்சிக் கூட்டங்களில் வழங்கப்படும் காபிக்கும், போண்டாவுக்கும் ஆகும் செலவு மட்டும் வருடமொன்றுக்கு நாற்பது கோடி ரூபாயாம். அமைச்சர்களின் பாதுகாப்புக்காக மட்டும் வருடமொன்றுக்கு இருபது கோடி ரூபாய் கொட்டப்படுகிறது. ஓய்வு பெற்ற அதிகாரிகள் பொறுக்கித் தின்ன விசாரணைக் கமிசன்கள்; இரண்டாம் மட்டத் தலைவர்கள் பொறுக்கித் தின்ன வாரியங்கள் என இந்தத் தண்டச்செலவு பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

தமிழக அரசுக்குச் சொந்தமாக இருப்பது 17000 பேருந்துகள்தான். ஆனால், இந்த 17000 பேருந்துகளை நிர்வகிப்பதற்காக, 7000 அதிகாரிகள் போக்குவரத்துக் கழகங்களில் திணிக்கப்பட்டுள்ளனர். அரசு தலைமைச் செயலர் பதவியில் ஒரேயொரு ஐ.ஏ.எஸ். அதிகாரி உட்கார்ந்திருந்தாலும், அந்தத் தகுதியில் 14 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தலைமைச் செயலகத்தில் குப்பை கொட்டுகிறார்கள். இந்தத் தகுதியில் உள்ள ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மாதச் சம்பளம் மட்டும் ரூ. 26,000/- ரூபாய்; சலுகைகள் தனி.

அரசு கஜானா காலியாகிவிட்டது என்பதால் அரசு ஊழியர்களின் எண்ணிக்கையை 30 சதவீதம் குறைக்கப் போகும் ஜெயா, இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் ஒருவரையாவது வீட்டுக்குத் துரத்துவாரா?

மக்களின் வரிப்பணத்தில் சம்பளம், சலுகை என்று தீர்ப்பதில், போலீசு அதிகாரிகள்தான் மலை முழுங்கி மகாதேவனாக இருக்கிறார்கள். ஐ.ஜி. அந்தஸ்தில் உள்ள ஒரு அதிகாரிக்கு அலுவலகத்தில் ஐந்து உதவியாளர்கள்; வீட்டில் வேலை செய்ய ஆறு ''ஆர்டர்லி''க்கள்; வீட்டிலும், அலுவலகத்திலும் எஸ்.டி.டி. வசதியோடு போன்; வீட்டுக்கும் அலுவலகத்துக்கும் தனித்தனி கார்; இரண்டு ஓட்டுநர்கள்; பெட்ரோல் செலவு; செல்போன், இன்டர்நெட் இணைப்பு, பத்திரிகை செலவு என அள்ளிக் கொடுக்கிறது அரசு. இப்படிப்பட்ட வசதிகளை கிட்டதட்ட எண்பது போலீசு அதிகாரிகள் அனுபவித்து வருகிறார்கள் எனும்பொழுது செலவு கணக்கு எங்கே போய் நிற்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஐ.ஜி. அதிகாரிகள் மட்டுமில்லை; ஒட்டு மொத்த போலீசு துறையே மக்களின் வரிப்பணத்தைத் தின்று கொழுக்கும் மலைப்பாம்புதான். எந்தவொரு போலீசுக் காரனாலும் அரசுக்கு ஒரு நயா பைசா கூட வரும்படியாக வருவது கிடையாது. ஆனாலும் கூட, இந்த ஒட்டுண்ணிக் கூட்டத்தின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம், இரண்டாயிரம் என அதிகரித்துக் கொண்டே போகிறது. மற்றெல்லா அரசுத் துறைகளுக்கு ஆளெடுப்பதைத் தடை செய்திருக்கும் ஜெயா, தனது பாசிச கட்டாட்சியை நடத்துவதற்காகவே போலீசுக்கு ஆளெடுப்பதைத் தடை செய்யவில்லை. ஏழைகள் வாங்கும் ரேசன் அரிசிக்கும், மண்ணெண்ணெய்க்கும் கொடுக்கப்படும் மானியத்தைக் குறைத்திருக்கும் ஜெயா, போலீசு துறைக்கோ கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கூடுதலாக 107 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்.

**ஈ. கடன் வலை:** தமிழக அரசின் உள்நாட்டு கடன் 29,008 கோடி ரூபாய்; இதற்காக கடந்த ஆண்டில் மட்டும் தமிழகம் 3003 கோடி ரூபாயை வட்டியாகக் கட்டியிருக்கிறது. தமிழக அரசின் வரி வருமானத்தில 16.3 சதவீதம் வட்டி கட்டுவதற்கே செலவழிந்து விடுகிறது.

இந்தக் கடன் தொகையில் பெரும் பகுதி அரசின் ஊதாரித்தனத்தால் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கும், வாங்கிய கடனுக்கு வட்டியும், அசலும் கட்டதான் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, ஜெயாவின் முந்தைய ஆட்சியின் பொழுது 93-94 ஆம் ஆண்டு அரசு வாங்கிய புதிய கடன்களில் 87.41 சதவீதம் பழைய கடனை அடைக்கப் பயன்படுத்தப்பட்டது. இது 2000-2001-இல், 72.6 சதவீதமாக இருந்தது.

இந்த உள்நாட்டுக் கடன் தவிர, உலக வங்கியிடமிருந்தும் அரசு கடன் வாங்கி வருகிறது. உலக வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் முழுவதையும், வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதாக ஆளுங் கும்பல் பசப்புகிறது. ஆனால், இந்தக் கடனில் பெரும்பகுதி தேவையில்லாத பாலங்கள் கட்டுவது, நடைபாதைகளைத் திரும்பத் திரும்ப இடித்துக் கட்டுவது; அதில் பளிங்கு கற்களைப் பதித்து அழகுபடுத்துவது என நகரங்களின் 'வளர்ச்சி'க்குத் தான் வாரிவிடப்பட்டிருக்கிறது. உண்மையில், உலக வங்கிக் கடனால் பலன் அடைந்திருக்கும் 'மக்கள்' தமிழகத்தில் உண்டென்றால், அது அரசு ஒப்பந்தக்காரர்கள் - அதிகாரிகள் - அரசியல்வாதிகள் என்ற கொள்ளைக் கும்பல்தான். உலக வங்கியின் கடனைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்றால், இந்தக் கும்பலின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து கட்டுவதுதான் நியாயமானது.



படிப்பகம்

www.padippakam.com

**உ. மைய அரசு போட்ட பட்டை நாமம்:** மைய அரசின் 11-ஆவது நிதிக் குழு தமிழ்நாட்டிற்கான மத்திய வரிகளின் பங்கினை 6.637 சதவீதத்தில் இருந்து 5.385 சதவீதமாகக் குறைத்து விட்டது. இதனால் தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு 550 கோடி ரூபாய். மேலும் மைய அரசு தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய பழுப்பு நிலக்கரி உரிமைத் தொகையான 529 கோடி ரூபாயையும் தராமல் முழுங்கிவிட்டது.

''மூன்று போலீசு அதிகாரிகளைத் திருப்பி அனுப்ப முடியாது'' என மைய அரசுடன் மோதிய ஜெயா, மைய அரசின் இந்த ஓரவஞ்சனைக்கு எதிராக முணுமுணுக்கக் கூட இல்லை. கருணாநிதிக்கோ, தனது கூட்டணி ஆட்சி தமிழகத்தின் உரிமையை இப்படி அபகரித்துக் கொண்டதைவிட, ஜெயாவிற்கு எதிராக மைய அரசு ஒரு சிறு துரும்பைக் கூட அசைக்காமல் இருப்பதுதான் தன்மானப் பிரச்சினையாக இருக்கிறது.

***

இந்தக் கட்டண உயர்வுகளை அறிவித்தபின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த ஜெயாவின் பினாமி அரசின் முதல்வர் பன்னீர் செல்வம், ''இனி உலக வங்கியிடமிருந்தும், ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்தும் தமிழக அரசு 18,000 கோடி ரூபாய் கடன் பெறுவதற்கு எவ்விதத் தடையும் இல்லை'' எனக் கூறினார். இதன் மூலம் உலக வங்கியின் கட்டளைகளை நிறைவேற்றும் 'கைக்கூலிகள் தான் நாங்கள்'' என்பதை ஜெயா கும்பல் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுவிட்டது.

இந்தக் கட்டண உயர்வை எதிர்ப்பதாகக் கூறும் எதிர்க் கட்சிகளும், கூட்டணிக் கட்சிகளும் உலக வங்கியின் ஆதிக்கத்தை, ஜெயாவின் கைக்கூலித்தனத்தை அம்பலப் படுத்துவது கிடையாது. ஏனென்றால், உலக வங்கியின் கட்டளைக்கு அடிபணியாமல் அரசை நடத்திச் செல்ல முடியாது என்பது எல்லா ஓட்டுக்கட்சிகளுக்கும் நன்கு தெரியும். ஓட்டுக் கட்சிகளுக்கு இடையே நடக்கும் மோதல் என்பது கொள்கை மோதல் கிடையாது; மாறாக, கைத்தடிகளுக்கு இடையே, கங்காணிகளுக்கு இடையே நடக்கும் மோதல்தான்.

அதனால்தான் தி.மு.க. தலைவர் கருணாநிதி, ''உலக வங்கி உத்தரவா? எனக்குத் தெரியாது'' என பசப்புகிறார். தமிழகத்தில் கட்டண உயர்வை எதிர்ப்பதாகக் கூறும் இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள், அவர்கள் ஆளும் மே. வங்கத்தில் உலக வங்கியின் கட்டளைக்குப் பணிந்து கஜானாவை நிரப்புவதற்காக பேருந்து கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதை எதிர்த்துப் போராடும் உழைக்கும் மக்களை, எதிர்க்கட்சிகளை போலீசை ஏவிவிட்டு ஒடுக்கி வருகிறார்கள். இந்த இரட்டை வேடம் ஒருபுறமிருக்க, அ.தி.மு.க. அரசு அமைவதற்குத் தோள் கொடுத்த போலி கம்யூனிஸ்டுகள், காங்கிரசு த.மா.கா. மற்றும் இராமதாசு - வாழப்பாடி போன்ற பிழைப்புவாதிகள், அதற்கான பொறுப்பேற்காமல், விலை உயர்வை எதிர்ப்பதைப் போல பாசாங்கு செய்வதை மன்னிக்கவே முடியாது.

''தங்களின் அவல வாழ்க்கைக்கு விடிவு காலம் பிறந்து விடாதா?'' என்ற நம்பிக்கையில்தான் உழைக்கும் மக்கள் மாறி மாறி ஓட்டுப் போடுகிறார்கள். ஆட்சியைப் பிடிக்கும் ஓட்டுக் கட்சிகளோ மக்களின் முதுகில் குத்துவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளன.


இந்தக் கட்டண உயர்வை எதிர்த்து தமிழகமெங்கும் உழைக்கும் மக்கள்தான் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடினார்கள். போலீசிடம் சிக்கி அடி, உதை, கைது, சிறை எனச் சித்திரவதைக்கு ஆளானார்கள். கட்டண உயர்வை எதிர்ப்பதாகக் கூறிய ஓட்டுக் கட்சிகளின் தலைவர்கள் வெறும் கண்துடைப்பு கண்டன அறிக்கைகளை வெளியிட்டுவிட்டு முடங்கிக் கொண்டார்கள்.

இப்படி ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, கூட்டணி கட்சி என்று மாறி மாறி வேடம் போட்டுக் கொள்ளும் எல்லா ஓட்டுக் கட்சிகளும் மக்கள் விரோதிகள்தான் எனும் பொழுது, தேர்ந்தெடுக்கப் படும் அரசுகளே ஏகாதிபத்தியங்களின் கைக்கூலிகளாகச் செயல்படும்பொழுது, ''அடுத்த தேர்தல் வரட்டும்; இவர்களுக்கு ஒரு பாடம் புகட்டுகிறோம்'' என இனியும் நாம் நம்மை ஏமாற்றிக் கொள்ளத் தேவையில்லை.

ஓட்டுப் போட்டு அரசியல் அதிகாரத்தை ஓட்டுக் கட்சிகளின் கையில் கொடுப்பதைப் புறக்கணித்துவிட்டு, அந்த அதிகாரத்தை நாமே எடுத்துக் கொள்ளும் புரட்சிகர போராட்டத்தைத் தொடங்குவதுதான் ஒரே மாற்று வழி! அந்தப் போராட்டத்தைத் தொடங்க அடுத்த தாக்குதல் வரைக் காத்திருக்கத் தேவையில்லை. இன்றே, இப்பொழுதே, இந்த நொடியே புரட்சிகரப் போரைத் தொடுப்போம்! நாடு மறுகாலனியாவதைத் தடுப்போம்!


● ரஷீத்

**உலக வங்கியின் கைக்கூலிகளாகப் போலி கம்யூனிஸ்டுகள்; 'இடதுசாரி' முன்னணி அரசின் மின்சாரம் - பேருந்துக் கட்டண உயர்வுக்கு எதிராக கொல்கத்தாவில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீது மே.வங்க போலீசின் தாக்குதல்.**




படிப்பகம்

www.padippakam.com



உலக வங்கி கைக்கூலி ஜெயா அரசின் பகற்கொள்ளைக்கு எதிராக...

# பற்றியது நெருப்பு பரவட்டும் பெருந்தீ!

தமிழகத்தை ஆளும் அ.தி.மு.க. அரசு நிதி பற்றாக்குறையைக் காரணம் காட்டி மிகக் கடுமையான விலைவாசி உயர்வை அறிவித்துள்ளது. உலக வங்கியின் உத்தரவுபடி அத்தியாவசியப் பொருட்களின் — சேவைகளின் விலை-கட்டண உயர்வால் உழைக்கும் மக்கள் ஓட்டாண்டியாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இவ்விலை உயர்வை எதிர்த்து, ''பயணச்சீட்டு வாங்க வேண்டாம்! பஸ் கட்டண உயர்வை ரத்து செய்யும் வரை! மருத்துவக் கட்டணம் செலுத்தாதீர்! இலவச மருத்துவம் நம் உரிமை!'' என்ற முழக்கத்தின் கீழ் கிளர்ச்சி இயக்கம் மேற்கொண்டுள்ளன. தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் செயல்பட்டு வரும் பகுதிகளில் ஆர்ப்பாட்டம், சாலை மறியல், தெருமுனைக் கூட்டங்கள் மூலம் உழைக்கும் மக்களின் போராட்டத்திற்குத் தலைமையேற்றும், உணர்வுகளைப் பிரதிபலித்தும் வருகின்றன.

### திருச்சியில்

விலைவாசி கட்டண உயர்வு அமலுக்கு வந்த டிசம்பர் முதல் தேதி அன்றே, அதைக் கண்டித்து 1000 சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அன்று காலை 6 மணிக்கு திருச்சி சத்திரம் மற்றும் மையப் பேருந்து நிலையங்களில் உலக வங்கியின் கைக்கூலி ஜெயாவை அம்பலப்படுத்தி 1500 பிரசுரங்கள் விநியோகித்துப் பிரச்சாரம் செய்யப்பட்டது. பொதுமக்கள் மட்டுமின்றி போக்குவரத்துத் தொழிலாளர்களும் இப்பிரச்சாரத்திற்கு உணர்வுபூர்வமாக ஆதரவளித்தனர்.

காலை 9 மணிக்கு தோழர்கள் புத்தூர் நாலு ரோடு சந்திப்பில் சாலையின் குறுக்கே கயிறு கட்டி சாலை மறியல் போராட்டம் நடத்தினர். அலுவலக நேரமாதலால் சாலையின் நான்கு வழிகளிலும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு போக்குவரத்து முழுமையாகத் தடைபட்டது. மறியலில் ஈடுபட்ட தோழர்கள் விலைவாசி உயர்வை ரத்து செய்ய வேண்டுமென முழக்கமிட்டு உரையும் நிகழ்த்தினர். மற்ற தோழர்கள் சுற்றிலும் நின்று பிரசுரம் விநியோகித்தனர்.

இதே நேரத்தில் 8 தோழர்களைக் கொண்ட இன்னொரு குழு புத்தூர் நாலு ரோடுக்கு அருகிலுள்ள அரசு மருத்துவமனையில் நோயாளிகளைப் பார்க்க கட்டணம் வசூலிக்கப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கியது. சாலை மறியல் போராட்டத்திற்கு தோழர். செல்வராசும், மருத்துவமனை ஆர்ப்பாட்டத்திற்கு தோழர். சேகரும் தலைமை தாங்கினர்.

அரைமணி நேரத்திற்கும் மேலாக நடந்த இக்கிளர்ச்சி நடவடிக்கை மூலம் விலைவாசி உயர்வு எதிர்ப்பு பிரச்சாரம் அனைத்துத் தரப்பு மக்களிடமும் வீச்சாக எடுத்துச் செல்லப்பட்டது. இந்தப் போராட்டங்களில் ஈடுபட்ட 18 தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டனர்; இந்தக் கைதைக் கண்டித்து உடனடியாக நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதோடு, துண்டறிக்கை செய்தியாகவும் அச்சடிக்கப்பட்டு பொதுமக்களிடம் விநியோகிக்கப்பட்டு, ஜெயா அரசின் மக்கள் விரோதத்தன்மை அம்பலப்படுத்தப்பட்டது.

இந்த விலையேற்றத்திற்கு எதிராக காட்டூர், அரியமங்கலம் மற்றும் ஆயில் மில் பகுதிகளைச் சேர்ந்த 1000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு, திருச்சி - தஞ்சை பிரதான சாலையில் மறியலில் ஈடுபட்டு, போக்குவரத்தை நிலைகுலைய வைத்தனர். போலீசார் மக்களிடம் நைச்சியமாகப் பேசி போராட்டத்தை உடைக்க முயன்றனர். இதையறிந்த காட்டூர் - அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த பு.மா.இ.மு. தோழர்கள், கிளைச் செயலர் ரபீக் தலைமையில் மக்களின் போராட்டத்துக்குத் தலைமையேற்று, போலீசின் சதியை முறியடித்தனர். போலீசார் தலைமையேற்ற

நுழைவுக் கட்டணக் கொள்ளைக்கு எதிராக திருச்சி அரசு மருத்துவமனையில் ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

தோழர்களைப் பலவந்தமாகக் கைது செய்ய முயன்ற பொழுது, பொது மக்கள் போலீசை முற்றுகையிட்டு, தோழர்கள் போலீசால் இழுத்துச் செல்லப்படுவதைத் தடுத்தனர். தனது அதிகாரம் பறி போனதால் ஆத்திரமடைந்த போலீசு, தோழர்களின் மீதும் பொது மக்களின் மீதும் கண்மூடித்தனமான தடியடி தாக்குதலை நடத்தியது. பு.மா.இ.மு. தோழர்களை பொன்மலை போலீசு நிலையத்தில் சட்டவிரோதகக் காவலில் வைத்தும் மிருகத்தனமாகத் தாக்கியது. தனது மிருக வெறி அடங்கிய பின்பு, தோழர்களை அரியமங்கலம் போலீசு நிலையத்திற்குக் கொண்டு வந்து, பொதுச் சொத்திற்கு சேதம் விளைவித்ததாகப் பொய் வழக்கு போட்டது. இருபத்தி இரண்டு நாட்கள் சிறைவாசத்திற்குப் பிறகுதான் நீதிமன்றம் தோழர்களுக்குப் பிணை வழங்கியது.



திருச்சி - புத்தூர் நாலுரோடு சந்திப்பில் கயிறு கட்டி சாலை மறியல் போராட்டம்.

### திருப்பத்தூரில்

30.11.01 அன்று இரவு விலைவாசி உயர்வைக் கண்டித்து ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் மறுநாள் காலை மக்கள் மத்தியில் பரபரப்புடன் பேசப்பட்டது. 03.12.01 அன்று மாலை 4 மணிக்கு ம.க.இ.க.வும், வி.வி.மு.வும் திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையம் எதிரில் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம் மக்கள் மத்தியில் எழுச்சியூட்டும்படி அமைந்தது.

### ஓசூரில்

டிசம்பர் 3-ஆம் தேதி காலை பேருந்து நிலையத்தில் கூடி வி.வி.மு. தோழர்கள் ஒத்துழையாமை போராட்டத்தை நடத்தினர். ''பாசிச ஜெயாவின் பினாமி அரசின் தாக்குதலை முறியடிப்போம்! பழைய கட்டணத்திற்கே பயணசீட்டு வாங்குவோம் அல்லது கட்டண உயர்வை ரத்து செய்யும்வரை பயணச் சீட்டு வாங்குவதைப் புறக்கணிப்போம்!'' என்று பேருந்துகளில் ஏறிப் பிரச்சாரம் செய்து முழக்கமிட்டனர்.

பிரச்சாரத்திற்கு ஆதரவாக நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் ஒத்துழையாமை போராட்டத்தில் வந்து கலந்து கொண்டனர். அவர்களோடு சேர்ந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட பேருந்தில் ஏறிய தோழர்கள் வழி நெடுக பிரச்சாரம் செய்தபடியும் முழக்கமிட்டுக் கொண்டும் சென்றனர். இறுதியில் இந்த ஒத்துழையாமை போராட்டத்தில் ஈடுபட்ட பதினொரு தோழர்களை போலீசார் கைது செய்தனர்.

### தஞ்சையில்

இராசா மிராசுதாரர் அரசு மருத்துவமனையில் நோயாளிகளைப் பார்க்க வருபவர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படுவதற்கு எதிராக டிசம்பர் ஒன்றாம் தேதி பு.மா.இ.மு. தோழர்கள் மக்களைத் திரட்டி சாலைமறியலில் ஈடுபட்டனர். உடன் அங்கு வந்த தஞ்சை மேற்கு காவல்நிலைய ஆ வாளர் அல்மாஸ் அலியும், துணை ஆய்வாளர் சேதுமணி மாதவனும் தலைமை தாங்கிப் போராடிய இரு தோழர்கள் மீது தடியடி நடத்தி, வண்டியில் பலவந்தமாக ஏற்றி, போலீசு நிலையத்திற்கு கொண்டு சென்று, கிரிமினல்களைத் தாக்குவது போல் காட்டுமிராண்டித்தனமாக தாக்கினர்.

பின்னர் நீதிமன்றத்தில் தோழர்கள் ஒப்படைக்கப்பட்டபோது, அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டிருப்பதைக் கண்ட நீதிபதி மருத்துவமனையில் சேர்க்கும்படி உத்தரவிட்டார். அதன்படி தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தோழர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு வார்டு உதவி மருத்துவராகப் பணிபுரியும் ஏ.ஜே. இஸ்மாயில் என்பவர் தோழர்கள் மருத்துவமனையில் இருக்கும் போதே தப்பி ஓடிவிட்டதாகப் பதிவு செய்துவிட்டுத் தோழர்களை மருத்துவமனையிலிருந்து கட்டாயமாக வெளியேற்றினார். வெளியேற மறுத்த தோழர்கள் மிரட்டப்பட்டனர். போலீசு ஆய்வாளர் மற்றும் துணை ஆய்வாளர் மீது நீதிமன்றத்தில் தோழர்கள் தாக்கல் செய்திருந்த வழக்கிலிருந்து அவர்களை விடுவிக்கவும், வழக்கைத் திசைதிருப்பவுமே அவர்களோடு கள்ளக்கூட்டு சேர்ந்து செயல்பட்டுள்ளார் அரசு மருத்துவர்.

''உதவி மருத்துவர் இஸ்மாயில் மீது நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், இல்லையேல், குற்றப்பிரிவு சட்டம் - பிரிவு 43-ன்படி நாங்களே கைது செய்து போலீசிடம் ஒப்படைப்போம்' என்றும் அறிவித்து பு.மா.இ.மு.வினர் துண்டறிக்கை, சுவரொட்டிகள் மூலம் மக்களிடம் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

விலைவாசி உயர்வை அனைத்து ஓட்டுக் கட்சிகளும் அறிக்கை அளவில் கண்டனம் செய்து கொண்டிருக்க, இவ்வமைப்புகள் உழைக்கும் மக்களின் ஆதரவுடன் நேரடியாக களத்தில் நின்று போராடி வருவது நம்பிக்கையை ஊட்டுவதாக அமைந்திருக்கிறது.




தமிழ் மக்கள் இசை விழா

ஒன்பதாம் ஆண்டு

பிப்ரவரி - 9, 2002 சனிக்கிழமை

இடம்: தஞ்சை - திருவள்ளுவர் திடல்

*காலை முதல் மாலை வரை*

கருத்தரங்கம்

*மாலை முதல்*

கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள்

மக்கள் கலை இலக்கியக் கழகம் - தமிழ்நாடு

www.padippakam.com

# ''ஜெயாவே டான்சி ராணி'' - உயர்நீதி மன்றத் தீர்ப்பு

**''நீதி வழங்கப்படுவது மட்டும் போதாது. நீதியானதுதான் என்று தோன்றவும் வேண்டும்'' என்பது பழைய கருத்து. இப்போது, ''நீதி வழங்கப்பட்டுள்ளது என்று மட்டும் தோன்றினால் போதும். நீதியானதுதான் என்பதற்கு அவசியமேயில்லை'' என்று இந்தத் தீர்ப்பு புதிய ''நீதி'' வகுத்து விட்டது.**

''டான்சி நிலம் அரசு சொத்து இல்லையென்றால் அதன் விற்பனை குறித்து முதலமைச்சரும் அமைச்சர்களும் ஏன் முடிவெடுக்க வேண்டும்?''

என்று டான்சி ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற ஜெயலலிதாவின் மேல் முறையீடு வழக்கு விசாரணையின் போது அவரது வழக்கறிஞர் கே.கே.வேணு கோபாலிடம் உயர்நீதி மன்ற நடுவர் என். தினகர் கேட்டார்.

உச்சநீதி மன்ற மூத்த வழக்கறிஞர் வேணுகோபாலே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனார்.

ஆனாலும் நீதிபதி தினகரின் தீர்ப்பு பின்வருமாறு கூறுகிறது: ''டான்சி சொத்து ஒரு அறக்கட்டளையின் சொத்துமல்ல; அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ்வரும் சொத்துமல்ல. எனவே, அரசாங்க சொத்தை ஜெயலலிதா வாங்கியதாகப் பிரச்சினையே கிடையாது.''

இந்த முடிவுக்கு வருவதற்கு மிகவும் சிரமப்பட்டு தினகரே ஒரு விளக்கம் அளித்திருக்கிறார்.

''டான்சி சொத்துக்கான பொறுப்பு முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்படவில்லை. 1895-ஆம் ஆண்டு அரசாங்க வழக்கீடு சட்டப்படி இந்தச் சொத்து டான்சிக்குக் கொடுக்கப்பட்டு விட்டது. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு இயக்குநர்கள் வாரியம் அதை நிர்வகித்து வந்தது. கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சுயேச்சையான நிறுவனம்தான் டான்சி. அது அரசாங்கத்தின் ஒரு உறுப்பு அல்ல.''

நீதிபதி தினகரின் இந்த விளக்கமும் கூட, வழக்கு விசாரணையின் போது அவரே எழுப்பிய கேள்விக்கு பதில் அளிப்பதாக இல்லை. அதோடு இன்னும் சில கேள்விகள் உள்ளன. டான்சி நிலம் அரசுச் சொத்து இல்லை என்றால் அந்த நிலம் விற்பனை தொடர்பான கோப்புகள் தொழில்துறை அமைச்சருக்கும் செயலருக்கும் எதற்கு அனுப்பப்பட்டது? டான்சி நிர்வாகத்தை இயக்குநர்கள் வாரியம் மட்டுமே பொறுப்பாக இருந்து நடத்துகிறது என்றாலும் அந்த வாரியத்தின் இயக்குநர்களையும், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரையும் அரசாங்கம்தான் நியமிக்கிறது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இதற்கு நியமிப்பதும் மாற்றுவதும் அரசாங்கம்தான்; அதாவது தனக்குப் பாதகமான அதிகாரிகளை மாற்றவும், சாதகமான அதிகாரிகளை நியமிக்கவும் முடியும். இந்த அடிப்படையில்தான் டான்சி நிலத்தை ஜெயா-சசி கும்பலுக்கு அடிமாட்டு விலைக்கு விற்பதற்கு எதிர்ப்புக் காட்டிய தொழில்துறைச் செயலர் வாதிகா படோல்கர் வேறு துறைக்கு தூக்கியடிக்கப்பட்டிருக்கிறார். டான்சி இயக்குநர்களின் வாரியம் அன்றாட நிர்வாகத்துக்குத்தான் பொறுப்பு. ஆனால், நட்டத்தில் இயங்கும் டான்சியின் தொழில் பிரிவுகளை மூடுவது, புதிய தொழில் பிரிவுகளைத் துவங்குவது மற்றும் பிற கொள்கை முடிவுகளை அரசாங்கம்தான் எடுக்கிறது.

டான்சிக்கும் அரசாங்கத்துக்கும் இப்படிப்பட்ட உறவு இருக்கும்போது டான்சியின் சொத்துக்கள் அரசுக்குச் சொந்தமில்லையா? இந்தக் கேள்விகள் நீதிபதி தினகருக்கு எழவுமில்லை; இவற்றுக்கு அவரது தீர்ப்பில் பதிலுமில்லை.

இதுபோன்ற சட்டத்துக்கும் நீதிக்கும் புறம்பான ஓட்டைகளையும் குதர்க்கமான சட்ட வியாக்கியானங்களையும் டான்சி வழக்கின் தீர்ப்பில் நிறையவே காணலாம்.

''அரசாங்கத்தின் சொத்தை அரசு ஊழியரான ஒரு அமைச்சர் வாங்கக் கூடாது'' என்பது விதி. அரசாங்கச் சொத்தான டான்சி நிலத்தை வாங்கியதன் மூலம் கிரிமினல் குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்துள்ளார்'' என்று கூறிச் சிறப்பு நீதிமன்றம் ஜெயலலிதாவுக்குத் தண்டனை வழங்கியது.

ஆனால், டான்சி நிலம் அரசாங்கச் சொத்து அல்ல என்பதற்கு தானே ஒரு தவறான விளக்கமளிக்கிறது தீர்ப்பு. அதோடு, ''அரசாங்கச் சொத்தை ஒரு அரசு ஊழியர் வாங்கக் கூடாது என்பது ஒரு நன்னடத்தை விதிதானே தவிர, சட்டமல்ல'' என்கிறது.

''ஒரு அரசு ஊழியர் - சட்டத்துக்குக் கட்டுப்பட்டவராக உள்ள ஒரு அரசு ஊழியர் (அரசாங்கச் சொத்தை) தன் பெயரிலோ, வேறு ஒருவர் பெயரிலோ, இணைந்தோ, கூட்டாகவோ சில் சொத்துக்களை வாங்கவும் வாங்குவதற்கான கேட்பு வேலையிலும் ஈடுபடக்கூடாது; அப்படிச் செய்தால் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். அந்தச் சொத்து பறிமுதல் செய்யப்படும்'' என்று கிரிமினல் குற்றத்தடுப்புச் சட்டம் கூறுகிறது.

இந்த சட்டத்திற்கும், ஜெயலலிதாவை விடுவிக்கும் வகையில் வியாக்கியானம் தரப்பட்டிருக்கிறது. இது சில சொத்துக்களுக்குத் தான் பொருந்தும்; அவை எப்படிப்பட்டவை என்று சட்டத்தில் கூறப்படவில்லை என்று கூறி நீதிதேவன் கண்ணை மூடிக் கொண்டார்.

ஒரு அரசு ஊழியர் அரசாங்க சொத்தை வாங்குவது சட்ட விரோதமானது என்று கூறும் வகையில் ''சட்டத்துக்குக் கட்டுப்படுபவராக உள்ள அரசு ஊழியர்'' என்று குறிப்பிடப்பட்டதை ''எந்தச் சட்டத்தாலும் கட்டுப்படுத்தப்படாத நிலையில் உள்ள அரசு ஊழியர் அரசாங்கச் சொத்தை வாங்குவது சட்ட விரோதமல்ல'' என்கிற குதர்க்கமான விளக்கம் தரப்பட்டுள்ளது.

டான்சி வழக்கில் இருந்து விடுதலை செய்ததன் மூலம் அவர் முதலமைச்சராவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல; அப்படி அவர் முதலமைச்சரான பிறகு அரசுக் கழகங்களின் - வாரியங்களின் சொத்துக்கள், அரசாங்கச் சொத்துக்கள் அல்ல என்பதைக் காட்டி மேலும் பல சொத்துக்களை வாங்கிக் குவிக்க முடியும்.

கிரிமினல் குற்றத் தடுப்புச் சட்டத்துக்கு நீதிபதி தினகர் அளித்துள்ள வியாக்கியானத்தின்படி அரசு நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும் பொறுப்பிலுள்ள அமைச்சர் அவற்றின் பங்குகளைத் தானே வாங்கிக் குவிக்க முடியும். அப்படிச் செய்வது தண்டனைக்குரிய குற்றமல்ல என்றாகிறது.

அதுமட்டுமல்ல; அரசின் நன்னடத்தை விதிகளை அரசு ஊழியர்கள் எவரும் மீறலாம், அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிற சட்டம் எதுவும் கிடையாது. ஏற்கனவே இலஞ்ச-ஊழல்-அதிகார முறைகேடுகளால் ஆட்டம் போடும் ''அரசு ஊழியர்''களுக்கு இனி மேலும் கொண்டாட்டம்; அராஜகம் தலைவிரித்தாடும். ''கடிவாளம் இல்லாத முரட்டுக் குதிரைகளாகத் தறிகெட்டு ஓடுவார்கள்'' என்று அரசியல் நோக்கர்கள் அஞ்சுகின்றனர். இப்படிச் செய்ததற்காக ஜெயலலிதாவுக்கும் நீதிபதி தினகருக்கும் ஒருசேர அரசு ஊழியர்கள் நன்றி தெரிவிக்க வேண்டும்.



படிப்பகம்

ஜெயலலிதாவோடு வேறு சிலரும் சதிசெய்து, டான்சி நிலத்தை வழிகாட்டும் மதிப்பு / டான்சியின் சந்தை மதிப்புக்குக் குறைவான விலைக்கு விற்றதன் மூலம் டான்சிக்கு 3.5 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுத்தியது; இந்தியப் பத்திரங்கள் சட்டப்படி மேலும் 66 இலட்சம் அரசுக்கு நட்டம் ஏற்படுத்தியது ஆகிய குற்றங்களுக்காகவும் ஜெயா - சசி கும்பலுக்கு சிறப்பு நீதிமன்றம் தண்டனை வழங்கியிருந்தது.




1990-இல் ஒரு ''கிரவுண்ட்'' 6 இலட்சம் ரூபாய் என்றும், 1991-இல் ஒரு 'கிரவுண்ட்'4.65 இலட்சம் ரூபாய் என்றும் தனியாரிடம் ஜெயலலிதா விலைக்கு வாங்கியுள்ளார். அதே கிண்டி தொழிற்பேட்டையில் அதன்பிறகு சந்தை மதிப்பு 'கிரவுண்டு'க்கு 7.32 இலட்சம் ரூபாயாக உயர்ந்தது. ஆனால், ஒரு கிரவுண்ட் 3 இலட்சம் ரூபாய் என்று குறைந்த விலை கொடுத்து, குறைந்த முத்திரைத்தாள் கட்டணம் செலுத்தி ஜெயா - சசி கும்பல் வாங்கியது என்பது குற்றச்சாட்டு.

வழக்கமாக, அரசின் வழிகாட்டும் மதிப்பீட்டைவிடப் பன்மடங்கு கூடுதலாக சந்தை மதிப்புப் போட்டு பொதுமக்களிடம் முத்திரைத்தாள் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதுதான் உண்மை. ஆனால், அதற்கு நேர்மாறாக ஜெயா - சசி கும்பல் செய்திருக்கிறது. இதையே பின்வரும் விளக்கத்தின் மூலம் தினகரின் தீர்ப்பு நியாயப்படுத்துகிறது.

''சந்தை மதிப்பு என்கிற சொல்லே மேலோட்டமானது, தெளிவற்றது, நிச்சயமற்றது, ஊக அடிப்படையிலானது. இந்திய முத்திரைச் சட்டத்தில் அதற்கு விளக்கமில்லை'' என்று கூறும் தினகர், ஜெயலலிதாவுக்குத் தண்டனை வழங்கிய சிறப்பு நீதிமன்ற நடுவர், சந்தை மதிப்பையும், வழிகாட்டும் மதிப்பையும் போட்டுக் குழப்பிவிட்டதாகக் கூறுகிறார். ஆகவே, ஜெயலலிதா - சசிகலா கும்பல் டான்சி நிலத்தை நியாயமான விலைக்குத்தான் வாங்கினர்; அதனால் அரசுக்கு இழப்பும் இல்லை, சதியும் நடக்கவில்லை என்று முடிவு செய்து அவர்களை விடுதலை செய்துவிட்டார். இந்தத் தீர்ப்பால் இதுவரை பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து, முத்திரைத் தாள் கட்டணத்தைக் குறைத்துத்தான் வீடு - வீட்டுமனை முதலைகள் அரசை ஏய்த்து வந்தனர். இனி, சந்தை மதிப்புக்கு முத்திரைத்தாள் கட்டணம் செலுத்த முடியாது என்று கூறி நேரடி அடாவடித்தனத்தில் அவர்கள் ஈடுபடலாம். இதனால் கணிசமான அளவு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும்.

டான்சி நிலத்தை வாங்கிய ஆவணங்களில் உள்ளது தனது கையெழுத்தே கிடையாது என்று சிறப்பு நீதிமன்ற விசாரணையின்போது ஜெயலலிதா புளுகினார். சாட்சிகளின் முன்பு ஜெயாவும் சசியும் கையொப்பமிடவில்லை. அது ஜெயலலிதாவின் கையொப்பம் தான் என்று குற்றஞ்சாட்டியவர்கள் நிரூபிக்கவும் இல்லை என்று நடுவர் தினகர் கூறியுள்ளார். போயஸ் கோட்டைக்குள் வாழும் ஜெயா-சசி கும்பல் மட்டுமல்ல; பெரிய மனிதர்கள் எல்லோருமே சாட்சி வைத்துக் கொண்டு கையொப்பமிடுவதில்லை என்பது தினகருக்குத் தெரியாதா? அந்தக் கையொப்பம் உண்மையானதில்லை என்று தினகர் கருதுகிறாரா? இல்லையென்றால் தடயவியல் ஆய்வுக்கு அவர் அனுப்பி நீதியை நிலைநாட்டியிருக்கலாமே!

கொடைக்கானலில் ஏழுமாடி ஆடம்பர ஓட்டல் கட்டுவதற்கான அனுமதி வழங்கியதில் முறைகேடுகள் செய்ததாக ஜெயலலிதாவும் அவரது அமைச்சர் செல்வகணபதி மற்றும் அதிகாரி பாண்டே, ஓட்டல் உரிமையாளர்கள் ஆகியோர் சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருந்தனர். அதை எதிர்த்த அவர்களின் மேல்முறையீட்டு மனுவை விசாரித்த அதே நீதிபதி தினகர் அனைவரையும் விடுதலை செய்துள்ளார்.

''மலைப் பிரதேசத்தில் ஏழு மாடிக் கட்டிடம் கட்டுவதற்குள்ள பல தடைகளை மீறி விதிவிலக்குகள் அளித்து, அவசர அவசரமாக அனுமதிக்கப்பட்டுள்ளது'' என்று ஜெயாவின் முந்தைய ஆட்சிக் காலத்திலிருந்தே உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் வந்துள்ளன. அதற்குரிய கோப்பில் இருந்து துறைச் செயலரின் குறிப்புகளை மந்திரி செல்வகணபதி அழித்தார். ஜெயாவுடன் சேர்ந்து அவர்கள் சதி செய்தார்கள் என்பது வழக்கு. சாட்சியத்தை அவர்கள் அழித்ததாகவும் ஆதாயம் கருதி செயல்பட்டதாகவும் நம்ப முடியாது என்று கூறி ஜெயா கும்பல் விடுவிக்கப்பட்டு விட்டது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, டான்சி, நிலக்கரி ஊழல் வழக்குகளில் இருந்து ஜெயா - சசி கும்பலை முற்றாக விடுவித்து ''சிங்கப்பூர் உல்லாசப் பயண'' நீதிபதி தங்கராஜ் தீர்ப்பு வழங்கினார். அப்புறம் தங்கராஜின் தீர்ப்பை ரத்து செய்தது உச்ச நீதிமன்றம். தங்ராஜின் தீர்ப்பு அளவுக்கு கொச்சையாக இல்லை என்றாலும் அதற்கு விரிவான விளக்க உரை வழங்குவதாகத்தான் தினகரின் தீர்ப்பு உள்ளது.

சிலரின் ஆதாயத்துக்காக சட்டத்தையும் நீதியையும் கேலிக் கூத்தாக்கியுள்ளது இந்தத் தீர்ப்பு. நீதித் துறையின் மீதான பிரமைகளை அகற்றுவதாகவும் உள்ளது. அதற்காக நீதிபதி தினகருக்கு மக்கள் நன்றித் தெரிவிக்காவிட்டாலும் அந்தத் தீர்ப்பினால் ஆதாயம் அடைந்தவர்கள் நன்றி தெரிவிப்பது அவசியம். அதை எவ்வாறு அவர்கள் தெரிவிப்பார்கள், இல்லை ஏதாவது ஒரு விதத்தில் நன்றி தெரிவித்து விட்டார்களா என்பது தெரியவில்லை.

தீர்ப்பளித்ததும் ஒரு மாதம் ஓய்வில் போய்விட்டார் நீதிபதி தினகர். நீதிபதி தங்கராஜுக்கும் தினகருக்கும் ஒரே வித்தியாசம் — அவர் தீர்ப்புச் சொல்லுவதற்கு முன்பு சிங்கப்பூர் ஓய்வுக்குப் போனார். இவர் தீர்ப்புக் கூறிவிட்டு ஓய்வுக்குப் போயுள்ளார்.

● மாணிக்கம்

## அறிவிப்பு

இடமின்மையின் காரணமாக ''முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.'' தொடர் கட்டுரை இவ்விதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் வெளிவரும்.

— ஆசிரியர் குழு

www.padippakam.com

## சட்டக் கல்லூரி மாணவர் போராட்டம்:

# தடியால் தாக்கியது போலீசு சட்டத்தால் தாக்கியது நீதிமன்றம்

**த**மிழக அரசு அறிவித்திருக்கும் விலைவாசி உயர்வை எதிர்த்து ''பந்த்'' நடந்த டிசம்பர் ஏழாம் தேதி நள்ளிரவில், சென்னை புரசைவாக்கத்தில் உள்ள சட்டக் கல்லூரி விடுதி மாணவர்கள் மீது மிகக் கொடூரமான தாக்குதலை தமிழக போலீசு நடத்தியது. அன்று நள்ளிரவு 11.30 மணிக்கு மேல் தொடங்கி; கிட்டதட்ட ஒரு மணிநேரம் இந்தத் தாக்குதல் நடந்தது. எதிரி நாட்டுக்குள் புகும் இராணுவம் எப்படிப்பட்ட வெறியோடு பாய்ந்து குதறுமோ, அதுபோலவே தமிழக போலீசும் நடந்து கொண்டது.

மூடப்பட்டிருந்த விடுதியின் கதவை போலீசு வேனைக் கொண்டு மோதி, விடுதிக்குள் நுழைந்த போலீசாரின் தாக்குதலில் இருந்து எந்தவொரு மாணவனும் தப்பிப் பிழைக்க முடியவில்லை. தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் விடுதிக்குள் ஓட ஓட விரட்டப்பட்டுத் தாக்கப் பட்டனர்; போலீசின் தாக்குதலில் இருந்து தப்பிக்க அறையின் கதவுகளை மாணவர்கள் மூடியபொழுது, கதவுகள் லத்தியால் உடைத்து நொறுக்கப்பட்டன. மாணவர்களைத் தடியால் அடித்துக் கொண்டே, மாடிப்படிகளின் வழியே தரதர வென்று இழுத்து வந்து வெளியே வீச, அங்கே அவர்கள் போலீசாரால் உருட்டுக் கட்டைகளால் தாக்கப்பட்டனர். குடிநீர்த் தொட்டிக்குள் குதித்துப் பதுங்கியிருந்த மாணவரைப் பிடிக்க முடியாத போலீசார், ''பெட்ரோல் ஊத்திக் கொளுத்துங்கடா'' எனக் கத்தியிருக்கின்றனர்.

44 மாணவர்கள் போலீசு நிலையத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலுக்கு உள்ளான மாணவர்களுள், 9 பேருக்கு கை-கால் எலும்புகள் முறிந்து போயின; 15 மாணவர்களுக்கு மண்டை உடைந்து போனது. பொதுச் சொத்தை சேதப்படுத்தியது உட்பட, பல்வேறு கிரிமினல் வழக்குகள் 35 மாணவர்களின் மீது தொடுக்கப்பட்டுள்ளது. போலீசார், பொதுமக்கள் என்ற பெயரில் ரவுடிகளைத் தாக்குதலுக்குப் பயன்படுத்திக் கொண்டதாகவும், தங்களின் மீது சோடா பாட்டில், பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டதாகவும் மாணவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இப்படியொரு காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்துமளவிற்கு அப்படியென்ன சட்டக் கல்லூரி மாணவர்கள் கிரிமினல் குற்றம் செய்து விட்டார்கள் எனக் கேட்டால், ''விடுதி மாணவர்களுக்கும், விடுதிக்கு எதிரே இருக்கும் ஓட்டல் தொழிலாளர்களுக்கும் தெருவில் கைகலப்பு ஏற்பட்டுவிட்டது; அதனால், சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக மாணவர்களின் மீது தடியடி நடத்த வேண்டியதாகி விட்டதாக'' போலீசும், அரசும் கூறுகின்றன.

அடிதடி வழக்குகளையெல்லாம் தமிழக போலீசார் இப்படியா தீர்த்து வைக்கிறார்கள்? பெரும்பாலும், இரண்டு தரப்பிலுமே மாமூல் வாங்கிக் கொண்டு 'கண்ணியமாக' வழக்கை முடிக்கப் பார்ப்பதுதான் போலீசின் வழக்கம். சட்டம் படிக்கும் மாணவர்களிடம் இப்படி கண்ணியமாக நடந்து கொள்ள முடியாதென்றால், விசாரணை நடத்தியிருக்கலாம்; தவறு செய்தவர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், போலீசோ ஒரு தரப்பாக, சகட்டு மேனிக்கு அனைத்து மாணவர்களையும் தாக்கியதைப் பார்க்கும் பொழுது, இது, சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க நடத்தப்பட்ட தடியடியாகத் தெரியவில்லை. மாறாக, மாணவர்களின் மீது போலீசுக்கு இருக்கும் வன்மத்தைத் தீர்த்துக் கொள்ள நடத்தப்பட்ட தாக்குதல்தான் என அடித்துச் சொல்லலாம்.

ஜெயாவின் பினாமி ஆட்சி அறிவித்த விலைவாசி உயர்வை எதிர்த்து சட்டக் கல்லூரி விடுதி மாணவர்கள் டிசம்பர் 1-ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அப்பொழுதே, போலீசுக்கும் மாணவர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. அடுத்ததாக விலைவாசி உயர்வை எதிர்த்து நடந்த ''பந்த்''ஐயும் மாணவர்கள் ஆதரித்தார்கள். போலீசைப் பொருத்தவரையில் ஜெயாவின் ஆட்சியை எதிர்ப்பது என்பது தமது சொந்த ஆட்சியை எதிர்ப்பது போன்றது. இதற்குப் பழி தீர்த்துக் கொள்ள சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த போலீசுக்கு, ஓட்டல் தொழிலாளர்களுக்கும், விடுதியைச் சேர்ந்த சில மாணவர்களுக்கும் இடையே நடந்ததாகக் கூறப்படும் கைகலப்பு, சரியான வாய்ப்பாக அமைந்தது.

இந்தக் கொலைவெறித் தாக்குதலை வெறும் கைகலப்பை வைத்து நியாயப் படுத்திவிட முடியாது என்பதற்காகவே, மாணவர்கள் தங்களின் மீது பெட்ரோல் குண்டு வீசியதாகக் காரணம் கூறுகிறது போலீசு. தாமிரபரணிப் படுகொலையை, தி.மு.க. பேரணி மீது நடத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதலை நியாயப்படுத்த, போலீசின் கிரிமினல் மூளை கண்டுபிடித்த அதே குற்றச்சாட்டு, இங்கு மாணவர்களின் மீது சுமத்தப்படுகிறது.

இதுவும் போதாதென்று, சென்னை சட்டக் கல்லூரி மாணவர் விடுதி சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி வருவதாகவும், இந்த விடுதி மாணவர்கள் மீது பொது மக்களுக்கு நல்ல எண்ணம் கிடையாதென்றும் போலீசு கீழ்த்தரமான அவதூறை அள்ளி வீசியிருக்கிறது; உள்ளபடியே சென்னை புரசைவாக்கம் போலீசுக்கு சமூக அக்கறை என்று இருந்தால், அவர்கள் விடுதிக்கு முன்பாக இருக்கும் ''மோட்சம்'' திரையரங்கத்தைத் தாக்கியிருக்க வேண்டும். அப்பகுதியில் ஆபாசப் படங்களைத் தொடர்ந்து திரையிடும் சமூக





படிப்பகம்

www.padippakam.com

விரோதக் கூடமாக இருப்பது அந்தத் திரையரங்கம்தான்! ஆனால், போலீசோ விடுதி மாணவர்களைத் தாக்க ''மோட்சம்'' திரையரங்க முதலாளியுடன் ''கொள்கை'' கூட்டணி அமைத்துக் கொண்டுள்ளது.

இக்கொலைவெறித் தாக்குதல் தமிழக மாணவர்கள் மத்தியில் போலீசுக்கு எதிரான போராட்ட உணர்வைத் தூண்டிவிடவே, அரசு கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்தும் கல்லூரி விடுதிகளில் இருந்து மாணவர்களை வெளியேற்றியும் போலீசுக்கு எதிரான போராட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிய முயன்றது, தமிழக அரசு. ஆனாலும், சட்டக் கல்லூரி மாணவர்கள், ''தாக்குதலை நடத்திய மூன்று போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; காயமடைந்த மாணவர்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும்'' எனக் கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்தனர்.

மாணவர்களின் போராட்டத்திற்கு பல்வேறு ஓட்டுக் கட்சிகளும்; வழக்குரைஞர் சங்கங்களும் ஆதரவு தெரிவிக்கவே, தமிழக அரசு வழக்கம் போல ஒரு விசாரணை கமிசனை அமைத்தது. இது ஒருபுறமிருக்க, தமிழக அரசின் சார்பாக மாணவர்களின் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் திருப்பணியை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, தனியாக விசாரணை கமிட்டியொன்றை அமைத்தது. அந்த கமிட்டி, ''கொடூரமான தாக்குதல் நடந்தது உண்மை; மாணவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்'' எனப் பரிந்துரைத்தது. காயம்பட்ட மாணவர்களுக்கு நட்ட ஈடு வழங்க முடியாது; ஆனால், கருணைத் தொகை வழங்குவதாகக் கூறி மாணவர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியது. இதையே வெற்றியாகக் கருதிய மாணவர்களும், உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டனர்.

மாணவர்கள் மீது போடப்பட்டுள்ள கிரிமினல் வழக்குகளைத் திரும்பப் பெறவும், மாணவர்களைத் தாக்கிய காக்கிச் சட்டை ரவுடிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் தமிழக அரசு மறுத்துவிட்டது; உயர் நீதிமன்றம் அமைத்த கமிட்டி போலீசின் மீது குற்றம் சாட்டியிருப்பதை, உயர் நீதிமன்றமே ஏற்றுக் கொள்ளுமா என்பதற்கும் எந்த உத்தரவாதமும் கிடையாது. விசாரணை கமிசன், விசாரணை கமிட்டி என்று ஏதாவது வித்தை காட்டி, சில சில்லறை சலுகைகளை வீசி, எப்படியாவது மாணவர்களின் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்துவிட வேண்டும் என்பதுதான் அரசின், உயர் நீதிமன்றத்தின் குறிக்கோளாக இருந்தது. காயம்பட்ட மாணவர்களுக்குக் கருணைத் தொகையை வீசிவிட்டு, அவர்கள் வெற்றியை அடைந்து விட்டனர். கேட்கக் கசப்பாக இருந்தாலும் இதுதான் உண்மை.

குறிப்பாக, உயர் நீதிமன்றம் அமைத்த கமிட்டி தனது பரிந்துரையில் சட்டக் கல்லூரி விடுதியில் மாணவர்களின் நடமாட்டத்திற்குப் பலவிதமான கட்டுப்பாடுகளை விதிக்கச் சொல்லி பரிந்துரைத்திருக்கிறது. இன்று, சட்டக் கல்லூரி விடுதியில் அமலாகவுள்ள இந்தக் கட்டுப்பாடுகள் நாளை தமிழகமெங்குமுள்ள அரசு விடுதிகளுக்கு விரிவாக்கப்படும். இந்தக் கட்டுப்பாடுகள் வெளிப்பார்வைக்கு மாணவர்களின் நலனுக்கானது என்பது போன்று தோன்றினாலும், அவற்றின் நோக்கம் மாணவர்களின் அரசியல் - ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதாகும். உயர்நீதி மன்றம் சந்தடி சாக்கில் விடுதிக்கு வெளியே போலீசை நிரந்தரமாக நிறுத்தினால், அசம்பாவிதங்களைத் தவிர்க்கலாம் என ஆலோசனை வழங்கியிருக்கிறது. இது, மாணவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும், வேவு பார்க்கும் போலீசு இராஜ்ஜியம் தவிர வேறென்ன?

மாணவர்கள் போராட்டத்தின் பொழுது, எந்தவொரு ஓட்டுக் கட்சியும் எங்களின் பிரச்சினையில் தலையிட வேண்டாம் எனக் கூறியிருந்தார்கள். இதற்கு ஓட்டுக் கட்சிகளின் மீது இருக்கும் வெறுப்பு மட்டும் காரணமில்லை. ''மாணவர்களுக்கு அரசியல் தேவையில்லை'' என்ற வஞ்சக போதனைக்கும் இதில் பங்குண்டு. மாணவர்களிடத்தில் அரசியல் அற்ற போக்கு வளர வேண்டும் என்றுதான் அரசும், அதிகார வர்க்கமும், ஆளுங் கட்சியும், எதிர்க்கட்சிகளும் கூட விரும்புகின்றன. அரசியல் அற்ற போக்கு எங்கும் வளர்ந்தால்தான், அவர்களால் ஓட்டு மொத்த மக்களின் மீதும் பாசிசத் தாக்குதலை வெற்றிகரமாக நடத்த முடியும்!

''அரசியல் என்றாலே ஓட்டுச் சீட்டு அரசியல் தான்; வேறு எதுவும் கிடையாது'' என்பதே அறியாமையாகும். ஓட்டுச் சீட்டு அரசியலுக்கு எதிரான, அதைப் புறக்கணிக்கும் புரட்சிகர அரசியல் உண்டு என்பதை மாணவர்கள் உணர வேண்டும்.

போராடிய மாணவர்களிடம் இப்புரட்சிகர அரசியல் உணர்வு இருந்திருந்தால், கருணைத் தொகையானது போராட்டத்தைப் பலி கொண்டிருக்காது; அந்த உணர்வு உயர்நீதி மன்றத்தின் அயோக்கியத்தனத்தைப் புரிய வைத்திருக்கும். பிரம்மாண்டமான மாணவர் சக்தியை, இந்த போலீசு தாக்குதலுக்கு எதிராக மட்டுமின்றி, கல்வியின் மீது திணிக்கப்படும் தனியார்மயம், இந்துமயம் என்ற பாசிசத் தாக்குதலுக்கு எதிராகவும் விடாப்பிடியாக போராடத் தூண்டியிருக்கும்.

இப்புரட்சிகர அரசியல் உணர்வை — அறிவைப் பாடப் புத்தகங்களில் தேடிப் பெற முடியாது; மாறாக, புரட்சிகர அமைப்புகளில் இணைந்து பணியாற்றுவதன் மூலமே பெற முடியும்!

● இராசு


**இப்போது விற்பனையில்...**

## ஆணாதிக்கமும் பெண்ணியமும்

- பி. இரயாகரன்




**உலகமயமாதல் தீவிரமாகிய நிலையில் உழைக்கும் மக்களுக்கும் சுரண்டும் வர்க்கத்துக்குமிடையில் இடைவெளி ஆழமாகின்றது. இது பொருளாதாரம், பண்பாடு, கலாச்சாரம், ஆணாதிக்கம் என அனைத்திலும் தீவிரமான பிள்வை நிரந்தரமாக்குகின்றது. இதைக் கடக்க பாட்டாளி வர்க்கம் தன்னை ஆயுதபாணியாக்குகின்றது. அதை நோக்கிய இந்நூல் ஆணாதிக்கத்துக்கு எதிரான தத்துவத்தை ஒழுங்கமைக்கின்றது. (நூலின் முன்னுரையிலிருந்து)**

**பக்கம்: 272** **விலை: ரூ. 90**

*(நூலின் விலையுடன் ரூ. 16.00 சேர்த்து அனுப்பி அஞ்சல் வழியில் நூலைப் பெற்றுக் கொள்ளலாம். 5 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு 25% கழிவு உண்டு.)*

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
10, அவ்லியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.
தொலைபேசி: 044 - 8412367




படிப்பகம்

www.padippakam.com

# புதிய கைக்கூலிகள் பழைய எஜமானர்கள்

ஆப்கான் தலைநகர் காபூலில் ஒரு இடைக்கால அரசை நிறுவியதோடு அமெரிக்காவின் ஆப்கான் போர் அடுத்த கட்டத்தை அடைந்திருக்கிறது. கந்தகார் தவிர ஆப்கானின் பெரும் நகரங்கள் மற்றும் பெரும்பான்மையான பிரதேசங்கள் அனைத்தில் இருந்தும் தாலிபான் படை வெளியேறிவிட்டது. அது காலி செய்து விட்டுப் போன பகுதிகளில் அமெரிக்க அதிரடிப்படையின் மேற்பார்வையில் தாலிபான் எதிர்ப்பு வடக்குக் கூட்டணிப் படைகளின் ஆதிக்கம் நிறுவப்பட்டுள்ளது.

கந்தகார் நகரையும் டோரா போரா மலைப் பிரதேசத்தையும் தக்கவைத்துக் கொள்வதற்காக முல்லா ஓமரின் தாலிபான் மற்றும் ஒசாமா பின்லேடனின் அல்-கொய்தா படைகள் கடுமையாகப் போரிட்டு வருகின்றன. ஆனால், உலகம் முழுவதும் உள்ள செய்தி ஊடகங்கள் இதுவரை செய்ததைப் போலவே இப்போதும் அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம் பென்டகனும், உளவுப் படை சி.ஐ.ஏ. தலைமையகம் உற்பத்தி செய்து வெளியிடும் புனைச் சுருட்டுகளையே செய்திகளாக வாந்தியெடுக்கின்றன.

முன்பு பலமுறை ஆப்கானை விட்டுத் தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்பட்ட முல்லா ஓமர், இப்போது தப்பியோட ஒரு ஒட்டகமோ, மோட்டார் வாகனமோ கொடுத்தால் போதும், கந்தகார் நகரை ஒப்படைத்து விட்டுச் சரணடைந்து விடுவதாக வடக்குக் கூட்டணிப் படைக்குத் தூது அனுப்பியதாகச் செய்தி பரப்பினர். பிறகு முல்லா ஓமரின் கட்டளையை மீறி தாலிபான் படைகள் கந்தகாரில் சரணடைவதாகப் புளுகினர். ஆனால், கந்தகார் நகர் இன்னமும் தாலிபான் வசம்தான் உள்ளது.

அதேபோல, ஒசாமா பின்லேடன் தமது சகாக்களுடன் ஒளிந்து கொண்டிருக்கும் குகை தமக்குத் தெரியுமென்று அமெரிக்க இராணுவத் தளபதியும் அமைச்சரும் பலமுறை புளுகினர். பின்னர், முல்லா ஓமரும் பின்லேடனும் டோரா போரா மலைக் குகைகளில் ஒளிந்து கொண்டிருக்கின்றனர்; வடக்குக் கூட்டணிப் படை அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டுவிட்டது; அது அவர்கள் தப்பி ஓடுவதற்கான வழிகளை அடைத்துவிட்டது என்றும் ஆயிரம் அடிகளுக்குக் கீழே உள்ள மலைக் குகைக்குள்ளும் பாய்ந்து - ஊடுருவிச் சென்று தாக்கி அழிக்கவல்ல குண்டுகளை அமெரிக்க விமானங்கள் வீசி வருவதாகவும் கூறினர்.

அமெரிக்க விமானங்கள் டோரா போரா மலைப் பிரதேசத்தில் இடைவிடாது, இரவு பகலாகக் குண்டுமாரிப் பொழிந்து மலைகளைத் தகர்த்து, காடுகளை அழித்தன. ஆனால், அல்-கொய்தா படைகளை அழித்தாகவோ, முல்லா ஓமரையும், ஒசாமாவையும் பிடித்ததாகவோ செய்திகள் இல்லை. அமெரிக்க குண்டுவீச்சுக்கு அதன் நேச அணியான வடக்குக் கூட்டணிப் படையே பெருமளவில் பலியானதுதான் கண்ட பலன்.

முதலில் முல்லா ஓமரும், ஒசாமாவும் பாகிஸ்தானின் பக்தூனிஸ்தான் மாநில மலைப்பகுதிக்குள் தப்பி ஓடி ஒளிந்து கொண்டதாக அமெரிக்க இராணுவம் கூறியது. பிறகு அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை; அவர்களுக்கு அடைக்கலம் தரும் நாடு எதுவானாலும் அமெரிக்க இராணுவம் புகுந்து பிடித்து வரும் என்று கொக்கரிக்கின்றனர்.

பாகிஸ்தானுக்குள் புகுந்து, ஓமரையும் ஒசாமாவையும் தேடும் வேலையில் அமெரிக்க அதிரடிப்படை இறங்கியுள்ளது. அடுத்து ஏமன், சூடான் ஆகிய நாடுகள் மீது படையெடுக்கும் என்று தெரிகிறது. இதோடு நிற்காது தனது ஆக்கிரமிப்பு வலையை அது மேலும் பல நாடுகளுக்கு விரிக்கும் என்றே தெரிகிறது. முதல் இரண்டு உலகப் போர்களைப் போல வல்லரசுகள் இரு அணிகளாகப் பிரிந்து நடப்பதாக இல்லையானாலும், உலகம் முழுவதையும் மறுகாலனியாக்கி, தனது மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக வேறுவிதமான உலகப் போரை அமெரிக்கா தொடங்கியிருக்கிறது. அதற்கு ஈராக், யுகோஸ்லாவியா, ஆப்கானிஸ்தான் வரிசையில் மேலும் பல நாடுகள் பலியாக இருக்கின்றன.

ஒசாமாவையும் ஓமரையும் பிடிக்கவும், கொல்லவும் முடியாவிட்டாலும் ஆப்கானில் தாலிபானுக்கு ஒரு மாற்று அரசை நிறுவியதன் மூலம், கடந்த பத்தாண்டுகளாக முயன்று வந்தபோதும் ஈராக்கில் சாதிக்க முடியாததை ஒரு சில மாதங்களிலேயே அமெரிக்கா ஆப்கானில் சாதித்துவிட்டது. ஒரு வகையில் அதற்கு வெற்றிதான். ஆனால், இந்த வெற்றிக்கு அமெரிக்காவின் திறன், தகுதி, நியாயம் எதுவும் காரணமில்லை, ஆப்கானில் நிலவிய தனிச்சிறப்பான சில நிலைமைகள்தான் காரணம்.

ஈராக்கை ஆளும் பாசிச பாத், கட்சியையும் இராணுவத்தையும் பிளந்து சதாம் உசைனுக்கு எதிரான தனது கைக்கூலிக் கும்பலை உருவாக்குவதற்கு பத்தாண்டுகளாகப் பல்வேறு முறையில் முயன்றும் அமெரிக்கா வெற்றி பெற முடியவில்லை. ஆனால், ஆப்கானிலோ மதப் பிரிவுகள், இனங்கள், பழங்குடிகள் என்று பிளவுபட்ட படைக

**இடைக்கால அரசின் பிரதமராகப் பதவியேற்கும் சையது ஹமித் கர்சாய் - தனது அமைச்சரவை சகாக்களுடன்: நம்பிக்கையின் விடியலா? மோதலுக்கு முன்னறிவிப்பா?**




படிப்பகம்

ளுக்கிடையே சுமார் பத்தாண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

அங்கு உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள படைப் பிரிவுகளில் பலவும் அமெரிக்க உளவு நிறுவனம் சி.ஐ.ஏ., பாகிஸ்தான் இராணுவ உளவு நிறுவனம் ஐ.எஸ்.ஐ. இவ்விரண்டாலும் நிதியும், பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து உருவாக்கப்பட்டவை. 1980களில் ஆப்கானின் ஆட்சியைக் கைப்பற்றிய சோவியத் ஒன்றியத்தின் கைக்கூலிகள் மற்றும் சோவியத் ஒன்றிய இராணுவத்துக்கு எதிராகப் போரிட்டு ஆப்கானை மீட்பதற்காக, இந்தக் குழுக்கள் முஜாகிதீன்கள் என்கிற பெயரில் உருவாக்கப்பட்டன. 1990-இல் சோவியத் ஒன்றியத்தின் இராணுவம் விரட்டியடிக்கப்பட்டு, அதன் கைக்கூலிகள் ஒழிக்கப்பட்டனர். அதன் பின் ஆப்கானின் ஆட்சி அதிகாரத்துக்காகவும், சுயநல கொள்ளைக்காகவும் முஜாகிதீனின் பல்வேறு பிரிவுகளுக்குள் உள்நாட்டுப் போர் வெடித்து, நாடு முழுவதும் அராஜகம் தலைவிரித்தாடியது.

இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இசுலாமிய மத அடிப்படைவாத - பயங்கரவாத பாசிச அதிகாரத்தை ஆப்கானில் நிறுவியது தாலிபான். பாகிஸ்தானின் மதரசாக்களில் கல்வியும் பயிற்சியும் பெற்ற பத்தானியர்களை இணைத்துத் தாலிபான் அமைப்பை நிறுவியதன் பின்னணியில் இருந்தது சி.ஐ.ஏ.வும், ஐ.எஸ்.ஐ.யும்தான். இதே உளவு நிறுவனங்களால் ஏற்கனவே பாகிஸ்தான் மற்றும் அரபு நாடுகளில் இருந்து அனுப்பப்பட்டு ஆப்கானில் போரிட்டுக் கொண்டிருந்த முஜாகிதீன்களைக் கொண்டு ஒசாமாவின் தலைமையில் நிறுவப்பட்டதுதான் அல்-கொய்தா.

ஆப்கானில் முஜாகிதீனின் பல்வேறு படைப் பிரிவுகளுக்குள் நடந்து வந்த உள்நாட்டுப் போர், அராஜக அதிகாரத்தை வீழ்த்த இசுலாமிய மதவெறி பாசிச பயங்கரவாத ஆட்சியை அல்-கொய்தா படையின் துணையோடு தாலிபான் நிறுவியது. அராஜக அதிகாரத்தை இழந்த அந்தப் படைப்பிரிவுகள் வடக்கிலும், மேற்கிலும் சில பகுதிகளைத் தக்க வைத்துக் கொண்டு வடக்குக் கூட்டணி அமைத்து தாலிபானுக்கு எதிராகப் போரிட்டு வந்தனர். அவர்களுக்கு ரசியா, சீனா, இந்தியா, ஈரான் ஆகிய நாடுகள் உதவி வந்தன. இருந்தபோதும், அமெரிக்காவின் மீதான செப்டம்பர் 11 - பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து தாலிபான் - அல்கொய்தா மீது அமெரிக்கா போர் தொடுத்ததும் வடக்குக் கூட்டணியைத் தன்பக்கம் அது இழுத்துக் கொண்டது. என வேதான், ஈராக்கில் சாதிக்க முடியாததை ஆப்கானில் அமெரிக்கா சாதிக்க முடிந்தது.

ஆனால், ஆப்கானில் அமெரிக்கா நிறுவியுள்ள ஆட்சியதிகாரம் அதற்கு விசுவாசமானது, நம்பகமானது, நிரந்தரமானது என்று கூறிவிட முடியாது. தற்போது ஏற்பட்டிருப்பது ஒரு இடைக்கால ஏற்பாடுதான். அதாவது டிசம்பர் 22 முதல் ஆறுமாதங்களுக்கு 30 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தற்காலிக அமைச்சரவை ஆப்கானை நிர்வகிக்கும். அதன் பிறகு ''லோயா ஜிர்தா'' எனப்படும் பழங்குடி தலைவர்களின் சபை கூடி வேறொரு இடைக்கால நிர்வாகத்தைத் தெரிவு செய்யும் அதுவும் இரண்டு ஆண்டுகளுக்குத்தான். அதன் பிறகுதான் தேர்தல்கள் நடத்தப்பட்டு முறையான ஆட்சி நிறுவப்படும்.



**சிறையிலடைக்கக் கொண்டு செல்லும்முன் வடக்குக் கூட்டணிப் படையினரால் தாக்கப்படும் தாலிபான் போர்க் கைதிகள்: அமெரிக்கா பசப்பும் ஜனநாயக ஆட்சியின் மகிமை!**

இந்த இடைக்கால ஏற்பாட்டிற்கும் கூட அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் பெரும் விலை கொடுக்க வேண்டியுள்ளது. முதல் இடைக்கால ஆட்சியை நடத்த 3,000 கோடி ரூபாயும் அதன் பிறகு அடுத்த பத்தாண்டுகளில் 50,000 கோடி ரூபாயும் உதவி செய்வதாக ஒப்புக் கொண்டுள்ளன. இடைக்கால நிர்வாகம் அமைக்கும் ஏற்பாட்டிற்கு ஒப்புதல் அளிப்பதற்கான விலையாகவே இந்தத் தொகை அளிக்கப்படுகிறது.

ஆனால், ஒப்பந்தம் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே விரிசல்கள் தோன்றிவிட்டன. இடைக்கால அரசின் பிரதமராக கந்தகாரின் யுத்தப் பிரபு சையது ஹமித் கர்சாய் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஆப்கானின் முன்னாள் பத்தானிய அரசர் ஜாகிர் ஷாவின் விசுவாசி. இடைக்கால அரசின் வெளி விவகார, இராணுவ மற்றும் போலீசு ஆகிய முக்கிய அமைச்சர்களாக தாஜிக் இனத்தவர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் வெறுப்புற்ற உஸ்பெக் மற்றும் ஹசாரத் யுத்தப் பிரபுக்கள் இடைக்கால அரசில் சம வாய்ப்புகள் கோருகின்றனர்.

இடைக்கால அரசைப் புறக்கணிக்கப் போவதாக உஸ்பெக் சிறுபான்மை இன யுத்தபிரபு அப்துல் ரஷித் தோஸ்தம் மிரட்டுகிறார். தாஜிக் படைகள் தாக்கக்கூடும் என்று அஞ்சி குண்டூஸ் நகரில் இருந்து தன் படைகளை விலக்கிக் கொண்டுள்ளார். மசாரே செரிப் நகரின் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கும் உஸ்பெக், தாஜிக், ஹசாரத் இனப் படைகளிடையே மோதல்கள் வெடிக்கும் நிலைமை உருவாகி வருகிறது.

ஆப்கானில் யுத்தப் பிரபுக்களுக்கு இடையில் மீண்டும் உள்நாட்டுப் போரும், அராஜகமும் தலைதூக்கும் என்று அஞ்சுவதால் தான் ஆப்கான்போரில் அமெரிக்கா விமான - ஏவுகணைத் தாக்குதல் தொடங்குவதற்கு முன்பாக அமெரிக்க - பிரெஞ்சு - பிரிட்டன் மற்றும் ருசிய இராணுவக் கூட்டுக் குழுக்களை இறக்கி, வடக்குக் கூட்டணியின் படைப்பிரிவுகள் அவற்றின் மேற்பார்வையில் வைக்கப்பட்டன. வடக்குக் கூட்டணி மற்றும் பத்தானிய யுத்தப் பிரபுக்கள் மீது நம்பிக்கை வைக்காமல் தனது அதிரடிப்படையை நவீன கவச வாகனங்கள் - டாங்குகளோடு கந்தகாரில்

**தாலிபான் போர்க் கைதிகளைப் பொது இடத்தில் சுட்டுக் கொன்று காலால் எட்டி உதைக்கும் வடக்குக் கூட்டணிப் படையின் வக்கிரம்.**



www.padippakam.com

தரை இறக்கியிருக்கிறது அமெரிக்கா. அதுமட்டுமல்ல; இடைக்கால நிர்வாக ஒப்பந்தப்படி ஆப்கானின் எல்லா படைப்பிரிவுகளையும் கொட்டடிகளுக்கு அனுப்பிவிட்டு, பிரிட்டனின் தலைமையிலான பன்னாட்டுப் படைகள் இறக்கிவிடப்படுகின்றன. அமைதிப் படை எனப்படும் அந்த ஆக்கிரமிப்புப் படையிலும் பெரும்பான்மையினர், அமெரிக்கா தலைமையிலான ''நேட்டோ'' படையைச் சேர்ந்தவர்கள்.

ஆப்கானில் இருந்து தாலிபான் - அல்-கொய்தா பயங்கரவாத ஆட்சியை வீழ்த்தி ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை பேணும் ஒரு மாற்று அரசை நிறுவப் போவதாக அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் பசப்பி வந்தது பச்சைப் பொய் என்பதற்கு அவர்கள் இப்போது அமைத்திருக்கும் இடைக்கால நிர்வாகமே சாட்சியமாக விளங்குகிறது.

தாலிபான்கள் எவ்வளவு கொடூரமான, குரூரமான பாசிச பயங்கரவாதிகளோ அதைவிட வடக்குக் கூட்டணி மற்றும் பிற யுத்த பிரபுக்களின் கொடூரம், குரூரம், பாசிச பயங்கரவாதம் குறைவானதில்லை. இவர்களும் இசுலாமிய மதவெறி பயங்கரவாதிகள்தாம் என்றாலும், தாலிபான்களைப் போல மதரசா கல்வியும், பயிற்சியும், இசுலாமிய அடிப்படைவாத போதனையும் பெற்றவர்கள் அல்ல. எனவே, தாலிபான்களின் ஒழுங்கு முறைக்கு மாறாக, அராஜகமே தாலிபான் எதிர்ப்புப் படையின் பண்பாக உள்ளது.

1996-இல் தாலிபான்கள் காபூலுக்குள் நுழைந்தபோது சையது ஷா மசூதின் தலைமையிலான தாலிபான் எதிர்ப்புப் படை முற்றாகக் காலி செய்து கொண்டு வெளியேறி இருந்தது. தாலிபான்கள் தமது வெறித்தனத்தைக் காட்டுவதற்கு வாய்ப்பில்லாத நிலையில் ஐ.நா. சபை வளாகத்துக்குள் புகுந்தனர். நான்காண்டுகளாக அங்கு தஞ்சம் புகுந்திருந்த ஆப்கானின் முன்னாள் ஆட்சியாளரும், சோவியத் ஒன்றியத்தின் கைக்கூலியும் போலி கம்யூனிஸ்டுமான முகமது நஜிபுல்லாவை வெளியே இழுத்து வந்தனர். அவரது ஆணுறுப்பை வெட்டி, வாயில் திணித்து, ஒரு ஜீப்பின் பின்னே கட்டி தரதரவென்று காபூல் நகரச் சாலைகளில் இழுத்துப் போயினர். குரூரமான அந்தச் சித்திரவதையினால் மாண்டு போன நஜீப்பையும் அவரது சகாக்களையும் பொது இடத்தில் தூக்கில் தொங்கவிட்டு அவமானப்படுத்தினர்.

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, காபூலுக்குள் வடக்குக் கூட்டணிப் படைகள் நுழைந்தபோது, பழி தீர்த்துக் கொள்வதற்கு



**தாலிபான்களின் வெறியாட்டம்: குரூரமான சித்திரவதைக்குப் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டு பொது இடத்தில் தூக்கில் தொங்கவிடப்பட்ட முன்னாள் ஆப்கான் அதிபர் நஜிபுல்லா.**

தாலிபான்களை வெறியோடு தேடினர். ஒருவரும் சிக்கவில்லை. தாலிபான்களைப் போல வெளியேறாது பின்தங்கிவிட்ட அவர்களின் பாகிஸ்தானிய - அராபியப் போராளிகள் மட்டுமே பிடிபட்டனர். அவர்களை வெட்டியும், துப்பாக்கியால் சல்லடையாகத் துளைத்தும் மரக்கிளைகளிலும், விளக்குக் கம்பங்களிலும் தொங்கவிட்டனர். அதற்கான வாய்ப்பில்லாதபோது, கொல்லப்பட்ட பாகிஸ்தானி - அராபிய எதிரிகளை சாலை ஓரங்களிலும் சாக்கடைகளிலும் வீசினர். தாலிபான்கள் தாடி வைக்காதவர்களை மத விரோதிகள் என்று கூறிக் கொன்றனர். தாலிபான் எதிர்ப்புப் படையினரோ தாடி வைத்தவர்களை தாலிபான் - அல்கொய்தா படையினர் என்று கூறிக் கொன்றனர்.

ஆக, ஆப்கானில் போரிட்டுக் கொண்டிருக்கும் வடக்குக் கூட்டணி மற்றும் அதன் பக்கம் நிற்கும் பத்தானிய யுத்தப் பிரபுகளின் தரப்பும் சரி, தாலிபான் -

**அமைதிப்படை என்ற பெயரில் ஆப்கானில் குவிக்கப்படும் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு ஆக்கிரமிப்புப் படை.**



அல்கெய்தா தரப்பும் சரி இரண்டுமே பாசிச பயங்கரவாதப் பண்புடையவை. ஆனால், தாலிபான் - அல்கொய்தா படைகளோ, உலகின் கொடிய மேலாதிக்க பயங்கரவாதியும் ஆக்கிரமிப்பாளனுமான அமெரிக்க மேல்நிலை வல்லரசை எதிர்த்துப் போரிடுகிறது. இந்தக் கொடிய ஆக்கிரமிப்பு சக்தியுடன் வடக்குக் கூட்டணிப் படைகளும், பத்தானிய யுத்தப் பிரபுகளும் ''தேச துரோக'' அணி சேர்ந்துள்ளனர்.

இந்த நிலையில், உலகப் புரட்சிகர, ஜனநாயக சக்திகளில் ஒரு பிரிவினர் என்ன அரசியல் முடிவெடுக்க வேண்டும் என்பதில் மீண்டும் ஒருமுறை தமது தடுமாற்றத்தைக் காட்டுகின்றனர். தாலிபான் - அல்கொய்தா படையினர் என்னதான் இசுலாமிய மத அடிப்படைவாத, பாசிச, பயங்கரவாதிகளாக இருந்தாலும், அவர்கள் உலகின் கொடிய மேலாதிக்க பயங்கரவாதியும் ஆக்கிரமிப்பாளனுமாகிய அமெரிக்கா மற்றும் அதன் துரோகப் படைகளை எதிர்த்து தாய்நாட்டைக் காப்பதற்காகப் போரிடுகின்றனர்; ஆகவே, அமெரிக்காவும் துரோகப் படைகளும்தான் முதன்மையான எதிரிகள் என்று புரட்சிகர, ஜனநாயக சக்திகளில் ஒரு பிரிவினர் வாதிடுகின்றனர்.

இந்த வாதத்துக்கு ஆதரவாக முன்பு சோசலிச சோவியத் ஒன்றியத்தின் தலைவர் ஸ்டாலின் கூறிய ஒரு கருத்தை எடுத்துக் காட்டுகின்றனர். அப்போது, 'ஆப்கானின் அமீர் - அரசன் - எவ்வளவுதான் பிற்போக்கான, ஜனநாயக விரோதியாக இருந்த போதும் பிரிட்டிசு ஆக்கிரமிப்பாளனை எதிர்த்துப் போரிடுவதால் அந்த தேசிய விடுதலைப் போரை ஆதரிப்பதுதான் சரியாகும்'' என்று ஸ்டாலின் கூறினார். இந்தக் கருத்தைத்தான் பத்தாண்டுகளுக்கு முன்பு ஈராக் குவைத்தை ஆக்கிரமித்துக் கொண்டதை எதிர்த்து அமெரிக்கா போரில் இறங்கியபோதும் எடுத்துக்காட்டி, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈராக்கை ஆதரிக்க வேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர். அதன்பிறகு போஸ்னியா, கொசாவோ போன்ற தேசிய இனங்களை ஒடுக்கிய யூகோஸ்லாவியாவின் மீது அமெரிக்கா போர் தொடுத்த போதும், இதே போல யூகோஸ்லாவிய பாசிச கொடுங்கோன்மை அரசை ஆதரிக்க வேண்டும் என்று வாதிட்டனர்.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடும் சக்திகள் எதுவானாலும், தேசிய இனவிடுதலைக்குப் போரிடும் சக்திகள் எதுவானாலும் ஆதரிக்க வேண்டும் என்கிற பார்வை இயந்திரத்தன்மையுடையது; குருட்டுத்தனமானது. இன்றைய உலகில் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய



படிப்பகம்

www.padippakam.com

மேல்நிலை வல்லரசுகள் மட்டுமல்லாது இந்தியா, ஈராக், இசுரேல், யுகோஸ்லாவியா போன்ற துணை வல்லரசுகள் தோன்றி தேசிய இன ஒடுக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புகளில் ஈடுபடுகின்றன. தேசிய இன விடுதலையை முன் வைத்துப் போரிடும் குழுக்களிலும் கூட தேசிய இன வெறி - மதவெறி பாசிசத் தன்மையுடையவையும் உள்ளன. எடுத்துக்காட்டுகளாக பஞ்சாபின் காலிஸ்தானி, ஈழத்தின் விடுதலைப் புலிகள், காசுமீரில் பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதக் குழுக்கள், திரிபுராவில் திரிபுரா யுவ சாமாஜ் ஜுப சமிதி போன்றவை.

இப்படிப்பட்ட சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய இன விடுதலை என்கிற பெயரில் தமது துணை மேலாதிக்க, பிராந்திய விரிவாக்க மற்றும் குறுகிய தேசிய இன வெறி - மதவெறி, பாசிச நோக்கங்களுக்கான போரில் ஈடுபடுகின்றன. எட்டாண்டுகள் அமெரிக்கக் கைக்கூலிப்படை என்கிற முறையில் ஈரானுக்கு எதிரான ஆக்கிரமிப்புப் போரில் ஈடுபட்டிருந்த ஈராக், குவைத் ஆக்கிரமிப்பின் விளைவாக அமெரிக்காவின் அராபிய எண்ணெய் வள நலன்களுக்கு ஊறு விளைவித்தது. இதன் மூலம் அமெரிக்காவின் தாக்குதலுக்கு உள்ளாகும்வரை, அரபு - இசுலாமிய மக்களுக்கு எதிரான அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டுமென ஈராக்குக்குத் தெரியவில்லை.

அதேபோல, ஈரான் மீதான ஒடுக்குமுறையை ஏவியபோது, ஈரான் - ஈராக் போருக்கான சூத்திரதாரியாக இருந்தபோது, ஆப்கானில் கூலிப்படையை உருவாக்கியபோது, அமெரிக்காவின் உலக மேலாதிக்க பாசிச பயங்கரவாதமோ அதன் ஒரு பகுதியாக பாலஸ்தீன, ஈராக்கிய இசுலாமிய மக்கள் மீதான கொலைவெறித் தாக்குதல்களோ தாலிபான், அல்-கொய்தா ஆகிய இசுலாமிய மதவெறி அடிப்படைவாத - பயங்கரவாதிகளுக்குத் தெரியவில்லை.

ஆகவே, ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் தேசிய இன விடுதலை என்கிற பெயரில் நடக்கும் போர்களின் ஒவ்வொரு வழக்கையும் பருண்மையாகப் பரிசீலித்து, அவற்றில் சரியான, முற்போக்கான, உண்மையான சக்திகளை மட்டுமே ஆதரிக்க முடியும். ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போரை எதிர்க்கும் அதேசமயம், பிற்போக்கான உலகளாவிய இசுலாமிய வாதம், மதவெறி அடிப்படைவாதம், பாசிச பயங்கரம் ஆகியவற்றைக் கொண்ட தாலிபான் - அல்கொய்தா படைகளை ஆதரிப்பது தவறானதாகும். இதன் பொருள் இருதரப்பையும் சமமாகப் பார்ப்பதோ, நடுநிலையாக நிற்பதோ அல்ல. இருதரப்பையும் எதிர்த்து மூன்றாவது சக்தியை உருவாக்குவதற்கான அரசியலை முன்வைப்பதுதான்.

● ஆர்.கே.




# இந்துவெறிக் கூட்டணிக்கு "பொடோ" இடதுசாரி முன்னணிக்கு "பொகா"

"கிளிண்டனே திரும்பிப் போ!" - உலக மேலாதிக்கப் போர் வெறியனும் (முன்னாள்) அமெரிக்க அதிபருமான பில் கிளிண்டன் 2000-வது ஆண்டில் இந்தியாவுக்கு வந்தபோது, புரட்சிகர அமைப்புகளும் ஜனநாயகவாதிகளும் நாடெங்கும் எழுப்பிய முழக்கம் இது. புரட்சி பேசும் போலி கம்யூனிஸ்டுகளும் "கிளிண்டனே திரும்பிப் போ!" என்று முழக்கமிட்டார்கள். 'இடதுசாரி' கூட்டணிக் கட்சிகளும் அவற்றின் மக்கள் திரள் அமைப்புகளும் மே.வங்கத்தில் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. ஏகாதிபத்திய எதிர்ப்பு - ஜனநாயகவாதிகளாகக் காட்டிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகள், தாங்கள் ஆளும் மே.வங்கத்தில் கிளிண்டனை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தோரைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளார்கள் என்றால், அதை நம்ப முடியுமா? நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும்!

கிளிண்டன் இந்தியாவுக்கு வந்து சென்று ஏறத்தாழ எட்டு மாதங்களுக்குப் பிறகு, அதாவது கடந்த 2001-ஆம் ஆண்டு ஜூலையில் தீபா சர்க்கார், சுகோலிமண்டி எனும் இரு இளம்பெண்களை மித்னாபூர் மாவட்டத்திலுள்ள சால்போனி நகரில் மே.வங்கப் போலீசார் கைது செய்தனர். அவர்கள் "கிளிண்டனே, திரும்பிப்போ!" என்ற முழக்கத்துடன் கூடிய துண்டுப் பிரசுரங்களை வைத்திருந்தனர் என்று கைதுக்குக் காரணம் கூறியது, போலீசு. பின்னர் அவர்கள் 'அரசைக் கவிழ்க்க சதி' செய்ததாகக் குற்றஞ்சாட்டிச் சிறையிலடைத்தது. வழக்கு மன்றம் அவ்விரு இளம்பெண்களையும் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டது. ஆனால், மே.வங்கப் போலீசார் மீண்டும் அவர்களை அதே குற்றத்திற்காகக் கைது செய்து மீண்டும் சிறையிலடைத்துள்ளனர். ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு மேலாகியும் இன்னமும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. ஏனெனில் குற்றம் சாட்டப்பட்ட இவ்விரு இளம்பெண்களும் நக்சல்பாரி புரட்சிகர அமைப்பைச் சேர்ந்தவர்கள்!

கிளிண்டனை எதிர்க்கலாம்; ஆர்ப்பாட்டம் நடத்தலாம்; தவறில்லை. அது ஒரு ஜனநாயக சடங்குதானே தவிர, உண்மையில் அது எதிர்ப்பு அல்ல. சடங்குப்படி எதிர்க்கும் ஓட்டுக் கட்சிகள் என்றால், சடங்குப்படி கைது செய்யப்பட்டு, உடனே விடுதலை கிடைக்கும். ஆனால், புரட்சிகர அமைப்பினர் என்றால், சிறையிலடைத்து வதைப்போம் என்கிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள்.

கைதான இவர்களாவது இளம் பெண்கள்; ஆனால், 77 வயதான முதியவர் ஒருவர் அரசைக் கவிழ்க்க சதி செய்தார் என்று போலி கம்யூனிஸ்டுகள் குற்றம் சாட்டினால், அதை நம்ப முடியுமா? நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும்!

"ஏனெனில், தள்ளாத வயதிலுள்ள பிது பூஷண் மஹடோ எனும் அம்முதியவர் கையிலே 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' எனும் நூலை வைத்திருந்தார். அதிலுள்ள வாசகங்கள் தற்போது நிலவும் அரசியலமைப்பைத் தூக்கி எறியுமாறு அறைகூவுகின்றன. எனவேதான் அவரை அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றம் சாட்டி சிறையிலடைத்துள்ளோம்" என்கின்றனர், போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கப் போலீசார்.

தொடர்ச்சி 20-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# தோஹா மாநாடு: மறுகாலனியாதிக்கத்தில் புதிய அத்தியாயம்

உலக வர்த்தகக் கழகத்தின் நான்காவது அமைச்சர்கள் மாநாடு, மேற்காசியாவிலுள்ள கத்தார் நாட்டுத் தலைநகர் தோஹாவில், கடந்த நவம்பர் மாதம் நடந்து முடிந்தது. உலக வர்த்தகக் கழகத்தின் இந்த மாநாடு பற்றி ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால், ஏழை நாடுகளின் மீது ஏகாதிபத்தியங்கள் திணித்து வரும் மறுகாலனி ஆதிக்கத்தில் ஒரு புதிய அத்தியாயம் தோஹாவில் தொடங்கப்பட்டிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவின் சியாட்டில் நகரில் நடந்த மூன்றாவது மாநாட்டைப் போல, இந்த நான்காவது மாநாடு தோல்வியடைந்து விடக்கூடாது என்ற வெறியோடு இருந்த ஏகாதிபத்திய நாடுகள், ''வர்த்தக முதலீடு; வர்த்தகப் போட்டி; வர்த்தக வரிகள்; அரசாங்கக் கொள்முதல்'' என்ற நான்கு புதிய அம்சங்களை இந்த மாநாட்டில் தீர்மானித்துவிட வேண்டும் என்பதில் குறியாக இருந்தன.

இதற்கு மாறாக, ஏழை நாடுகள் ''புதிய அம்சங்கள் எதையும் மாநாட்டில் தீர்மானிக்க அனுமதிக்கக் கூடாது; ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை ஏகாதிபத்திய நாடுகள் முழுமையாக, முறையாக அமல்படுத்துவதில்லை; அந்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தும் பிரச்சினையைத்தான் இந்த மாநாட்டில் பேசித் தீர்க்க வேண்டும்'' என அறிவித்தன.

இந்த முரண்பாடு காரணமாக, ஓட்டுக் கட்சிகள், முதலாளித்துவப் பத்திரிகைகள், பொருளாதார நிபுணர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த தோஹா மாநாட்டை ஏழை நாடுகளுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையே நடக்கும் குத்துச் சண்டையாகவே வருணித்தன. இந்தக் கோதாவில் இந்தியா, ஏழை நாடுகளின் தலைவனாகத் தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்டது.

தோஹா மாநாடு தொடங்குவதற்கு முன்பாகவே, உலக வர்த்தகக் கழகம் ஒரு நகல் தீர்மானத்தைத் தயாரித்து, உறுப்பு நாடுகளிடம் சுற்றுக்கு விட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தை பெரும்பான்மையான ஏழை நாடுகள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டதால், மாநாட்டின் இறுதி நாளான நவம்பர் 13 அன்று புதிய நகல் தீர்மானம் தயாரிக்கப்பட்டது. இத்தீர்மானத்தையும் இந்தியா உள்ளிட்ட சில ஏழை நாடுகள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதால், மாநாடு மேலும் ஒருநாள் நீட்டிக்கப்பட்டு நடந்தது. ஆறாவது நாளின் (நவ.14) அதிகாலையில் அறிவிக்கப்பட்ட நகல் தீர்மானம், இரண்டு விளக்கங்களோடு, அனைத்து உறுப்பு நாடுகளாலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இப்படி ஏழை நாடுகளின் விருப்பத்திற்கு இணங்க தீர்மானம் மாற்றியமைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு இருப்பதை, ஏழை நாடுகள் அனைத்தும் தங்களின் வெற்றியாகக் கூறிக் கொள்கின்றன. ஆனால், ஏழை நாடுகளின் இந்த வெற்றி, ''அறுவைச் சிகிச்சை வெற்றி; நோயாளி இறந்துவிட்டார்'' என்ற கதையாகப் போனதுதான் உண்மை!

''உலக வர்த்தகக் கழகத்தில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களை ஏகாதிபத்திய நாடுகள் நாணயமாக நிறைவேற்ற வேண்டும்; ஐரோப்பிய நாடுகள் விவசாயத்திற்குக் கொடுக்கும் மானியத்தைக் குறைத்துக் கொண்டு, விவசாயப் பொருட்களுக்கான ஐரோப்பிய சந்தையை ஏழைநாடுகளுக்குத் திறந்துவிட வேண்டும்; ஏழை நாடுகள் அமெரிக்காவிற்குத் துணி ஏற்றுமதி செய்வதற்கு இருக்கும் அளவுக் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும்'' என வரிந்து கட்டிக் கொண்டு தோஹாவிற்குப் போன ஏழை நாடுகளுக்கு உ.வ.க.வின் தீர்மானத்தில் கிடைத்திருப்பது ''ஆகட்டும் பார்க்கலாம்'' என்ற வெற்று வாக்குறுதிகள்தான்.

ஏழை நாடுகள், விவசாயத்திற்கு 1000 கோடி, 2000 கோடி எனக் கொடுத்துவரும் மானியத்தை நிறுத்த வேண்டும் என உத்தரவு போட்டு மிரட்டும் உ.வ.க., ஐரோப்பிய நாடுகள் விவசாயத்திற்கு 15 இலட்சம் கோடி ரூபாய் மானியம் ஒதுக்கி வருவதைக் குறைப்பது பற்றி ''2003-ஆம் ஆண்டுக்குப் பிறகு பேசித் தீர்க்கலாம்'' என நழுவிக் கொண்டு விட்டது.

அதேசமயம், ஏகாதிபத்திய நாடுகள், சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கும் தந்திரத்தோடு, உயிர் காக்கும் மருந்துகள் தயாரிப்பதைக் கட்டுப்படுத்தும் அறிவுசார் சொத்துடைமைக் காப்புரிமைச் சட்டத்தில் ஒரேஒரு அற்பத்தனமான சலுகையை ஏழை நாடுகளுக்குக் கொடுத்துவிட்டு, ''வர்த்தக முதலீடு; வர்த்தகப் போட்டி; வர்த்தக வரிகள்; அரசாங்கக் கொள்முதல்'' என்ற புதிய அம்சங்களை உ.வ.க.வில் திணித்துவிட்டன.

''2003-ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெறவுள்ள ஐந்தாவது மாநாட்டின் பொழுது, இப்புதிய விசயங்கள் குறித்து விவாதிப்பது தொடர்பாக உ.வ.க.வின் உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும்; 2005-ஆம் ஆண்டிற்குள் இப்புதிய அம்சங்கள் மட்டு

**தோஹாவில் நடந்த உலக வர்த்தகக் கழகத்தின் நான்காவது அமைச்சரவை மாநாடு: மறுகாலனி ஆதிக்கத்தில் புதிய அத்தியாயத்தின் தொடக்கம்.**





படிப்பகம்

www.padippakam.com

மின்றி, தொழிலாளர் நலன், சுற்றுப்புறச் சூழல் குறித்தும் உ.வ.க.வில் சட்டங்கள் இயற்றப்படவேண்டும்'' என தோஹா மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

***

ஏகாதிபத்திய நாடுகள் உலக வர்த்தகக் கழகத்தின் மூலம் திணிக்கத் துடிக்கும் வர்த்தகம் சார்ந்த முதலீட்டு நடவடிக்கைகள், வெளிநாட்டு மூலதனத்திற்கும், உள்நாட்டு (தேசிய) மூலதனத்திற்கும் இடையே எந்தவிதப் பாகுபாடும் இருக்கக் கூடாது என நிபந்தனை விதிக்கிறது. இதன்படி, இராணுவம் போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழையக் கூடாது என ஏழை நாடுகள் நிபந்தனை விதிக்க முடியாது. மேலும், பன்னாட்டு நிறுவனங்கள் தாங்கள் விரும்பும் (ஏழை நாடுகளின்) எந்தவொரு துறையிலும், அளவுக் கட்டுப்பாடு எதுவுமின்றி, 100 சதவீத அளவுக்கு மூலதனம் போடவும் அனுமதிக்க வேண்டும். இதன்படி, இந்தியாவின் வங்கி, காப்பீடு துறைகளில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மூலதனக் கட்டுப்பாடுகள் 2005-ஆம் ஆண்டுக்குப் பிறகு செல்லாக் காசாகிவிடும்.

''வர்த்தக வரிகள்'' குறித்து உ.வ.க.வில் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தை, வர்த்தகத்தின் மீது வரி விதிக்கும் இறையாண்மையை, ஏழை நாடுகளிடமிருந்து தட்டிப் பறிக்கிறது. குறிப்பாக, பன்னாட்டு நிறுவனங்களிடம் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது விதிக்கப்படும் சுங்க வரியை ஏழை நாடுகள் படிப்படியாகக் குறைக்க வேண்டும் எனக் கட்டளை போட்ட ஏகாதிபத்திய நாடுகள், இனி, ஏழை நாடுகள் அந்த உரிமையை உ.வ.க.விடம் தாரை வார்த்துவிட வேண்டும் என நிர்ப்பந்திக்கின்றன.

உ.வ.க.வில் விவாதிக்கப்படவுள்ள ''அரசு கொள்முதல்'' என்ற புதிய அம்சத்தை எடுத்துக் கொண்டால், ஏழை நாடுகள் தங்கள் நாட்டு விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்யலாமா, கூடாதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை உ.வ.க.விடம் போய் விடும். ஏழை நாடுகள் தங்கள் நாடுகளின் சிறு தொழிலையும், பொதுத்துறையையும் பாதுகாப்பதற்காக, அரசிற்குத் தேவைப்படும் பொருட்களை அந்நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன. உ.வ.க. இந்த வழக்கத்திற்கு மங்களம் பாடுமாறு ஏழை நாடுகளிடம் 'விவாதிக்கும்''! ஏழை நாடுகளின் அரசுகள் தங்களுக்குத் தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்கு விடும். ''டெண்டர்''களில், எவ்விதப் பாகுபாடும் இன்றி பன்னாட்டு நிறுவனங்களும் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் எனக் கோரும்.




**உலக வர்த்தகக் கழகத்தில் தைவான் இணைவதை எதிர்த்து அந்நாட்டுத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம்.**

அணுக் கழிவுகளாலும், ஆலைக் கழிவுகளாலும் உலகின் சுற்றுப்புறச் சூழலை நஞ்சாக்கி, நாசப்படுத்தி வரும் ஏகாதிபத்திய நாடுகளும், பன்னாட்டு நிறுவனங்களும் சுற்றுப்புறச் சூழல் குறித்து உ.வ.க.வில் விவாதிக்க வேண்டும் எனக் கோருவது, ஆடு நனைகிறது என ஓநாய் அழுத கதையைவிட வஞ்சகம் நிறைந்தது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு என்ற போர்வையில், ஏழை நாடுகளின் இயற்கை வளங்களை எவ்விதத் தடையும் இன்றிப் பன்னாட்டு நிறுவனங்கள் சூறையாடும் உரிமையினைத்தான் ஏகாதிபத்தியங்கள் கேட்கின்றன.

சுருக்கமாகச் சொன்னால், இந்தப் புதிய விசயங்கள் குறித்து உ.வ.க.வில் நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தைகள், ஏழை நாடுகளிடம் அற்பசொற்பமாக மிஞ்சியிருக்கும் அரசியல், பொருளாதார உரிமைகளையும், இறையாண்மையையும் பறித்து, அந்நாடுகளை முழுமையாக ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்படுத்தும்; உ.வ.க.வில் உறுப்பு நாடுகளாகவுள்ள ஏழை நாடுகளின் அரசுகள் அனைத்தும் எவ்வித ஒளிவும் மறைவும் இன்றி ஏகாதிபத்தியங்களின் கைக்கூலிகளாகச் செயல்படும். அதனால்தான் இப்புதிய சுற்றுப் பேச்சு வார்த்தை, டங்கல் ஒப்பந்தத்தையும், உ.வ.க.வையும் உருவாக்கிய உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு இணையாகக் கூறப்படுகிறது!

ஏழை நாடுகளின் அரசுகள், தங்களின் இந்தத் துரோகத்தை அறிவுசார் சொத்துடமை விவகாரத்தில் கிடைத்த 'வெற்றி'யைக் காட்டி மூடி மறைத்துவிட முயலுகின்றன. முதலாளித்துவப் பத்திரிகைகள் உள்ளிட்ட ஏகாதிபத்திய தரகுக் கும்பல், இந்த 'வெற்றி'யின் மூலம் உலக வர்த்தகக் கழகத்தை ஒரு ஜனநாயக அமைப்பாகக் காட்டி ஏய்க்கின்றன.

''எய்ட்ஸ், மலேரியா போன்ற கொள்ளை நோயால் ஒரு நாடு தாக்கப்படும் பொழுது, அந்த நாடு ஓர் அவசரகால நிவாரணமாக, அறிவுசார் சொத்துடைமையை மீறி, அந்த நோய்க்குத் தேவைப்படும் மருந்தை உள்நாட்டில் தயாரிக்கலாம்'' என்பதுதான் தோஹா மாநாட்டில் அறிவிக்கப்பட்டிருக்கும் சலுகை.

முதலாவதாக, இந்தச் சலுகையை ஓர் அவசரகால நிவாரணமாக மருந்துப் பொருட்களைத் தயாரிப்பதற்கு மட்டும்தான் பயன்படுத்த முடியுமேயொழிய, காப்புரிமை தரப்பட்டுள்ள வேறு பொருட்களைத் தயாரித்து விற்பதற்கு பயன்படுத்த முடியாது; இரண்டாவதாக, ஏகாதிபத்திய நாடுகளைப் பொருத்தவரையில், இந்தச் சலுகை ஏற்கனவே அறிவுசார் சொத்துடைமை சட்டத்தில் வழங்கப்பட்டிருப்பதுதானே தவிர, புதியதில்லை. ''புதிய மொந்தை பழைய கள்ளு'' என்ற பாணியில், இப்பொழுது இந்தச் சலுகை அரசியல் தீர்மானமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சலுகையைப் பயன்படுத்தி காப்புரிமையை மீறி மருந்துப் பொருளைத் தயாரிக்கும் நாடுகளின் மீது, காப்புரிமை பெற்றிருக்கும் பன்னாட்டு நிறுவனம் உ.வ.க.வில் வழக்கு தொடுப்பதற்கும் உரிமையுண்டு; மேலும்; சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு காப்புரிமையை மீறி மருந்துப் பொருளைத் தயாரிக்கும் வசதியில்லாத ஏழை நாடுகள், அந்த மருந்துகளை குறைந்த விலையில் தயாரிக்கும் பிற ஏழை நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்து கொள்ளுவது பற்றி உ.வ.க. வாயே திறக்கவில்லை. இதனால், மருந்து தயாரிக்க வசதியில்லாத ஏழை நாடுகள், காப்புரிமை பெற்ற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து மருந்துகளைப் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஏகாதிபத்திய நாடுகள் எந்தவொரு இலாபமும் பார்க்காமல், இந்த அற்பச் சலுகையை ஏழை நாடுகளுக்குத் தூக்கிக் கொடுத்துவிடவில்லை. 'எய்ட்ஸ்' நோயின் காரணமாக ஆப்பிரிக்காவிலும், 'ஆந்த்ராக்ஸ்' பீதியினால் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அம்பலப்பட்டுப் போயுள்ள பன்னாட்டு மருந்து நிறுவனங்கள் இந்தச் சலுகையை வழங்கியதன் மூலம் தங்களை சமூக அக்கறையுள்ள நிறுவனங்களாகக் காட்டிக் கொண்டன. இரண்டாவதாக, ''புதிய அம்சங்களை மாநாட்டுத் தீர்மானத்தில் சேர்க்கக் கூடாது'' என வீராப்புப் பேசிக் கொண்டிருந்த ஏழை நாடுகளை வீழ்த்துவதற்கு இந்தச் சலுகையைத்தான் ஏகாதிபத்தியங்கள் தூண்டில் மீனாகப் பயன்படுத்திக் கொண்டன.


படிப்பகம்

www.padippakam.com

தோஹா மாநாட்டு தீர்மானத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அற்பச் சலுகைகளையும், வெற்று வாக்குறுதிகளையும் பா.ஜ.க. கூட்டணி அரசு ஒலிம்பிக்கில் கிடைத்த தங்கப்பதக்கம் போல வருணிக்கிறது; உள்நாட்டில் ஏகாதிபத்தியங்களின் காலை நக்கிக் கொண்டிருக்கும் மாறன், மாநாட்டின் இறுதி நாள் வரை ஏகாதிபத்திய நாடுகளோடு கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருப்பதையே ஏகாதிபத்திய எதிர்ப்பு போலக் காட்டி, ஊரை ஏய்க்கவும் பார்க்கிறது.

தோஹா மாநாடு பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகளுக்கு ஒலிம்பிக் வெற்றி என்றால், காங்கிரசு, கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு இந்தியாவின் தோல்வி. அவைகளைப் பொருத்தவரை தோஹா மாநாடு, நாட்டின் இறையாண்மை அடகு போன விசயமல்ல. ஐரோப்பாவின் விவசாயச் சந்தையும், அமெரிக்காவின் துணிச் சந்தையும் திறந்துவிடப்பட்டிருந்தால், எதிர்க்கட்சிகள் கூட இந்தியாவின் 'வெற்றி'யைக் கொண்டாடியிருப்பார்கள். எனவே, எதிர்க்கட்சிகளின் விமர்சனத்தை வேறு மாதிரியாகச் சொன்னால், இந்தியா வெற்றிகரமாக மறு அடகு வைக்கப்படவில்லை என்பது தவிர வேறில்லை.

''இப்புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகளால் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் 55,000 கோடி ரூபாயாக உயரும்; எனவே, இந்தியா ஏடாகூடமாக எதையாவது செய்து தனிமைப்பட்டு போய்விடக் கூடாது'' என ஏகாதிபத்திய தரகுக் கும்பல் ஓட்டுக் கட்சிகளுக்கு அறிவுரைகளை அள்ளி வீசுகிறது. ஆனால், பீற்றிக் கொள்ளப்படும் இந்த ஏற்றுமதி வர்த்தக வளர்ச்சியினால் பயனடையப் போகும் இந்தியர் யார் என்பதுதான் நமது கேள்வி?

ஆந்திராவிலும், கர்நாடகாவிலும், பஞ்சாபிலும் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள், ஐரோப்பியச் சந்தை தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்ற விரக்தியிலா உயிரை மாய்த்துக் கொண்டார்கள்? ''பொதுத்துறையில் ஆட்குறைப்பு செய்; தொழிலாளர்களுக்கு போனசு கொடுக்காதே'' எனக் கட்டளை போடுகிறது, உலக வங்கி. தொழிலாளர் நலன் பற்றிப் பேசும் உலக வர்த்தகக் கழகம், உலக வங்கியின் இந்தத் தாக்குதலைத் தடுத்து நிறுத்திவிடப் போகிறதா?

ஏகாதிபத்திய தரகுக் கும்பல் தேன் தடவிக் கூறும் ''உலகச் சந்தை'' எனும் மோசடிக்கு இந்தியத் தொழிலாளர்களும், விவசாயிகளும் பலியாவதைவிட, உலக வர்த்தகக் கழகத்தை எதிர்த்து நடந்துவரும் புரட்சிகரப் போராட்டத்தில் இணைய முன்வரவேண்டும். அது ஒன்றுதான் இந்தியாவின் இறையாண்மையையும், இந்திய மக்களின் வாழ்க்கையையும் மீட்பதற்கான ஒரே வழி!

● செல்வம்

17-ஆம் பக்கத் தொடர்ச்சி

இவையெல்லாம் கிளிண்டன் வந்து போன பிறகு மித்னாபூர் மாவட்டப் போலீசார் நடத்திய அத்துமீறல் - அடாவடி அட்டூழியங்களுக்குச் சில சான்றுகள். இப்படி அரசியல் காரணங்களுக்காக, பழி வாங்கும் வெறியோடு மே.வங்கப் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் மேலாக உள்ளது. கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் ஏறத்தாழ 650 பேர் காம்டாபூர் மக்கள் கட்சியைச் சார்ந்தவர்கள். இவர்கள் மே.வங்கத்தின் வடபகுதியைத் தனி மாநிலமாக்கக் கோரி போராட்டம் நடத்தியதற்காகக் கைது செய்யப்பட்டவர்கள். இவர்களைப் பிரிவினைவாதிகள் என்கிறது வங்கத்தை ஆளும் இடது முன்னணி அரசு. எஞ்சிய அரசியல் கைதிகள் அனைவரும் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளையும், ஜனநாயக இயக்கங்களையும் சார்ந்தவர்கள். இவர்களைப் பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டுகிறது இடது முன்னணி அரசு.

இடதுசாரிகள் ஆளும் மே.வங்கத்திலா இப்படி நடக்கிறது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். போலீசு அத்துமீறல், அட்டூழியங்கள், பாலியல் வன்முறைகளுக்கு எதிராகப் பிற மாநிலங்களில் போராட்டம் நடத்தும் போலி கம்யூனிஸ்டுகள், தாங்கள் ஆளும் மே. வங்கத்தில் போலீசு பயங்கரவாதிகளுக்குக் கொம்பு சீவி விடுகிறார்கள் என்றால் நம்ப முடியுமா? நீங்கள் நம்பத்தான் வேண்டும்!

கடந்த 2000-வது ஆண்டு டிசம்பரில் ஜாதவபூர் போலீசு நிலைய் அடிக்கல் நாட்டு விழாவில் தலைமை உரையாற்றிய மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, ''நீங்கள் கிரிமினல்கள் என்று யாரைச் சந்தேகித்தாலும் கண்டதும் சுட்டுக் கொல்லுங்கள். மனித உரிமை பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று போலீசு கொலைவெறியாட்டத்துக்கு வெளிப்படையாகவே அங்கீகாரம் அளித்தார். இது ஏதோ மே.வங்க முதல்வர் உணர்ச்சி வசப்பட்டு உளறிய வார்த்தைகள் அல்ல. மே. வங்க 'இடது' முன்னணி அரசின் கொள்கையே, போலீசு பயங்கரவாத அட்டூழியங்களுக்கு ஆதரவாக நிற்பதுதான்!

இந்துவெறி ஆட்சியாளர்களின் பாசிச பயங்கரவாத பொடா சட்டத்தை எதிர்ப்பதாகச் சவடால் அடிக்கும் போலி கம்யூனிஸ்டுகள், தாங்கள் ஆளும் மே.வங்கத்தில் அதே பொடா சட்டத்தை வேறு பெயரில் கொண்டு வரத் துடிக்கிறார்கள் என்றால் அதை நம்ப முடியுமா? நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும்.

மாநிலத்தில் குற்றங்கள் பெருகிவிட்டதாகக் கூறிக்கொண்டு ''பொகா''(POCA) எனும் அமைப்பு ரீதியிலான குற்றத்தடுப்பு சட்டத்தைக் கொண்டு வர மே.வங்க அரசு தீர்மானித்துள்ளது. ''பொடோ'' சட்டத்தைப் போலவே, ஒருவரை ஆறு மாதங்களுக்கு விசாரணையின்றி சிறையிலடைக்க போலீசுக்கு வரம்பற்ற அதிகாரத்தை இச்சட்டம் வழங்கியுள்ளது. ''பொகா'' சட்டத்தின் கீழ் கைதானோரின் வழக்குகளை விசாரிக்க தனியாக சிறப்பு நீதிமன்றம் நிறுவப்படும். மரண தண்டனை உயர்ந்தபட்சதண்டனையாகவும், ஆண்டுக் கணக்கில் சிறையிடப்படுவது குறைந்தபட்சதண்டனையாகவும் இருக்கும். இருமுறைக்கு மேல் வன்முறையில் ஈடுபட்ட குற்றவாளிகள்தான் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவர். போலீசு ஆய்வாளர் குற்றவாளியைக் கைது செய்தபிறகு, போலீசு இயக்குனர் மட்டத்திலுள்ள உயர் அதிகாரி அதைப் பரிசீலித்து ''பொகா'' சட்டத்தின் கீழ் சிறையிடப் பரிந்துரைப்பார் - என்று மே.வங்க முதல்வர் அறிவித்துள்ளார். இடது முன்னணி கூட்டணிக் கட்சிகளின் கருத்து கேட்டு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் பேட்டியளித்துள்ளார்.

இருப்பினும், பா.ஜ.க. கூட்டணி அரசின் 'பொடோ' சட்டத்துக்கு எதிரான தங்களது போராட்டம் கேலிக் கூத்தாகி விடும் என்பதால், சி.பி.எம். கட்சியின் தலைவர்கள் தற்போதைக்கு ''பொகா'' சட்டத்தை நிறைவேற்ற வேண்டாம் என்று மே.வங்க கட்சித் தலைமைக்கு ஆலோசனை கூறியுள்ளனர். இதன்படி, தயார் நிலையிலுள்ள இப்பயங்கரவாதச் சட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ''டெல்லி நாடாளுமன்றத்தில் 'பொடோ' சட்டம் நிறைவேற்றப்படுகிறதோ இல்லையோ, எங்கள் மாநிலத்தில் அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 'பொகா' சட்டத்தை கட்டாயம் நிறைவேற்றியே தீருவேன்'' என்று சூளுரைக்கிறார், பாசிச ஜெயாவின் அரசியல் வாரிசாக வளர்ந்துவரும் 'தோழர்' புத்ததேவ் பட்டாச்சார்யா, நடப்பிலுள்ள சட்டங்களைக் கொண்டே ஆயிரக் கணக்கில் அரசியல் கைதிகளைச் சிறையிலடைத்து வதைக்கும் மே.வங்கப் போலீசாருக்கு, ''பொகா'' சட்டப்படி இன்னும் வரம்பற்ற அதிகாரத்தைக் கொடுத்தால் மாநிலத்தின் கதி என்னவாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

புரட்சி பேசும் 'இடது', வலது கம்யூனிஸ்டுகள் துரோகிகளாக மாறி அடக்குமுறையை ஏவுவார்கள் என்றால் அதை நம்ப முடியுமா? நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். மார்க்சிய - லெனினிய ஆசான்கள் இத்தகையோரைப் பற்றி ஏற்கனவே தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளார்கள். இவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல; சொல்லில் புரட்சியும் செயலில் அடக்குமுறையும் கொண்ட சமூக பாசிஸ்டுகள் என்பதுதான் அந்த வரையறுப்பு.

● குமார்


படிப்பகம்

www.padippakam.com

# அர்ஜெண்டினாவில் உணவுக் கலகம்:
# புரட்சிக்கு ஒரு முன்னறிவிப்பு!

**அர்ஜெண்டினா நாடெங்கும் கொழுந்து விட்டு எரிந்த உணவுக் கலகம், அந்நாட்டு அதிபர் பெர்னாண்டோ டி லா ருவாவைப் பதவியில் இருந்து துரத்தியடித்து விட்டது. அதிபர் பெர்னாண்டோ கலகக்காரர்களை கிரிமினல்கள் எனச் சாடினார்; முதலாளித்துவ பத்திரிகைகள் அவர்களை வழிப்பறிக் கொள்ளைக்காரர்களைப் போலச் சித்தரித்தன.**

**இந்தக் கலகத்தை ஒடுக்கித் தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அதிபர் அவசரகால ஆட்சியை அறிவித்து, இராணுவ வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டார். இரண்டே நாட்களில் 22 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்; பல நூறு பேர் படுகாயமடைந்தனர். ஆனாலும், கலகம் ஓயவில்லை. அதிபர் பெர்னாண்டோ பதவி விலகுவதாக அறிவித்த பின்தான் 'அமைதி' திரும்பியது.**

**இந்தக் கலகத்தை நடத்தியவர்கள் கிரிமினல்கள்தான் என்றால், அதிபர் பெர்னாண்டோ கலகம் தொடங்கிய இரண்டாவது நாளே பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஏன் ஓட வேண்டும்? இது, மறுகாலனியாதிக்கத்திற்கு எதிராக அர்ஜெண்டினா நாட்டு உழைக்கும் மக்கள் நடத்திய பேரெழுச்சி!**

**கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அந்நாட்டில் தாராளமயத்திற்கு எதிராகப் போராட்டம் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது. கடந்த டிசம்பர் 13-ஆம் தேதி அதிபரின் பொருளாதார பயங்கரவாதத்துக்கு எதிராக நாடு தழுவிய வேலை நிறுத்தம் நடைபெற்றது. அதனின் தொடர்ச்சியாகதான் டிசம்பர் 20,21 தேதிகளில் உணவுக் கலகம் நடநதது; அதிபரைப் பதவி விலகக் கோரி அவரின் மாளிகையும், நிதி மந்திரியின் வீடும், ஏனைய அரசு அலுவலகங்களும் உழைக்கும் மக்களால் முற்றுகையிடப்பட்டன.**

**அதிபரையும், அரசாங்கத்தையும் மாற்றுவதன் மூலம் அர்ஜெண்டினா நாட்டு மக்களை ஏமாற்றிவிடலாம் என ஏகாதிபத்தியவாதிகள் மனப்பால் குடிக்கின்றனர். அவர்களின் கனவு நீண்ட நாட்களுக்குத் தாக்குப் பிடிக்காது. ஏனென்றால், தாராளமயத்தால் வேலையிழந்த தொழிலாளர்களும், வேலையற்ற இளைஞர்களும், ஏனைய பிற உழைக்கும் மக்களும் அமைப்பு ரீதியாகத் திரண்டு போர்க் குணத்தோடு போராடுவதன் மூலம் புரட்சிகர வர்க்க உணர்வைப் பெற்று வருகிறார்கள். அவர்களின் போராட்ட முறையைச் சுருக்கமாக இங்கே சொல்லியிருக்கிறோம். தமிழக மக்கள் மீது ஜெயா கும்பல் பொருளாதாரத் தாக்குதலைத் தீவிரமாக நடத்தி வரும் இவ்வேளையில், அர்ஜெண்டினா நாட்டு மக்களின் போராட்டம் நமக்கு நிச்சயம் வழிகாட்டியாக அமையும்!**

நமது நாட்டில் வேலையற்ற இளைஞர்களை ''வெட்டிப் பயல்கள்'' என்று ஏளனமாகக் குறிப்பிடுவது வாடிக்கை. ஆனால் தென்னமெரிக்க நாடான அர்ஜெண்டினாவில் வேலையற்ற இளைஞர்களைப் ''போராளிகள்'' என்று மக்கள் போற்றுகிறார்கள். சாலையோரத்தில் வேலையற்றவர்கள் திரளுகிறார்கள். ஏகாதிபத்திய வல்லரசுகளின் மறுகாலனியாதிக்கக் கனவுகள் விபரீதமாகும் வகையில் சாலைகளை முற்றுகையிட்டு மறியல் போராட்டம் நடத்துகிறார்கள். வேலையற்றவர்களின் நெஞ்சிலே புரட்சிகர எண்ணங்கள் பற்றிப் படர்கிறது. அது நகர்ப்புற மக்களை அமைப்பு ரீதியாக அணிதிரட்டி ஆட்சியாளர்களை அஞ்சி நடுங்கச் செய்வதோடு, தென்னமெரிக்க கண்டம் எங்கும் போராட்டப் பெருந்தீயை கனன்று எரியச் செய்துள்ளது.

தென்னமெரிக்கக் கண்டத்தில் அமெரிக்காவின் பிராந்திய துணை வல்லரசாகவும் இராணுவப் படை பலமிக்க நாடாகவும் திகழும் அர்ஜெண்டினாவில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் உத்தரவுப்படி, ''கட்டுமான சீர்திருத்தம்'' என்ற பெயரில் தனியார்மயமும் தாராளமயமும் திணிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து கடந்த பத்தாண்டுகளாக உலகமயமாக்கல் கொள்கை கட்டாயமாக புகுத்தப்பட்டு அந்நாடு மறுகாலனியாக மாற்றப்பட்டு வருகிறது. மானியங்கள் குறைப்பு, ஆலைமூடல், ஆட்குறைப்பு, குடிநீர் - மின்சாரம் - பேருந்துக் கட்டண உயர்வு, விலையேற்றம், வேலையின்மை, வறுமை முதலானவையே இதன் விளைவுகளாயின.

1997-இல் ஏற்பட்ட நாணய மதிப்புச் சரிவினால் நெருக்கடியில் சிக்கிய ஆட்சியாளர்கள் உலக வங்கியிடம் பல கோடிகள் கடன் வாங்கினர். உலக வங்கியின் உத்தரவுப்படி சிக்கன சீரமைப்பு என்ற பெயரில் பெருமளவு தொழிலாளர் வேலையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். இன்று மொத்த தொழிலாளர்களில் 80%-க்கும் மேலானோர் அரைகுறையாக வேலை கிடைக்கும் தொழிலாளர்களாக அல்லது வேலையிழந்த - வேலையற்ற தொழிலாளர்களாக உள்ளனர். நீண்ட காலமாக இக்கொடுமைகளைச் சிறுகச் சிறுக அனுபவித்து வந்த தொழிலாளர்கள் அண்மைக் காலமாக பெருந்தாக்குதல் ஏவப்பட்டு பல இலட்சக்கணக்கானோர் வேலையிழந்து வாழ்விழந்த நிலையில், இவையெல்லாம் தமது தலைவிதி என்று முடங்கிக் கிடக்கவில்லை.

வேலையில்லா இளைஞர்களும் வேலையிழந்த தொழிலாளர்களும் பெருநகரங்களிலும் புறநகர் பகுதிகளிலும் சங்கங்களாகத் திரண்டெழுந்து கடந்த ஆகஸ்ட் மாதத்தில்

**போராட்டத்திற்குக் கிடைத்த முதற்கட்ட வெற்றி: அதிபர் மாளிகை அருகே வாகனங்களில் களிப்புடன் வலம் வரும் இளைஞர்கள். உள்ளே: போராட்டப் பெருந்தீயைக் கண்டு அஞ்சி பதவி விலகிய அமெரிக்கக் கைக்கூலி அதிபர் பெர்னாண்டேர்.**




படிப்பகம்

www.padippakam.com

நாட்டின் 300-க்கும் மேற்பட்ட சாலைகளை முற்றுகையிட்டு மறியல் போராட்டத்தில் இறங்கி நாட்டின் பொருளாதாரத்தையே நிலைகுலையச் செய்தனர். இதற்கு முந்தைய மாதங்களில் இத்தகைய மறியல் போராட்டங்கள் அடுத்தடுத்து நடந்துள்ளன. போலீசு - இராணுவப் படைகளின் துப்பாக்கிச் சூடும் படுகொலைகளும் கைதுகளும் தொடர்ந்த போதிலும் வேலையற்றோரின் போராட்டங்களை ஒடுக்க முடியவில்லை. மாறாக, ''வேலை கொடு! உணவு கொடு!'' என்ற மைய முழக்கத்துடன் நாடெங்கும் போராட்டம் பற்றிப் பரவுவதைக் கண்டு பீதியடைந்த ஆட்சியாளர்கள், ஒரு நகரத்துக்கு சில ஆயிரம் பேருக்கு தற்காலிக வேலை; வேலையில்லாதவர்களுக்கு நிவாரண உதவி என்ற திட்டத்துடன் இப்போது இறங்கி வந்துள்ளார்கள்.

பெருநகரங்களிலும் புறநகர் பகுதிகளிலும் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடி வந்த வேலையற்றோர், பின்னர் அமைப்பு ரீதியாக சங்கங்களைக் கட்டியமைத்து, நாடெங்கும் ஒருங்கிணைந்து சாலைமறியல் போராட்டங்களை சக்திமிக்க ஆயுதமாக மேற்கொள்கின்றனர். பள்ளி-கல்லூரி ஆசிரியர்களும் மருத்துவர்களும் அறிவு ஜீவிகளும் இப்போராட்டங்களில் பங்கேற்று வழிகாட்டி உதவுகின்றனர். வேலையற்றோர் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இப்போராட்டங்களில் ஊக்கமுடன் பங்கேற்று முன்னணியில் நிற்கின்றனர்.

ஒவ்வொரு நகரிலும் வேலையற்றோர் சங்க கூட்டங்களில் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு போராட்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. நெடுஞ்சாலை மறியல் போராட்டம் அறிவிக்கப்பட்டதும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு ஆயிரக்கணக்கில் ஆண்கள், பெண்கள், மாணவர்கள், சிறுவர்கள் அணிதிரள்கின்றனர். நெடுஞ்சாலைகளில் பல கி.மீ. தொலைவுக்கு முற்றுகையிட்டு மறியல் போராட்டத்தை நடத்தும் இவர்கள் சாலையோரத்திலே கொட்டகை அமைத்து சிற்றுண்டி அல்லது சூப் தயாரித்துக் கொண்டு தொடர்ந்து பல நாட்களுக்கு போராட்டத்தை தொடர்கின்றனர். போராட்டத்தை ஒடுக்க போலீசோ, இராணுவமோ வருவதாகத் தெரிந்ததும் சுற்றுப்புற பகுதிகளிலிருந்து மேலும் பல ஆயிரம் பேர் திரண்டு அவர்களை விரட்டியடிக்கின்றனர்.

அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்த முன்வந்தால், அப்பேச்சு வார்த்தைகளை நெடுஞ்சாலையிலேயே — போராடும் மக்கள் முன்னிலையிலேயே அவர்களின் பிரதிநிதிகள் நடத்துகின்றனர். இதனால் துரோகம் நடப்பதில்லை. அரசாங்கமும் இப்பிரதிநிதிகளை நைச்சியமாக விலைபேச முடிவதில்லை. அரசாங்கம் வேறுவழியின்றி ஒரு நகரத்திற்கு சில ஆயிரம் பேருக்கு மட்டும் தற்காலிக வேலைதர ஒப்புக் கொண்டதும், அதைக் கைப்பற்ற இரகசிய பேரங்களோ, போட்டா போட்டியோ, அராஜகமோ நடப்பதில்லை. தமது பகுதியில் எந்தெந்த குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன என்று பட்டியலிட்டு கிரமமான முறையில் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலையற்றோர் சங்கங்கள் அரசாங்கம் தரும் தற்காலிக வேலையைப் பகிர்ந்தளிக்கின்றன. மற்றவர்களுக்கு அடுத்த சுற்றில் சுழற்சி முறையில் கிடைக்கச் செய்கின்றன. இத்தகைய கூட்டுத்துவ செயல்பாட்டினால் அங்கு லஞ்சம், ஊழல், மோசடிகள் நடப்பதேயில்லை.

இத்தகைய சாலை மறியல் போராட்டங்கள் வெறுமனே தற்காலிக வேலை, நிவாரணம் பெறுவதோடு முடிந்த விடுவதில்லை. அரசாங்கம் திணித்துவரும் மக்கள் விரோத - நாட்டு விரோத கொள்கைகளுக்கு எதிராக - ஆலைமூடல், ஆட்குறைப்பு, கட்டண உயர்வுகளுக்கு எதிராகவும் விவசாயிகளுக்கு குறைந்த பட்சம் 100 பீசோ (ஏறத்தாழ ரூ.5000) நிவாரணம் வழங்கக் கோரியும், தனியார்மயமாக்கப்பட்ட வங்கிகள், ஆலைகளை மீண்டும் அரசுடமையாக்கக் கோரியும், நகரங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரியும், நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்படுத்தும் மறுகாலனிய கொள்கைகளை எதிர்த்தும் அடுத்தடுத்து போராட்டங்கள் தொடர்கின்றன. கடந்த செப்டம்பர் முதல் வாரத்தில் வேலையற்றோர் நடத்திய நாடு தழுவிய சாலை மறியல் போராட்டம் தென்னமெரிக்கக் கண்டத்தையே உலுக்கியது.

நிரந்தரத் தொழிலாளர்களிடம் மட்டும் சங்கம் கட்டி, சந்தா வசூல் செய்து பொறுக்கித் தின்னும் போலி கம்யூனிச - போலி சோசலிச தொழிற்சங்கத் தரகர்களை இவர்கள் வெறுத்து ஒதுக்குகின்றனர். நீண்ட காலமாக வேலையற்றோரைப் புறக்கணித்து வந்த இத்துரோக தொழிற் சங்கங்கள் முற்றாக அம்பலப்பட்டு தனிமைப்பட்டுக் கிடக்கின்றன. அதுபோலவே, மறுகாலனியாதிக்கக் கொள்கைகளைப் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுத்திவரும் ஓட்டுக் கட்சிகளும் அம்பலப்பட்டு வெறுத்தொதுக்கப்படுகின்றன. அதேசமயம், நகரங்களில் வேலையற்றோர் சங்கங்களே தீர்மானகரமான அரசியல் சக்தியாக முன்னேறி வருகின்றன. ''உலக வங்கியிடம் பெற்ற கடனை திருப்பிச் செலுத்தாதே! வட்டி கட்டாதே! அதன் உத்தரவுகளுக்கு பணிந்து நாட்டையும் மக்களையும் நாசமாக்காதே!'' என்று கடந்த செப்டம்பரில் வேலையற்றோர் நடத்திய போராட்டம் அர்ஜெண்டினாவை உலுக்கியதோடு டொமினிகன் குடியரசு, வெனிசூலா முதலான அண்டை நாடுகளிலும் இதேவழியில் போராட்டங்கள் மூண்டெழுந்து வருகின்றன.

தென்னமெரிக்கக் கண்டம் நகர்ப்புற வேலையற்றோரின் போராட்டங்களால் மட்டுமின்றி, கிராமப்புறங்களில் விவசாயிகளின் ஆயுதமேந்திய போராட்டங்களால் குலுங்குகிறது. மெக்சிகோவில் சபதிஸ்டா விவசாயிகள் இயக்கம் (EZLN), பிரேசிலில் கிராமப்புற நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களின் இயக்கம் (MST), பொலிவியாவில் கோகோ பயிரிடும் விவசாயிகளின் போராட்டக் கழகம், பாராகுவேயில் தேசிய விவசாயிகளின் கூட்டமைப்பு, கொலம்பியாவில் விவசாயிகளின் புரட்சிகர ஆயுதப் படைகள் (FARC, ELN), ஈக்வடாரில் செவ்விந்திய விவசாயிகள் இயக்கம் (CONAIE) என ஏற்கனவே விவசாய இயக்கங்கள் மறுகாலனியத் தாக்குதலை எதிர்த்துப் போராடி வருகின்றன.

அர்ஜெண்டினா மற்றும் தென்னமெரிக்க நாடுகளில் முன்னேறிவரும் போராட்டங்கள், தங்கள் துறைசார்ந்த கோரிக்கைகளுடன் வரம்பிட்டுக் கொள்ளாமல் நாட்டை அடிமையாக்கும் துரோகத்தனத்துக்கு எதிரான முன்னுதாரணமிக்க போராட்டங்களாக வளர்ந்து வருகின்றன. ஏழை நாடுகளது மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுக்குப் புது ரத்தம் பாய்ச்சி புதிய போராட்டப் பாதையையும் காட்டியுள்ளதோடு, நாளை வெடித்தெழப் போகும் புரட்சிக்கு முன்னறிவிப்பாகவும் திகழ்கின்றன.

● சுப்பு



**மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராக உழைக்கும் மக்களின் பேரெழுச்சி: உணவுக் கலகத்தில் இறங்கி, சூப்பர் அங்காடியிலிருந்து ''கிறிஸ்துமஸ் மரத்தை'' எடுத்துச் செல்லும் வேலையற்ற இளைஞன். உணவுக் கலகத்தில் இறங்கிய வேலையில்லா இளைஞனைப் பிடித்துத் தாக்கும் போலீசு.**



படிப்பகம்

# ''இது நம்ம ஆளு!''
## – தமிழின-தலித்திய பிழைப்புவாதிகளின் புதிய சித்தாந்தம்

சந்தர்ப்பவாதம் என்பது ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் மட்டுமே பின்பற்றும் நடைமுறை அல்ல; பிழைப்புவாதம் என்பது தொழிற்சங்கத் தரகர்கள் மட்டுமே கடைபிடிக்கும் கொள்கையுமல்ல. சந்தர்ப்ப வாதத்தில் பல வண்ணங்கள் உண்டு; பிழைப்புவாதத்தில் பல ரகங்களும் உண்டு. தமிழினவாதிகள், பெரியாரியவாதிகள், ''தலித்''தியவாதிகள் உள்ளிட்டு பல்வேறு அமைப்புகளும் கூட சந்தர்ப்பவாத அரசிய லையும் பிழைப்புவாத வாழ்வியலையும் இணைத்து ஒரு வீரிய ஓட்டுரக சித்தாந் தத்தை உருவாக்கி வளர்த்து வருகிறார்கள்.

நீண்ட காலமாகவே திராவிட இயக்கங் களும் தமிழினவாதிகளும் தமது சந்தர்ப்ப வாதத்தை மூடிமறைக்க நியாயப்படுத்தும் வாதங்களில் ஒன்றுதான் ''பார்ப்பன சூழ்ச்சி''. தேர்தல்களில் திராவிட பிழைப்பு வாத ஓட்டுக்கட்சிகள் தோல்வி அடைந்தால் அதற்குக் காரணம், பார்ப்பன சூழ்ச்சி-சதி! தி.மு.க. பிளவுபட்டு அ.தி.மு.க. உருவாகக் காரணம் பார்ப்பன சூழ்ச்சி என்று அரிய கண்டுபிடிப்புகளை அவிழ்த்துவிடத் தொடங்கினார்கள். பின்னர் ஆட்சிக் கலைப்பு, கட்சித் தாவல், பிளவுகள், பழிவாங்கும் நடவ டிக்கைகள் என ஒவ்வொன்றுக்கும் பார்ப்பன சூழ்ச்சியே காரணம் என்றார்கள். இப்படி எதற்கெடுத் தாலும் பார்ப்பன சூழ்ச்சி என்று சந்தர்ப் பவாதத்தை மூடி மறைக்கக் காரணம் காட்டப் போய், பார்ப்பன சூழ்ச்சி என்ற வாதமே இன்று கேலிக்குரியதாகி விட்டது. உண்மையில் பார்ப்பன ஆதிக்கமும் சூழ்ச்சிகளும் சதிகளும் மூடிமறைக்கப்பட்டு திசை திருப்பப்ப டுகிறது.

தமிழன் முன்னேறாததற்குக் காரணம் பார்ப்பன சூழ்ச்சி, பிற்பட்ட - தாழ்த்தப்பட்டோர் முன்னேறாததற்குக் காரணம் பார்ப்பன சூழ்ச்சி என்று தொடங்கி, தமிழின - சூத்திர ஓட்டுப் பொறுக்கிகள் செய்யும் அயோக்கியத்த னங்களை மூடிமறைக்கவும் இப்போது பார்ப்பன சதி - சூழ்ச்சியைத் துணைக்கு அழைத்துக் கொள்ளத் தொடங்கிவிட் டார்கள். இத்தகைய பிழைப்புவாதத் தையே இன்னும் ஆழமாக்கி தமிழ் சினிமா நடிகன், தமிழ் முதலாளி, சூத்திர ஆட்சியாளர்கள் செய்யும் பித்த லாட்டம், மோசடி - குற்றங்களை மூடி மறைக்கவும் நியாயம் கற்பிக்கவும் பார்ப்பன சதி என்று கூப்பாடு போடு வதும் வாடிக்கையாகி விட்டது.

பீகாரின் லல்லு பிரசாத் யாதவ் ஊர றிந்த ஊழல் பெருச்சாளி. ஊழல் குற்றங்க ளுக்காக அவரது ஆட்சியைப் பதவியிலி ருந்து நீக்க வேண்டுமென்றால், ''ஐயோ! பார்ப்பன சதி!'' என்று கூப்பாடு போட்டார்கள். பிற்பட்ட சாதிக்காரன் ஆள்வதைச் சகித்துக் கொள்ள முடியாமல், பார்ப்பனக் கும்பல் ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்கிறது. பார்ப்பனர்களோ, பார்ப்ப னர்களின் ஆசி பெற்றவர்களோ ஆளும் போது ஊழலே நடந்ததில்லையா? இப்போது சூத்திரன் ஆட்சியில்தான் திடீ ரென ஊழல் நடந்துவிட்டதா? என்று வாதங்களை அடுக்கி ஊழல் லல்லுவுக்கு முட்டுக் கொடுத்தார்கள்.

லாலு யாதவ் வருவாய்க்கு மேல் சொத்துச் சேர்த்தது உண்மையாக இருக் குமா? என்ற வாசகரின் கேள்விக்கு, ''பார்ப்பனர்களின் பூர்வீகக் கட்சி காங்கி ரசு; இன்றைய கட்சி - பி.ஜே.பி. பார்ப்பனர் களின் பூர்வீகத் தொழில் உஞ்சவிருத்தி - அதாவது பிச்சை எடுக்கிறது. இன்று காங்கி ரசு கட்சியின் சொத்து எவ்வளவு? காங்கிரசு பிரமுகர்களின் சொத்துக்கள் எவ்வளவு? பி.ஜே.பி.யின் சொத்து - பி.ஜே.பி. தலைவர் களின் சொத்துக் கணக்கு என்ன? (பெட்ரோல்) ராமர் பிள்ளையை மிரட்டுவ தானாலும், லாலு யாதவை ஜெயிலில் அடைப்பதானாலும் - அவர்கள் பார்ப்ப னர்களாய் இல்லை என்கிற ஒரு கார ணம்தான்!'' என்று விடையளித்தார் சங்க மித்ரா (சிந்தனையாளன், மே-2000)

அதேபோல, காமவெறி பிடித்த சாமியார் பிரேமானந்தாவின் அட்டூழி யங்கள் அம்பலமாகி கைது செய்யப்பட்ட போது, 'பிரேமானந்தா ஒரு சூத்திரன்; கறுப்புத் தோல் தமிழன்; எனவேதான் இந்த விவகாரத்தைப் பார்ப்பன பத்திரிகைகள் ஊதிப் பெருக்குகின்றன. இதேபோல பார்ப்பன சங்கராச்சாரி செய்திருந்தால் இப்படி வரிந்து கட்டிக் கொண்டு எழுது வார்களா? சங்கராச்சாரி குடகு மலைக்கு ஓடிப்போன மர்மம் என்ன என்பதை எழு துவார்களா? பார்ப்பன கும்பலின் ஆதரவு பெற்ற சாய்பாபாவின் அந்தரங்கம் பற்றியும் புட்டபர்த்தி கொலைகள் பற்றியும் இப்பத்திரிகைகள் அம்பலப்படுத்த வில்லையே ஏன்? எல்லாம் பார்ப்பன சூழ்ச்சி என்றார்கள்.

சங்கராச்சாரி, ரமண மகரிஷி - என்று பார்ப்பன சாமியார்களை ஆராய்ச்சி எதுவும் செய்யாத பார்ப்பனப் பத்திரிகைகள் - பங்காரு அடிகள், யாகவா முனிவர் என்றால் மட்டும் 'புலனாய்வு இதழியல்' நடத்து வது ஏன்? என்ற வாசகரின் கேள்விக்கு, ''பார்ப்பான் பத்தரிகை நடத்துவதே - தன்னை வளர்த்துக் கொள்ளவும் - சூத்திரர்களை ஒடுக்கவும்தான். முனிவர், ரிஷி, மகான், பாபா என்பது எல்லாம் பார்ப்பான் திருடவும், ஏமாற் றவும், பார்ப்பானுக்கு மட்டுமே 'காப்பிரைட்' போடப்பட்ட சமாச்சா ரங்கள். குறுக்கே ஒரு நாடாரும், ஒரு வன்னியரும் நானும் சாமிதான்னா - பரம்பரைப் புரட்டர்களான பார்ப்ப னர்கள் சும்மா விடுவார்களா?'' என்று விடையளித்தார் சங்கமித்ரா (சிந்தனை யாளன், சூன்-2000). கடைசியில் காம வெறி சாமியாரான பிரேமானந்தா குற்றவாளியா - இல்லையா என்ற விவ காரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, பார்ப்பன சாமியார்கள் மட்டும் யோக்கியமா? என்பதாக விவகா ரத்தைத் திசைதிருப்பித் தமிழினச் சேவை செய்ய இப்பிழைப்புவாதிகள் கிளம்பினார்கள்.

**பாரதிராஜாவின் துரோகத்துக்கு நியாயம்; தமிழின மோசடி சாமியார்களுக்கு வக்காலத்து! - சறுக்கலா? சந்தர்ப்பவாதமா?**



www.padippakam.com

ஏறத்தாழ, ஐந்தாண்டுகளுக்கு முன்பு தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்களின் சம்மேளனமாகிய ''ஃபெப்சி'' (FEFSI) சங்கத்தை உடைத்து, தமிழ்நாடு படைப்பாளிகள் - தொழிலாளர்கள் கூட்டமைப்பு (TANFICEF) என்ற கருங்காலி சங்கத்தை பாரதிராஜா தொடங்கியபோது, இது திரைப்பட இயக்குநர்களான படைப்பாளிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையிலான பிரச்சினை அல்ல; திரைப்பட முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையிலான பிரச்சினைதான் என்று இந்த விவகாரம் வீதிக்கு வந்தபோது, தமிழ்ச் சான்றோர்கள் 'பச்சைத் தமிழன்' பாரதிராஜாவை வெட்கமின்றி ஆதரித்து நின்றனர்.

பாரதிராஜாவின் ''தமிழ்ப் படைப்பாளிகள் சங்கம் ஒரு நல்ல தொடக்கம். எதிர்காலத்தில் திரை உலகில் தமிழ்த் தேசிய உணர்வு வளர இது வழிவகுக்கும்'' என்று 'திடீர்த் தமிழன்' பாரதிராஜாவின் தொழிலாளர் விரோத துரோகத்தனத்துக்கு வக்காலத்து வாங்கி ''நந்தன் வழி''யில் (15-31 ஆகஸ்ட்'97) சிறப்புக் கட்டுரை எழுதினார் சுபவீ. அது என்ன - பெப்சி, படைப்பாளி பிரச்சினை? என்ற வாசகர் கேள்விக்கு, ''பார்ப்பான் - பார்ப்பான் அல்லாதவன் பிரச்சினைதான்'' என்று விடையளித்தார், சங்கமித்ரா (சிந்தனையாளன், சூலை - 2000). இன்று தமிழ்ப் படைப்பாளிகளும், படைப்பாளிகள் சங்கமும் எங்கே இருக்கிறது என்பது இச்சான்றோர்களுக்கே வெளிச்சம்!

சில ஆண்டுகளுக்கு முன்பு ''மூலிகை பெட்ரோல் இராமர் பிள்ளை'' என்பவர் பரபரப்பாக பேசப்பட்டார். மூலிகைச் சாறு கலந்த தண்ணீரை சில வேதியியல் மாற்றங்களுக்குப் பிறகு எரிபொருளாக மாற்ற முடியும் என்று அவர் ஆரவாரமாக அறிவித்தார். தமிழினவாதிகளும் ''இதோ ஒரு இளந்தமிழ் அறிவியலாளர்; தமிழனின் புகழ் உலகெலாம் பரவப் போகிறது'' என்று ஏற்றிப் போற்றினர். அவரது மூலிகை பெட்ரோல் விற்கும் கடைகளும் சென்னையில் பெருகின. ''இது இராமர் பிள்ளையின் மூலிகை பெட்ரோலில் ஓடும் தானியங்கி'' என்று சில ஆட்டோக்களில் பெருமையுடன் விளம்பரம் செய்யப்பட்டது. ஆயினும் இந்திய தொழில்நுட்பக் கழக அறிவியலாளர்கள் முன்னிலையில், மூலிகையிலிருந்து எரிபொருளை அவரால் உருவாக்கிக் காட்ட முடியவில்லை. செய்முறையை விளக்கி அறிவியல் முறைப்படி நிரூபித்துக் காட்டவும் முடியவில்லை. உடனே தமிழினவாதிகள் இந்த விவகாரத்தை பார்ப்பன சூழ்ச்சி - சதி என்றனர். ''ஒரு சாதாரண விவசாயிக்கு விஞ்ஞான விளக்கமெல்லாம் தெரியாது. அவரிடம் குருட்டுத்தனமாக விளக்கம் கேட்டு தமிழனின் சாதனையை பார்ப்பன கும்பல் இருட்டடிப்பு செய்துவிடத் துடிக்கிறது. இது விஞ்ஞானம்; இது விஞ்ஞானக் கேடானது என்று தீர்மானிப்பவன் யார்? கதையிலே கூட, சூத்திரன் உயர்ந்துவிடக் கூடாது என்று கட்டை விரலைக் காணிக்கை கேட்ட கும்பலா? ஏகலைவன் ஏமாந்து கொண்டே இருக்க மாட்டான். இம்முறை துரோணாச்சாரியின் கட்டை விரல் கவனிக்கப்படும். இளம் விஞ்ஞானி இராமரின் புகழும் தமிழனின் அரிய கண்டுபிடிப்பும் உலகமெல்லாம் பரவுவதை பார்ப்பன சூழ்ச்சிகளால் தடுத்துவிட முடியாது''(நந்தன் வழி, 1-15 டிசம்பர், 97) என்று சூளுரைத்தார்கள்.

கடைசியில் மூலிகை பெட்ரோல் இராமர் பிள்ளை ஒரு மோசடிப் பேர்வழி என்று அம்பலமானது. கலப்பட பெட்ரோல் மாஃபியா கும்பல் அவரைத் தமது பிடியில் வைத்துக் கொண்டு, கலப்பட பெட்ரோல் விற்பனை மூலம் கொள்ளையடித்த விவகாரம் சந்தி சிரித்தது. தமிழினவாதிகளால் ஏற்றிப் போற்றப்பட்ட 'இளந்தமிழ் அறிவியலாளர்' இராமர் பிள்ளை இப்போது சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்.



**ஒருவனது யோக்கியதையைத் தீர்மானிக்க சாதியமும் இனமும்தான் சான்றோர்கள் தீர்மானிக்கும் அளவுகோலா? இராசகோபால், நாடார் சாதிக்காரர் என்பதால் நாடார் சங்கங்களும் அவர் கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டிக்கின்றனவே? சாதி சங்கங்களின் பார்வையும் தமிழ்ச் சான்றோர்களின் பார்வையும் ஒன்றுதானா?**

இவையெல்லாம், தமிழனின் பெருமை பார்ப்பன சூழ்ச்சியால் புறக்கணிக்கப்பட்டு விடக்கூடாதே, தமிழன் மீது வீண்பழி சுமத்தி பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டி விடக்கூடாதே என்ற கரிசனத்தில், பரவசப் போக்கில் எதிர்பாராமல் நடந்துவிட்ட சறுக்கல்கள் அல்ல. அப்படி சறுக்கியிருந்தால் விழுந்த பாதையை அவர்கள் திரும்பிப் பார்த்திருப்பார்கள்; ஆய்வைத் தொடங்கியிருப்பார்கள். ஆனால், சந்தர்ப்பவாதத்தையே நடைமுறையாகவும், பிழைப்புவாதத்தையே வாழ்வியலாகவும் கொண்டவர்களுக்கு இவையெல்லாம் தவறுகளாகத் தெரிவதில்லை. பார்ப்பன சதி என்று கூப்பாடு போட்டு இவற்றையே ஒரு சித்தாந்தமாக, புதியதொரு ஒழுக்கமாக நிலைநாட்டக் கிளம்பி விட்டார்கள்.

அந்த வகையில், அடுத்தவன் மனைவியை அபகரித்துக் கொள்வதையே வாடிக்கையாகக் கொண்ட காமாந்தகப் பேர்வழியான சரவணபவன் ஓட்டல் முதலாளி கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து, இதையும் பார்ப்பன சதி என்கிறது தமிழ்ச் சான்றோர்களின் ''நந்தன் வழி.'' (1-15 டிசம்பர், 2001) தனது நிறுவனத்தில் வேலை செய்த ஒரு பார்ப்பனரை மிரட்டி விரட்டியடித்து விட்டு அவரது மனைவியை அபகரித்து இணங்கச் செய்து இரண்டாம் தாரமாக்கிக் கொண்ட சரவண பவன் ஓட்டல் முதலாளி இராசகோபால், சோதிட நம்பிக்கையின்படி, தனது மகள் வயதையொத்த 'சூத்திர' ஜீவஜோதி என்ற இளம்பெண்ணை மூன்றாந்தாரமாக்கிக் கொள்ள முயற்சித்து, அப்பெண்ணின் காதல் கணவனை தனது அடியாட்கள் - கூலிப் படையினரைக் கொண்டு கொலை செய்த விவகாரம் இன்று தமிழகமெங்கும் நாறுகிறது.

இத்தனைக்கும் பிறகும் இது பார்ப்பன சதி என்று நியாயம் கற்பிக்க தமிழ்ச் சான்றோர்கள் கிளம்பியுள்ளார்கள். ''தமிழகத்தில் கன்னடத்து உடுப்பி பார்ப்பன ஓட்டல்களின் ஆதிக்கம் நிலவிய சூழலில், பிற்படுத்தி வைக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்த இராசகோபால் என்ற தமிழன் உணவுப் புரட்சியையே நடத்திக் காட்டினார்; பார்ப்பன ஆதிக்க சக்திகளால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சமயம் பார்த்து சதி வலை விரித்தார்கள்; இராசகோபால் மாட்டிக் கொண்டார்; சூத்திரன் உயர்ந்து வருவதை அவர்களால் எப்படி சகித்துக் கொள்ள முடியும்?'' என்று சூழ்ச்சியின் பின்னணிக்கு சூடேற்றுகிறது நந்தன் வழி. மேலும், பக்திப் பழமான சூத்திரன் திருமுருக கிருபானந்த வாரியாரை நெஞ்சிலே வைத்துப் பூசித்து வந்த இராசகோபால், தனது ஓட்டல்களில்


படிப்பகம்

வாரியாரின் ஆளுயர ஓவியத்தையும் மாட்டி வைத்திருந்தாராம். இதையும் ஆதிக்க சக்திகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லையாம்! நந்தன் வழி அரிய கண்டுபிடிப்புகளை அவிழ்த்து விடுகிறது.

பெண் பித்தனாக அலைந்த இராசகோபாலின் அட்டூழியங்களை பார்ப்பன தினமலர், ஜூனியர் விகடன் முதலான பத்திரிகைகள் தொடர்ந்து பரபரப்பாக அம்பலப்படுத்தத் தொடங்கியதும் அவை களங்கச் சேற்றை வாரியிறைப்பதாகச் சாடிய நந்தன் வழி, ''இந்த இதழ்களுக்கு என்ன அவ்வளவு கரிசனம்? அவாளின் நெஞ்சங்களில் வெறி அப்படிக் கொழுந்து விட்டு எரிகிறது என்றே அர்த்தம். ஆதிக்க சாதியைச் சேர்ந்த தொழிலதிபர்களின் மறு பக்கங்களை இவ்வாறெல்லாம் இந்த ஏடுகள் எழுதி விடுவதில்லையே! ஏன்? சூட்சுமம் புரிகிறதா?'' என்று தமிழனுக்கு உபதேசம் செய்கிறது. ''உழைப்பால் உயர்ந்த ஒரு தமிழனைச் சிறைச்சாலை, அவதூறு, காழ்ப்புணர்வு ஆகியவற்றால் ஒன்றும் செய்துவிட முடியாது என்பது மட்டும் நிச்சயம்'' என்று சூளுரைக்கிறது.

எல்லா முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் கருப்புப் பணத் திமிரில் தினவெடுத்து காமவெறிக் களியாட்டங்களில் ஈடுபடுகிறார்கள் என்றால், சூத்திரன் - தமிழன் ஒழுக்கத்தோடு வாழக் கூடாதா? சான்றோர்கள் தமிழனுக்கு ஒழுக்க நெறியை உபதேசிக்கக் கூடாதா? அதை விடுத்து ஆதிக்க சாதி தொழிலதிபர்கள் மட்டும் யோக்கியமா என்று சூத்திர முதலாளியின் அயோக்கியத்தனத்துக்கு நியாயம் கற்பிக்க முயலுவது ஏன்? ஒழுக்கக் கேட்டையும் அட்டூழியத்தையும் கொலையையும் மூடிமறைக்க பார்ப்பன சதி என்று கூப்பாடு போடுவது ஏன்? ஒருவனது யோக்கியதையைத் தீர்மானிக்க சாதியமும் இனமும்தான் சான்றோர்கள் தீர்மானிக்கும் அளவுகோலா? இராசகோபால் நாடார் சாதிக்காரர் என்பதால் நாடார் சங்கங்களும் அவர் கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டிக்கின்றனவே? சாதி சங்கங்களின் பார்வையும் தமிழ்ச் சான்றோர்களின் பார்வையும் ஒன்றுதானா?

சுருக்கமாகச் சொன்னால், எந்த விவகாரமானாலும் எந்த அயோக்கியத்தனமானாலும் தமிழன் - சூத்திரன் என்றால் ஆதரிப்போம்; இம்மோசடியை மூடிமறைக்க ''பார்ப்பன சதி'' என்று கூப்பாடு போடுவோம் என்பதே தமிழினப் பிழைப்புவாதிகளின் சித்தாந்தமாகி விட்டது. பார்ப்பன - பாசிச பாரதீய ஜனதாவுடன் கூட்டணி கட்டிக் கொண்ட கருணாநிதி, வைகோ, இராமதாசு முதலான துரோகிகளைத் துதிபாடியது போதாதென்று, இப்போது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் பினாமி முதல்வர் பன்னீரையும் இவர்கள் துதிபாடக் கிளம்பி விட்டார்கள். ஜெயா கும்பலின் கொத்தடிமை முதல்வ




**''பாசிச ஜெயா கும்பலின் கொத்தடிமை முதல்வரான 'சூத்திர' பன்னீர்செல்வம் டெல்லிக்குச் சென்று தமிழிலேயே பேசினாராம். அதைக் கண்டு புளகாங்கிதம் அடையும் தமிழ்ச் சான்றோர்கள் 'உறுதி கொண்ட நெஞ்சினாய் வா... வா!' என்று வரவேற்று, பன்னீரின் ஆட்சிக்குப் பக்கமேளம் வாசிக்கிறார்கள்.''**

ரான பன்னீர் செல்வம் டெல்லிக்குச் சென்ற போது, பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குத் தமிழிலேயே பதிலளித்தாராம். அதைக் கண்டு புளகாங்கிதம் அடையும் தமிழ்ச் சான்றோர்கள் ''உறுதி கொண்ட நெஞ்சினாய் வா.. வா..!'' என்று நந்தன் வழி (1-15 டிசம்பர், 01)யில் வரவேற்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்திருந்தால் கொத்தடிமை முதல்வர் ஆங்கிலத்தில் தான் பேசியிருப்பார்; ஆங்கிலம் தெரியாததால் தமிழில் பதிலளித்துள்ளார் என்பதைத் தவிர இதிலே ஒரு வெங்காயமும் இல்லை.

ஆனால், இதையே ஊதிப் பெருக்கி ஏதோ தமிழுக்கும் தமிழனுக்கும் மாபெரும் சேவை செய்து விட்டதைப் போல தமிழ்ச் சான்றோர்கள் வாழ்த்தி வரவேற்கிறார்கள். பார்ப்பன - பர்சிசப் படையணியில் இருந்தாலென்ன? அவர் தமிழிலே பேசி விட்டார்; அதைப் பாராட்டுகிறோம் என்று சித்தாந்த விளக்கமளிக்கிறார்கள். இதோடு விட்டார்களா? போயஸ் தோட்டத்துப் பொம்மையாக இருந்தாலும், பன்னீர் ஒரு தமிழர். பிற்பட்ட தேவர் சாதியைச் சேர்ந்த சூத்திரர். எனவே அவர் முதல்வர் பதவியில் தொடர்ந்து நீடிக்கக்கூடாது என்று பார்ப்பன ஜெயாவே சதி செய்கிறாராம். இவர் தற்காலிக முதல்வர்தான் என்று வெளிப்படையாக அறிவிக்கிறாராம். ''தனது கால்களின் கீழே ஒரு புழுவைப் போல் கிடக்க வேண்டிய சூத்திரனை முதலமைச்சராகப் பார்ப்பதை ஆசாரமுள்ள எந்த ஆரிய சீமாட்டியாலும் தாங்கிக் கொள்ள முடியாதுதான்'' (நந்தன் வழி 1-15 அக்டோபர் 01) என்று சூத்திர பன்னீர் செல்வத்தின் ஆட்சிக்குப் பக்கமேளம் வாசிக்கிறார்கள் இச்சான்றோர்கள்.

தமிழினப் பிழைப்புவாதிகள் மட்டுமல்ல; பெரியாரியம் - தலித்தியம் பேசும் பல வண்ண சந்தர்ப்பவாதிகளும் பிழைப்புவாதிகளும் இதே சித்தாந்தத்தை இன்னும் ஆழமாக்கிப் பரப்பி வருவதோடு இத்தகைய பிழைப்பு வாதத்தையே வாழ்வியலாக மாற்றிவிட்டார்கள்.

கடந்த ஆண்டு செப்டம்பரில் திருச்

## மேடைக்கு அமெரிக்க எதிர்ப்பு! தாகத்துக்கு ''கின்லே''

ஈரோட்டில் டிசம்பர் இரண்டாம் தேதி தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் ''அமெரிக்க ஆதிக்கமும், பயங்கரவாதமும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தியது. இதில் பெ.மணியரசன், தியாகு, பொழிலன், ஓ.எசு.அலாவுதீன் (த.மு.மு.க) உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

காலை முதல் அமர்வு தொடங்கியதும் பேச்சாளர்கள் குடிப்பதற்காக மூன்று ''கின்லே'' - தண்ணீர் 'பாட்டில்கள்' கொண்டு வரப்பட்டது. அரங்கில் இருந்த புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர் 'பாட்டிலை' எடுத்துச் சென்றவரிடம் இதுபற்றி விசாரிக்க, அவரோ, ''பேச்சாளர்கள் கேட்டதால் வாங்கி வந்தேன்'' என்று கூறிச் சென்றார். பின்னர் மதிய இடைவேளைக்குப் பிறகு நடைபெற்ற இரண்டாம் அமர்வுக்கும் மூன்று 'கின்லே பாட்டில்கள்' வந்தன. இம்முறை தண்ணீர் பாட்டிலைக் கொண்டு வந்தவர் பு.மா.இ.மு. தோழரைப் பார்த்ததும் பாட்டிலின் 'லேபிளை' கிழித்துவிட்டு உள்ளே கொண்டு சென்றார்.

அமெரிக்க பண்பாட்டின் ஆதிக்கக் கருவியான கோக் நிறுவனத்தின் ''கின்லே''வைக் குடித்துக் கொண்டே அமெரிக்காவின் பயங்கரவாதத்தை எதிர்ப்பதாக் கூறுவது அப்பட்டமான மோசடி. மலையாளிகள் ஆதிக்கம், கன்னடர் ஊடுருவல் பற்றியெல்லாம் துருவித் துருவி பார்க்கும் தமிழ்த் தேசியவாதிகளின் யோக்கியதை எப்படி இருக்கிறது பாருங்கள்!

தகவல்:
பு.மா.இ.மு., ஈரோடு.



படிப்பகம்

www.padippakam.com

சியில் நடந்த நிகழ்ச்சி இது. திருச்சி மாநக ராட்சியின் 15-ஆவது வார்டு கவுன்சிலர் தி.மு.க. மனோகரன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரின் பகற்கொள்ளை - பொதுச் சொத்தைத் திருடும் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தி புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி ஆர்ப்பாட்டம் நடத்தியது. ஆத்திரமடைந்த மனோகரன் கும்பல் பு.மா.இ.மு. சுவரொட்டி - தட்டிகளைக் கிழித்துக் கொட்டமடித்தது. மனோகரனின் அடியாளான மூக்கன் மற்றும் கூட்டாளிகள், பு.மா.இ.மு.வின் சுவரெழுத்துகள் மீது மனோகரன் நடத்தவிருந்த தி.மு.க. பொதுக் கூட்டச் சுவரொட்டிகளை ஒட்டியபோது, இதை பு.மா.இ.மு.வினர் தடுத்து அவர்களை விரட்டியடித்தனர். சிறிது நேரத்தில், இந்த விவகாரத்துக்கு சம்பந்தமே இல்லாத விடுதலைச் சிறுத்தைகளின் மாவட்ட அமைப்பாளரான பிரபாகரன் தலைமையில் வந்த ரவுடிக் கும்பல், பு.மா.இ.மு. தோழர்களைத் தாக்கி வெறியாட்டம் போட்டது. ஒரு தோழரது சைக்கிள் கடையைச் சூறையாடி கையில் கிடைத்ததை அள்ளிச் சென்றது. ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று பு.மா.இ.மு.வினர் கேட்ட போது, ''மூக்கன் எங்கள் சாதிக்காரர்; எங்கள் சாதிக்காரரிடம் தகராறு செய்தால் இப்படித்தான் பதிலடி கொடுப்போம்!'' என்று சிறுத்தைகள் நியாயவாதம் பேசினர். இதிலே கொடுமை என்னவென்றால் ரவுடி சிறுத்தைகளால் தாக்கப்பட்ட பு.மா.இ.மு. தோழர்களும் பிறப்பால் தாழ்த்தப்பட்டவர்கள்தான்! என்ன செய்வது? எங்கள் சாதிக்காரன் என்ற பெயரில் ரவுடித்தனத்துக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, அதை எதிர்க்கும் அதே சாதி இளைஞர்களையே தாக்குமளவுக்கு தலித்திய பிழைப்புவாதம் புரையோடிப் போயுள்ளது.

இதேபோல, சென்னை - சேத்துப்பட்டு பகுதியில் ''தாதா''வாக வளர்ந்து வந்த தங்கையா என்ற சமூக விரோதிக்கு எதிராக மக்களைத் திரட்டி ம.க.இ.க. போராடிய போது, ''அவர் ஒரு தலித்; புரட்சி பாரதம் கட்சியின் பிரமுகர்; ஒரு தலித்துக்கு எதிராகப் போராட்டம் நடத்துவது நியாயமானதல்ல; மேலும், மற்ற ஆதிக்க சாதி தாதாக்களை எதிர்க்காமல், ஒரு தலித் தாதாவை ம.க.இ.க.வினர் எதிர்ப்பதன் சூட்சுமம் என்ன?'' என்றெல்லாம் தலித்திய பிழைப்புவாதிகள் எதிர்வாதத்தில் இறங்கினர்.

இவையெல்லாம் வகை மாதிரிக்குச் சில உதாரணங்கள்தான். இன்னும் தமிழகமெங்கும் பல்வேறு பகுதிகளில் தலித்திய பிழைப்புவாதிகளால் உழைக்கும் மக்களுக்கும் புரட்சிகர அமைப்புகளுக்கும் ஏற்பட்ட பாதிப்புகளைப் பட்டியல் போட பக்கங்கள் போதாது.

இத்தகைய சந்தர்ப்பவாத நடைமுறையும் பிழைப்புவாத வாழ்வியலும் யார் எதிரி, யார் நண்பன், யார் துரோகி என்பதைக் கூட இனங்காண முடியாதபடி பித்தலாட்டம் செய்யவும் பிழைப்புவாதிகளுக்குச் சாதகமாக உள்ளது. 2000-வது ஆண்டு டிசம்பரில் நடந்த அஞ்சல்துறை தொழிலாளர்களின் 13 நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது, தாழ்த்தப்பட்ட - பழங்குடியின தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் இவ்வேலை நிறுத்தத்தை எதிர்த்து போராட்டத்திலிருந்து விலகி நின்றனர். காரணம், பா.ஜ.க. தலைமையிலான மைய அரசில் அன்று தகவல் தொடர்புத் துறை அமைச்சராக இருந்த ராம்விலாஸ் பஸ்வான் ஒரு ''தலித்''. எனவே ''தலித்'' அமைச்சருக்கு எதிராக ''தலித்''துகள் போராடக் கூடாது என்று தீர்மானம் போட்டனர்.

அஞ்சல்துறை தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளுள் ஒன்று. துறை சாரா முகவர்கள் எனப்படும் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் வகையில் அஞ்சல் துறை ஊழியர்களாக்குவதாகும். அப்படிச் செய்தால் பலனடையப் போவது பெரும் எண்ணிக்கையில் துறை சாரா முகவர்களாக உள்ள தாழ்த்தப்பட்ட சாதியினர்தான். ஆனால், பஸ்வான் இக்கோரிக்கையை ஏற்க மறுத்து, தனது சாதிக்கார தொழிலாளர்களின் முதுகிலே குத்தினார்.

ஆனாலும், மைய அரசில் ''தலித்'' ஒருவர் அமைச்சராக இருப்பது ''தலித்''துகளுக்குப் பெருமை என்று பஸ்வான் புகழ் பாடுவதும், அதேசமயம் பா.ஜ.க.வின் இந்துவெறியை எதிர்ப்பதாக மாய்மாலம் செய்வதுமாக தன்னார்வக் குழுக்கள் தரும் எச்சில் காசில் மஞ்சள் குளிக்கிறது, ''தலித் முரசு''.

இதேபோல, அரசுத் தலைவராக ''தலித்'' நாராயணன் சர்வகட்சியினராலும் தேர்வு செய்யப்பட்டதும், ''தலித்திய'' பிழைப்புவாதிகள் ஆனந்தக் கூத்தாடினர். அவர் எந்த வர்க்கங்களுக்குச் சேவை செய்ய அந்தப் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார் என்பதையே மூடி மறைத்தனர். இன்று அரசுத் தலைவர் நாராயணன் ''தலித்''துகள் உள்ளிட்டு உழைக்கும் மக்கள் அனைவரின் மீதும் ஏவப்படும் பாசிச பயங்கரவாத ''பொடோ'' அவசர சட்டத்துக்கு அங்கீகாரம் அளித்துள்ளார். ''பொடோ''வை எதிர்க்கும் ''தலித்திய''வாதிகள், ''தலித்'' நாராயணனின் துரோகத்தைப் பற்றி வாயே திறப்பதில்லை.

இப்படி வர்க்கக் கண்ணோட்டமின்றி தமிழன், சூத்திரன், ''தலித்'' என்ற பெயரால் எல்லா அயோக்கியத்தனங்களையும் துரோகத்தனங்களையும் ஆதரித்து நிற்பதும், பார்ப்பன சூழ்ச்சி - சதி என்று கூப்பாடு போட்டு இவற்றை மூடிமறைத்து நியாயம் கற்பிப்பதும் பிழைப்புவாதிகளின் கைவந்த கலையாகி விட்டது. தமிழனைக் காட்டி தமிழனை ஏய்ப்பதும், ''தலித்''தைக் காட்டி ''தலித்''தை மோசடி செய்வதுமான இப்பிழைப்புவாத துரோகத்தனத்துக்கு எப்போது முடிவு கட்டப் போகிறோம்?

● தமிழ்மணி

# ''கங்காணி''யின் களவாணித்தனம்

''**பீ**ப்பிள்ஸ் வாட்ச்'' என்ற மனித உரிமைக்கான தன்னார்வ அமைப்பு மதுரையிலிருந்து ''மனித உரிமைக் கங்காணி'' என்ற பத்திரிகையை வெளியிட்டு வருகிறது. ஹென்றி டிபேன், சேது, தேவா ஆகியோரை ஆசிரியர் குழுவாகக் கொண்டுள்ள இப்பத்திரிகையின் நவம்பர் மாத இதழில் ''ஆப்கான் மீது அமெரிக்காவின் போர்''என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. புதிய ஜனநாயகம் அக்டோபர் 1-15 இதழில் ''உலகின் கொடிய பயங்கரவாதி அமெரிக்காவே!'' என்ற தலைப்பில் வெளிவந்த அமெரிக்க புரட்சி கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் மறுபதிப்புதான் இது. இந்த அறிக்கையை தமிழில் முதன்முதலாக வெளியிட்ட புதிய ஜனநாயகம் பத்திரிகையை மறைத்துவிட்டு, தலைப்பை மாற்றி ''கங்காணி'' வெளியிட்டுள்ளது. புதிய ஜனநாயகம் இதழில் வெளியான இந்த அறிக்கையின் முன்னுரையிலும் இறுதியிலும் **புரட்சி கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை** என்று தெளிவாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ''கங்காணி''யோ, கம்யூனிஸ்ட் கட்சியை இருட்டடிப்பு செய்துவிட்டு **மக்கள் இயக்கங்கள் வெளியிட்டுள்ள அறிக்கை** என்று திரித்துப் புரட்டியுள்ளது. மனித உரிமைகளைக் கண்காணிக்கப் புறப்பட்டுள்ள ''கங்காணி'', கடுகளவு நேர்மையோ, குறைந்தபட்ச நாகரீகமோ கூட இல்லாமல் இப்புரட்டலை அறிந்தே செய்துள்ளது.

''கங்காணி''க்கு அறிக்கையிலுள்ள கருத்து உடன்பாடாக இருக்கிறது; ஆனால், அறிக்கையை வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி கசக்கிறது. ஏனென்றால், ''பீப்பிள்ஸ் வாட்ச்''சின் புரவலர்களான ஏகாதிபத்தியவாதிகளுக்கு கம்யூனிசம் எதிரி. எனவே, பெயரை மாற்றிவிட்டு அறிக்கையை வெளியிட்டு மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலுமாகக் காட்டிக் கொள்கிறது. ஏகாதிபத்திய வாதிகளின் எச்சில் காசில் பிழைப்பு நடத்தும் தன்னார்வ அமைப்புகளிடம் நேர்மையையும் நாணயத்தையும் எப்படி எதிர்பார்க்க முடியும்?



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தமிழக அரசின் அடியாள் வேலை

**வா**ல்பாறையிலுள்ள தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வரும் போனசு போராட்டத்தை உடைப்பதற்காக புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமியைக் கைது செய்த தமிழக அரசு, அதையடுத்து தோட்ட நிர்வாகத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, மோசடித்தனமான, ஒருதலைப்பட்சமான போனசு உடன்படிக்கையினை அறிவித்திருக்கிறது. இப்போனசு உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளாத தொழிலாளர்களின் வீடு தேடிச் செல்லும் போலீசும், வருவாய்த்துறை அதிகாரிகளும், ''போனசு உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு வேலைக்குத் திரும்பு; இல்லையென்றால், ஏதாவது ஒரு வழக்குப் போட்டு உள்ளே தள்ளி விடுவோம்'' என மிரட்டி வருகிறார்கள். தமிழக அரசின் இந்த அடியாள் வேலையை எதிர்த்து கிருஷ்ணசாமி தேசிய மனித உரிமை கமிசனுக்குப் புகார் கொடுக்கவே, இப்பொழுது இத்தொழிலாளர் விரோத மனித உரிமை மீறல் பற்றி மாநில மனித உரிமை அமைப்புகள் விசாரணை நடத்தி வருகின்றன.

## நவீன நாஜிக்களுக்குப் பாதுகாப்பு ஜெர்மன் அரசின் ஈனச் செயல்



**இ**ட்லரின் நாஜி ஜெர்மன் இராணுவம் நடத்திய யூத இனப் படுகொலைகளை அம்பலப்படுத்தும் ஒரு புகைப்படக் கண்காட்சி ஜெர்மனியிலுள்ள பெர்லின் நகரில் சமீபத்தில் நடத்தப்பட்டது. ஜெர்மனியில் இயங்கி வரும் நவீன நாஜி அமைப்புகள் இக்கண்காட்சிக்கு எதிராக ஊர்வலம் நடத்தின. நாஜிக்களின் ஊர்வலம் நடந்த அதேநாளில், பெர்லின் நகரைச் சேர்ந்த பல்வேறு இடதுசாரி அமைப்புகள் ஒன்றிணைந்து, ''நாஜிக்களே, வெளியே போ!'' எனமுழக்கமிட்டபடியே, நாஜிக்களின் ஊர்வலத்திற்கு எதிராக ஆர்ப்பாட்ட பேரணியை நடத்தினார்கள். சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பதற்காகக் குவிக்கப்பட்ட ஜெர்மன் போலீசு, இடதுசாரிகள் நடத்திய ஊர்வலத்தைத் தண்ணீரைப் பீச்சியடித்து விட்டு கலைத்துவிட்டு, நவீன நாஜிக்கள் எவ்வித இடையூறும் இன்றி ஊர்வலத்தை நடத்திக் கொள்ள பாதுகாப்பு கொடுத்தது.

## பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் பகற் கொள்ளை

''**எ**ல்லா பொருட்களின் விலையையும் சந்தைதான் தீர்மானிக்க வேண்டும்'' என்பதுதான் தாராளமயத்தை ஆதரிப்பவர்களின் வாதம். இந்த நியாயப்படி பார்த்தால், தற்பொழுது பெட்ரோல், டீசலின் விலை பாதியாகக் குறைந்திருக்க வேண்டும். ஏனென்றால், கடந்த செப்டம்பர் மாதத்தில் 32 அமெரிக்க டாலர்களாக இருந்த ஒரு பாரல் கச்சா எண்ணெயின் விலை, தற்பொழுது 17.3 அமெரிக்க டாலர்கள்தான். கச்சா எண்ணெயின் விலை அனைத்துலகச் சந்தையில் சரிபாதியாகக் குறைந்த பிறகும்கூட, பா.ஜ.க. கூட்டணி ஆட்சி உள்நாட்டில் பெட்ரோல், டீசலின் விலையில் ஒரு பைசாகூடக் குறைக்கவில்லை. இந்தப் பகற்கொள்ளையின் மூலம் மட்டும் மைய அரசுக்கு இந்த ஆண்டு கிட்டதட்ட 10,000 கோடி ரூபாய் உபரி இலாபம் கிடைக்கும் என மதிப்பிடப்படுகிறது. இதைத் தட்டிக் கேட்கத் துப்பில்லாத ஜெயா கும்பலோ, தன் பங்குக்கு பேருந்து கட்டணத்தையும், மண்ணெண்ணெயின் விலையையும் உயர்த்தி, கொள்ளையில் கூட்டணி கட்டிக் கொண்டு விட்டது!

## தாராளமயம் என்றால் ஏகபோகக் கொள்ளை

**ஜெ**ர்மனியைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனமான ''பாயர்'', ஆந்த்ராக்ஸ் நோய்க்குப் பயன்படுத்தப்படும் சிப்ரோஃப்ளாக்ஸின் என்ற மாத்திரையை, அமெரிக்காவில் இருநூற்று ஐம்பது ரூபாய்க்கு விற்கிறது. இதே மாத்திரையைத் தயாரித்து ஐம்பது ரூபாய்க்குள் விற்பதற்கு மூன்று அமெரிக்க நிறுவனங்கள் முன்வந்தன. ''பார் லேபரெட்டரீஸ்'' என்ற நிறுவனம் மாத்திரையைத் தயாரித்து விற்க அமெரிக்க அரசின் அனுமதியையும் பெற்றிருந்தது. இதனால் அரண்டு போன பாயர், இம்மூன்று நிறுவனங்களுக்கும் 1000 கோடி ரூபாய் இலஞ்சம் கொடுத்து, அவை மாத்திரை தயாரித்து விற்பதைத் தடுத்துவிட்டது. குறைந்த விலையில் அமெரிக்க மக்களுக்கு மருந்து கிடைப்பதை பாயர் சதி செய்து தடுத்துவிட்டதென குற்றஞ்சுமத்தி, பாயரின் மீது அமெரிக்காவின் நுகர்வோர் அமைப்புகள் கிரிமினல் வழக்குகள் தொடுத்துள்ளன. தாராளமயம் என்றால் போட்டி, மலிவு விலை என்று சரடு திரிக்கிறார்கள். ஆனால், நடப்பதோ பன்னாட்டு நிறுவனங்களின் ஏகபோகக் கொள்ளை!

## ஜனநாயகக் கேலிக் கூத்து

**கு**ஜராத் மாநிலத்தில் சமீபத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடந்தபொழுது, ''தேர்தல் இல்லாமல் பஞ்சாயத்துத் தலைவரை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் கிராமங்களுக்கு, அக்கிராமங்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப, ஒரு லட்ச ரூபாய் வரை நிதியுதவி அளிக்கப்படும்'' என அம்மாநில அரசு அறிவித்தது. இந்த நவீன கட்டைப் பஞ்சாயத்திற்கு ''நல்லிணக்கம்'' எனப் பெயரும் சூட்டப்பட்டது. இதன்படி, அம்மாநிலத்தைச் சேர்ந்த 1800 கிராமங்களில் தேர்தலே நடைபெறாமல், பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிராமப்புறங்களில் தேர்தல் நடந்தால் கூட, சாதி ஆதிக்க சக்திகள் வெற்றி பெறுவதுதான் வாடிக்கை. சட்ட விரோதமாக நடந்து வந்த இந்த ஜனநாயகக் கேலிக் கூத்தை, இந்து மதவெறியர்கள் சட்டபூர்வமாக்கி விட்டனர்.

## சமூகத் திருமணமா? காட்டுமிராண்டித்தனமா?

**க**ர்நாடக மாநில அரசு சமீபத்தில் ''அனைத்து மத சமூகத் திருமணங்கள் - 2001'' என்ற நிகழ்ச்சியை பதாமி என்ற ஊரில் நடத்தியது. வெளிப்பார்வைக்கு இது ஏதோ மத - சமூக நல்லிணக்கத் திருமண நிகழ்ச்சியாக விளம்பரப்படுத்தப்பட்டாலும் அன்று பதாமியில் நடந்தது குழந்தைத் திருமணமாகும். அன்று கிட்டதட்ட 20 குழந்தை தம்பதிகளுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. மோசடித்தனமான முறையில், சட்ட விரோதமாக நடந்த இத்திருமணத்திற்கு, கர்நாடக மாநில முதல்வர் கிருஷ்ணா தலைமையில் கர்நாடக மாநில அமைச்சரவையே திரண்டு வந்திருந்தது. சட்ட விரோதம் எனத் தடை செய்யப்பட்டிருக்கும் குழந்தைத் திருமணத்தை ஒரு மாநில அரசு முன்னின்று நடத்துகிறதென்றால், அது எப்பேர்ப்பட்ட சமூக விரோத அரசாக இருக்க முடியும்? இது மட்டுமின்றி, சர்வதேச மனித உரிமை நாளன்று இத்திருமணத்தை கர்நாடக அரசு நடத்தி வைத்து, தனது வக்கிர புத்தியையும் வெளிக்காட்டி கொண்டது.

Published and Owned by R. SHANMUGA RAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில் கொண்டு வரப்பட்டுள்ள பாசிசச் சட்டமான ''பொடோ'', நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுமுன்னரே தனது கோரத் தாண்டவத்தைத் தொடங்கிவிட்டது. இந்தப் படத்தில் சீல் வைத்து இழுத்து மூடப்பட்டிருக்கும் வீட்டை, ஜம்மு - காசுமீர் மாநில அரசு ''பொடோ'' சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்திருக்கிறது. இந்த வீட்டில் சில முசுலீம் தீவிரவாதிகள் தங்கியிருந்ததாக போலீசு மூளையில் முளைத்த சந்தேகத்தை மட்டுமே ஆதாரமாகக் காட்டி, இந்த வீடு பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. ஒண்ட இருந்த ஒரு வீட்டையும் ''பொடோ''விற்குப் பறிகொடுத்து விட்டுக் கதறியழும் இந்தப் பெண்களை எதைக் கூறி ஆறுதல்படுத்த முடியும்?

''பொடோ'' ஜம்மு-காசுமீரில் மட்டுமல்லாது, உ.பி. தமிழகம் உள்ளிட்ட எட்டு மாநிலங்களில், நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமலேயே நடைமுறைக்கு வந்துவிட்டது. விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராடியவர்கள் மீது கூட தேசிய பாதுகாப்புச் சட்டம் பாயும் என மிரட்டிய ஜெயா கும்பல், ''பொடோ'' சட்டத்தை 'நேர்மையாக'ப் பயன்படுத்தும் என்பதற்கு எந்தவித அடிப்படையும் கிடையாது. இந்தப் பெண்களுக்கு நேர்ந்த கதி நாளை நமக்கும் நேரலாம். ''பொடோ'' இந்த வேகத்தில் பாய்ந்தால், 70,000 அப்பாவிகளைப் பதம் பார்த்த ''தடா''வைக் கூடத் தூக்கிச் சாப்பிட்டு விடும்!

இதோ, இந்தப் படத்தில் துப்பாக்கிச் சுடும் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் இந்த இளைஞர்கள் அனைவரும் பஜ்ரங்தள் எனும் இந்து மதவெறி அமைப்பைச் சேர்ந்த குண்டர்கள். பஜ்ரங்தள் ஏதோ விளையாட்டிற்காக இந்த துப்பாக்கிச் சுடும் பயிற்சியைத் தனது தொண்டர்களுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. இந்து மதவெறி பாசிசத்தையும், மறுகாலனியாதிக்கத்தையும் எதிர்க்கும் கம்யூனிசப் புரட்சியாளர்கள், ஜனநாயக அமைப்புகள், புரட்சிகரத் தொழிலாளர்கள் மற்றும் சிறுபான்மையினரான முசுலீம்கள், கிறித்தவர்கள் மீது பாசிசத் தாக்குதல் தொடுப்பதற்காகவே, ஆர்.எஸ்.எஸ். தனது தொண்டர்களை ஆயுதப் பயிற்சி பெற்ற எதிர்ப் புரட்சிப் படையாகத் திட்டமிட்ட முறையில் வளர்த்து வருகிறது. அப்படியா என்று சந்தேகிப்பவர்கள், பாபர் மசூதியை இடிப்பதற்கு முன் ஆர்.எஸ்.எஸ். நடத்திய பயிற்சியை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

பொட்டு வெடிச் சத்தம் கேட்டால் கூட பயங்கரவாதப் பீதியூட்டி, போலீசைத் தூண்டிவிடும் 'தேசிய'ப் பத்திரிகைகள், பஜ்ரங் தள் உ.பி. தலைநகர் லக்னோவில் நடத்திய இந்தச் சட்ட விரோத ஆயுதப் பயிற்சியைக் கண்டித்துக்கூட எழுதவில்லை. மக்களின் வாழ்வுரிமைக்காக அரசை எதிர்த்து ஊர்வலம் நடத்தும் பொழுது, சட்டம் - ஒழுங்கைக் காப்பது என்ற போர்வையில், ஊர்வலத்தில் சிறிய மஞ்சள் பையைக்கூட யாரும் தூக்கிக் கொண்டு வரக் கூடாது எனக் கட்டளையிடுகிறது, நீதிமன்றம். ஆனால், இந்து மதவெறியர்கள் ஒவ்வொரு ஊராக நடத்தி வரும் இந்தப் பயங்கரவாத ஆயுதப் பயிற்சியை எந்தவொரு நீதிமன்றமும் கண்டு கொள்வதில்லை; இதற்காக அவர்கள் மீது எந்தவொரு கிரிமினல் சட்டமும் பாய்ந்ததில்லை. இந்து மதவெறி பயங்கரவாதத்தின் மூலம் ஆயிரக் கணக்கான அப்பாவிகளைக் கொன்று குவித்த இந்து மதவெறி பாசிஸ்டுகளின் மீது காங்கிரசின் ''தடா'' சட்டமே பாய்ந்ததில்லை எனும் பொழுது, பா.ஜ.க. கூட்டணி ஆட்சி கொண்டு வரும் ''பொடோ'' பாய்ந்து விடுமா என்ன?



போலீசின் சந்தேகத்தையே குற்றமாக ஊதிப் பெருக்கி, அப்பாவி முசுலீம்களின் மீதும், உழைக்கும் மக்களின் மீதும் அரசு பயங்கரவாதம் ஏவிவிடப்படும் அடாவடித்தனம் ஒருபுறம்; இந்து மத வெறிக் கலவரங்களின் மூலம் ஆயிரக் கணக்கான அப்பாவி மக்களை இந்து மத வெறி பாசிஸ்டுகள் கொன்று குவித்த பின்னரும், அவர்கள் ''தேச பக்தர்''களாக வலம் வரும் அயோக்கியத்தனம் மறுபுறம். இதற்கு நாம் முடிவு காணுவது எப்போது?